விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 13 வெள்ளிக்கிழமை (29.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 345

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## என் உரையை விமர்சிக்க எவருக்கும் உரிமையில்லை

### சிறப்புரிமையை காட்டுகிறார் சிறிதரன்



"மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியாகிய எனக்கு பாராளு மன்றில் உரையாற்றுவதற்கான சிறப்புரிமை உண்டு. எனது பாராளுமன்ற சிறப்புரிமையை கேள்வி கேட்பதற்கு சபாநாயகருக் கும் மட்டுமே உரிமை உண்டு. வேறு எவருக்கும் நான் ஆற்றும் உரைகள் குறித்து வெளி யில் இருந்து கேள்வி

20-ம் பக்கம் பார்க்க

## பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விநியோகம்

### மாத்திரைகளை கைப்பற்றியது சுகாதாரக்குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பாடசாலை மாண வர்களிற்கு விநியோகிக்கப்பட்ட போதைப் பொருள் மாத்திரையி னையும் விற்பனை நிலையத்தை யும் யாழ். மாநகர சபையின் சுகாதாரக்குழு கண்டறிந்துள்ளது.

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியிலுள்ள கடையொன்றிலி ருந்தே இம் மாத்திரைகள் கைப்பற் றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

வெளி நாட்டிலிருந்து தயாரிக் கப்படும் குறித்த மாத்திரைகள் குளிர்பானத்தில் கலக்கப்பட்டு பருக வழங்கப்படுவதாக தெரிவிக்கப் படுகின்றது.

குறித்த மாத்திரையினை விற்பனை செய்யும் கடையினை கண்டறிந்த சுகாதாரக்குழுவினர் மற்றும் பொலிஸார் அங்குள்ள மாத்திரைகளினை கைப்பற்றி யாழ். நீதிமன்றில் நேற்று வழக்கு தொடர்ந்துள்ளனர்.

மேற்படி வழக்கில் பிரபல பாடசாலை ஒன்றிற்கு அருகில் உள்ள விற்பனை நிலையம் ஒன் றில் பொதியாக்கப்பட்ட கோலா ஸ்பிரிட் எனப் பெயரிடப்பட்ட உண வுப் பக்கற்றுகளிலிருந்தே போதைப் பொருள் மாத்திரைகள் மீட்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

ஒவ்வொரு பக்கற்றிலும் ஆறு குளிசைகள் உள்ளடங் கலாக அவை தயாரிக்

20-ம் பக்கம் பார்க்க

## சிறிதரன் எம்.பியை கைது செய்யுங்கள்

### பொது பல சேனா

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தேச துரோகத்தில் ஈடுபட்டதாகவும் அவரை உடனடி யாகக் கைது செய்யுமாறும் தீவிர வாத பௌத்த அமைப்பான பொது பல சேனா கோரிக்கை விடுத் துள்ளது.

கிருலப்பனையிலுள்ள பொது பல சேனாவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பிலே பொது பல சேனா அமைப் பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தேஞானசார தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவு செய்யப் பட்டமை தொடக்கம் நாடாளு மன்றில் சிறிதரன் எம்.பி தமிழீழ விடுத

20-ம் பக்கம் பார்க்க

### பிரபாகரனை புகழ்ந்து பேசிய

## சிறிதரன் எம்.பியின் கருத்து கூட்டமைப்பினுடையது அல்ல!

**- சம்பந்தன்**

தமிழீழ விடுதலைப் புலிகளை யும் அதன் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனையும் போற் றிப் புகழ்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனினால் நாடாளு மன்றத்தில் விடுக்கப்பட்ட அறிக்கை யிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எட்டங் கட்டியுள்ளது.

இது கட்சியின் நிலைப்பாடு அல்லவென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர் இரா.சம்பந்தன்

20-ம் பக்கம் பார்க்க

## சிலாபத்தில் பறக்கும் தட்டு?

சிலாபம், மாரவில பிரதேசத்தில் பறக்கும் தட்டு ஒன்று தென்பட்டதா கத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு மார வில கடற்பரப்பில் பறக்கும் தட் டொன்று வீழ்ந்ததாக வெளியான தகவல் பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இரவு 7.30 அளவில் கடற்பரப் பில் ஒளியொன்று தென்படு வதனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கண்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மார வில பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

கடலுக்கு 100 மீற்றர் தொலை வில் நீண்ட நேரத் திற்கு இந்த ஒளி


20-ம் பக்கம் பார்க்க

### வலி வடக்கிற்குள் செல்ல

# விக்னேஸ்வரனுக்கு அனுமதி மறுப்பு!

இராணுவத்தினரால் உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட் டுள்ள வலிகாமம் வடக்கிற்குள் செல்ல முற்பட்ட வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 4 மணியளவில் காங்கேசன் துறைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.



நீண்ட காலமாக இடம்பெயர்ந்தி ருக்கின்ற வலிகாமம் வடக்கு மக்களின் காணிகளிலுள்ள வீடுகள், கோவில்கள் மற்றும் பாடசாலை கள் என்பவற்றை இராணுவத்தினர் தொடர்ச்சியாக இடித்தழித்து வரு கின்றனர்.

இந்நிலையில் மேற்படி பிரதேசத்தின் நிலைமைகளை பார்வையிடுவதற்காக வடக்கு மாகாண முதலமைச்சர் குழுவினர் நேற்று பிற்பகல் நேரடியாகப் பிரதேசத்திற்கு விஜயம் மேற் கொண்டனர்.

இதன்போது வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் என்ற இராணுவ எல்லைக்குள் அப்பால் செல்ல இராணுவத்தினர் அனுமதிக்க வில்லை. அத்தோடு அங்கு செல்வ தாயின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வேண்டும் என்றும் இல்லாவிட்டால் செல்லமுடியாது என்றும் இராணுவத்தினர் தெரிவித்து திருப்பி அனுப்பியுள்ளனர்.

இதே வேளை மேற்படி சம்பவம் குறித்து

19-ம் பக்கம் பார்க்க

## இலங்கை சட்ட ஆட்சி குறித்து ஆஸி. சட்டத்தரணிகள் கவலை

இலங்கையில் சட்டத்தின் ஆட்சி நிலை குறித்து அவுஸ்தி ரேலிய சட்டத்தரணிகள் சங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக விமர்சனங்களை முன் வைத்துள்ளது.

இலங்கையில் சட்டத் தொழி லில் ஈடுபடுவோர் மற்றும் நீதித் துறைக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்பில் வெளியாகும் செய்திகள் குறித்து அவுஸ்திரேலிய சட்டத் தரணிகள் சங்கத்தின் தலைவர் மைக்கல் கோல்பிரன் கவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

கடந்த ஜனவரி மாதம் இலங்கை யின் முன்னாள் பிரதம நீதியரச ருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட குற்றவியல் விசாரணைகள் மற்றும் அவரது பதவி நீக்கம் என் பன தொடர்பில் இயற்கை நீதியின் கொள்கைகள் பின்பற்றப்பட வில்லை.

சுயாதீனமான சட்டத் தொழில் மற்றும் நீதித்துறை சட்டத்தின் ஆட்சியில் முக்கிய அங்கமாகும் என்றார்.

இலங்கை சட்டத் தரணிகள் சங்கம்

20-ம் பக்கம் பார்க்க

## "இலங்கை அரசின் கணக்கெடுப்பை வரவேற்க இது நேரமல்ல"

### அவதானிக்கிறோம் என்கிறது கூட்டமைப்பு

இலங்கையில் 1982 முதல் 2009 வரை உள்நாட்டுப் போர் மற்றும் மோதல்களில் இறந்தவர்கள், மற்றும் இழந்த உடைமைகள் குறித்த நாடளாவிய கணக்கெடுப்பு ஒன்றை நடத்த இலங்கை அரசு முடிவு செய்துள் ளது. ஆனால் இது பற்றிதமிழ் தேசியக் கூட்டமைப்பு தற்போது கருத்தேதும் தெரிவிக்க முடியாது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருக்கிறார்.

பிபிசி தமிழோசைக்கு அளித்த பேட்டியொன்றில், சம்பந்தன், இந்த கணக்கெடுப்பு எவ்வாறு நடக்கும், இதன் செயல்பாடுகள் எப்படி இருக்கும், ஏற்பட்ட இழப்புகளை உண்மையாக கணக்கெடுக்கும் வகையில் இருக்குமா அல்லது மூடி மறைக்கும் முயற்சியாக இருக்

19-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பணமோசடி மையமாக இலங்கை மாறியுள்ளது

## மங்கள குற்றச்சாட்டு

(கொழும்பு)

மோசடியான முறையில் பெறும் பணத்தை சலவை செய்யும் முக்கியமான மையமாக இலங்கை மாறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில்நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தவறான வழியில் பெறப்பட்ட பணம் மற்றும் விடுதலைப் புலிகளின் பணம் என்பன வெளிப்படையாகவே மோசடி செய்யப்பட்டு வருகிறது.

இலங்கை மிகப் பெரிய பண மோசடி மையமாக மாறியுள்ளது. முழு பொருளாதாரத்திலும் தவறான வழயில் பெறப்பட்ட பணம் புழக்கத்தில் விடப்பட்டுள்ளது.



விடுதலைப் புலிகளின் பெருந்தொகையான பணம் மற்றும் தங்கம் என்பன நாட்டில் மோசடி செய்யப்பட்டுள்ளன.

எங்கள் மீது விடுதலைப்புலிகள் என்று முத்திரை குத்தப்படுகிறது. ஆனால் யார் உண்மையான புலிகள் என்பதை அனைவரும் அறிவார்கள்.

விடுதலைப் புலிகளின் பணம் மறறும் தங்கம் என்பன பட்டப்பகலில் மோசடி செய்யப்பட்டது. விடுதலைப் புலிகளின் உறுப்பினரான கருணா தாமரை தடாகத்தில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்டார்.

விடுதலைப் புலிகளின் தற்போதைய தலைவரென தன்னை அறிவித்து கொண்ட கே.பி. ஹிக்கடுவயில் நடைபெற்ற பொதுநலவாய மக்கள் மன்ற கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அத்துடன் பிரித்தானிய பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு சென்றிருந்த வேளையில் அரசாங்கத்தின் அனுசரணையில் விடுதலைப் புலிகளின் தயா மாஸ்டர் பிரதமருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

யார் விடுதலைப் புலிகளை தமக்கு அருகில் வைத்துள்ளனர் என்பதை முழு உலகமும் அறிந்து கொள்ள வேண்டும்.

புலிகளின் பணம், அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் பெறப்பட்ட தரகு பணம் என்பன மோசடி செய்யப்பட்டுள்ளன.

நாடு வளர்ச்சியடைந்துள்ளதாக அரசாங்கம் கூறுகின்ற போதிலும் அரச நிறுவனங்களின் நிலைமைகள் உண்மையான வளர்ச்சியை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளன என்றார் மங்கள. (செ-11)

## பரிசளிப்பு விழா

(மானிப்பாய்)

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் டிசம்பர் மாதம் 4-ம் திகதி புதன்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் அதிபர் சண்வாமதேவன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக யாழ் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம், சுவிஸ் பழைய மாணவர் சங்கத் தலைவர் க.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையினை ஸ்ரீ அற்புத நர்தனாலய பிரதம குரு சிவஸ்ரீ கதிர்காமநாதக்குருக்களும், வணபிதா அன்ரனி குயினும் வழங்குவர்.

கடந்த வருடம் இடம்பெற்ற இணைபாட விதானச் செயற்பாடுகள், கல்வி, விளையாட்டுக்களில் சாதித்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (செ-9, 23)

## விருது வழங்கலும் இறுவெட்டு வெளியீடும்

(மானிப்பாய்)

இணுவில் ஒலிநடத்திய மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிக்கான விருது வழங்கும் நிகழ்வும் தாயக ஒலி இறுவெட்டு வெளியீட்டு விழாவும் கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலை 5 மணி முதல் கலாபூஷணம் சைவப் புலவர் சு.செல்லத்துரை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக இரா.உதயணன், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.அரசரத்தினம், பொதுச்சேவை ஆணைக் குழுவின் உறுப்பினர் உடுவை எஸ்.தில்லைநடராஜா, கொழும்பு இந்துக் கல்லூரி அதிபர் ஐ.இராசரத்தினம், சைவமங்கையர் கழக வித்தியாலய அதிபர் திருமதி சசிதேவி சிவனேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரிசு பெறும் மாணவர்களை தவறாது சமுகம் தருமாறும் அவர்களை ஊக்குவிக்க இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் சமுகம் தருமாறும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (செ-9, 23)

## மாவீரர்களுக்கு அஞ்சலி

# வைத்தியசாலை பணியாளர்களிடம் ரி.ஐ.டியினர் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை பணியாளர்களிடம் வைத்தியசாலை நிர்வாகமும் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவும் (ரி.ஐ.டி) விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

விசாரணையின் முதற்கட்டமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரிகின்ற பாதுகாப்பு ஊழியர்கள்நேற்றையதினம் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர்.

மாவீரர் தினமான நேற்று முன்தினம் வட பகுதியின் பல்வேறு இடங்களில் மாவீரர்களுக்கு ஈகச் சுடரேற்றி அஞ்சலி செய்யப்பட்டது.

இன்னொரு சம்பவமாக யாழ். போதனா வைத்தியசாலையில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் கட்டப்பட்டதும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டதுமான கட்டிடத்தில் மாவீரர் தினமன்று 6.05 மணியளவில் யாரும் எதிர்பார்க்காத வகையில் அடையாளம் காணப்படாதோரால் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து அங்கு குவிந்த புலனாய்வாளர்களும் பொலிஸாரும் உடனடியாகவே விசாரணைகளினை மேற்கொண்டிருந்தனர். இந்நிலையிலேயே நேற்றையதினம் பாதுகாப்பு ஊழியர்கள் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர். (செ-4)

# மின்சாரம் தடைப்படும்

(மல்லாவி)

மின்சார திருத்த வேலை நடைபெறவுள்ளதனால் முல்லைத்தீவில் நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மாங்குளம் சந்தியிலிருந்து ஒட்டிசுட்டான், நெடுங்கேணி, முள்ளியவளை பிரதேசம் எங்கும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

அதேபோல கிளிநொச்சி பிரதேசத்தில் நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை பரந்தன், புளியம்பொக்கணை, தர்மபுரம், புதுக்குடியிருப்பு, விஸ்வமடு பிரதேசம் வரையும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்தும் மாலை 5.00 மணிவரை கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து பரந்தன், ஆனையிறவு, கிளிநொச்சி, பூநகரி உட்பட பல பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என முல்லை மாவட்ட மின் அத்தியட்சகர் க.செந்தில்செல்வன் அறிவித்துள்ளார். (செ-15)

● ● ● ● ● ● ● ●

(யாழ்ப்பாணம்)

மின்பரிமாற்றல் வலயமைப்பில் இணைப்புகளை சீர் செய்வதற்காகவும் பராமரிப்பு மற்றும் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, புங்குடுதீவு பிரதேசம் ஆகிய இடங்களிலும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை மல்லாகம், அளவெட்டி, சிறுவிளான், விளான், பன்னாலை ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (செ-11)

## மருத்துவ முகாம் பிற்போடப்பட்டுள்ளது

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச முதியோர்களுக்கான மருத்துவ முகாம் ஒன்று நாளை சனிக்கிழமை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருந்த நிலையில் அது தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இம் முகாம் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடுப்பகுதியில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே கோப்பாய் பிரதேசத்திலுள்ள 31 கிராமசேவையாளர் பிரிவுகளிலிருந்தும் ஒவ் வொருபிரிவுகளிலிருந்து 20 பேர் வீதம் மருத்துவ முகாமில் பயன்பெற தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் பெயர்விபரங்கள் கோப்பாய் பிரதேச செயலக சமூகசேவை பிரிவுக்கும் அங்குள்ள முதியோர் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-9,134)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இன்றைய அரசியல் சம்பந்தமான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மாலை 4 மணியளவில் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெறும். (செ)

## கவிதா ஆற்றல் போட்டி மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கவிதா ஆற்றல் போட்டியில் கலந்து கொண்டு பாட்டு, நாட்டுப்புறப்பாடல்கள், அறிவிப்பாளர் ஆகிய போட்டிகளுக்கு தெரிவானவர்கள் கொழும்பில் நடைபெறும் இரண்டாவது சுற்றில் கலந்து கொள்வதற்கென வாகன வசதி யாழ்.பல்கலைக்கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே இதில் கலந்து கொள்ளும் அனைவரையும் நாளை சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள இராமநாதன் மண்டபத்திற்கு முன்பாக ஒன்று கூடுமாறு கலைப்பீடாதிபதி ப.சிவநாதன் கேட்டுள்ளார். (அ)


# கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் திருமதி பத்மநாதன் இராசரத்தினம்

(யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர்)



திரு.பத்மநாதன் திருக்குமார் அவர்களின் அன்புத் தாயாரின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.

(C-5592)



## பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்

- பூரி. சப்பாத்தி. தோசை 80/- மட்டுமே
- மசாலா தோசை 120/- மட்டுமே

தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829

(சி-5589)



# அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு

அமரர் அன்னபாக்கியதேவி குமாரசாமி
(வளலாய் அச்சுவேலி)



கடந்த 01.11.2013 அன்று சிவபதமெய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.11.2013 (வியாழக்கிழமை) கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம் பெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 30.11.2013 சனிக்கிழமை 12 மணியளவில் அன்னாரின் தற்போதைய இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மார்க்கம்பரை,
கோப்பாய் வடக்கு.

(4609)

இங்ஙனம் :-
குடும்பத்தினர்



மனத் தளர்வா?
தனிமையா?
தற்கொலை எண்ணமா?

உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம்.
உடனே அழையுங்கள்.
இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

(C-5586)

கைகொடுக்கும் நண்பர்கள்
021 222 8117

# இன்று ஒரு தகவல்

## ஒரு விசித்திர வழக்கு!

இன்றைய உலகத்தில் சுவாரஸ்யமான சம்பவங்களெல்லாம் கண்முன் நடந்து கொண்டிருக்கிறது. பிரான்சில் நடந்த சம்பவம் இது. ஒரு பாறையில் கார்மோதி எரிந்து போய் விட்டது. அதில் போனவரும் காலியாகி விட்டார்.

உடனே பொலிஸ் அந்த இடத்துக்கு விரைந்து கார் நம்பரைப் பார்த்து ஆள் யார் என்று கண்டு பிடித்தார்கள். அவருடைய வீட்டுக்குத் தகவல் கொடுத்தார்கள். அந்த ஆளுக்கு ஒரு மனைவி... ஒரு காதலி, ஆக இரண்டு பேர். இருவரும் சண்டை பிடிக்காமல் ஒற்றுமையாக இருந்தார்களாம்.

நடந்த சம்பவத்தைக் கேள்விப்பட்ட இருவரும் உடனே கறுப்பு உடை அணிந்துகொண்டு விபத்து நடந்த இடத்துக்கு வந்தார்கள். கருகிப் போன சடலத்தைப் பார்த்தார்கள்.

அது எங்களுடைய கணவர் தான் என்று அடையாளம் காட்டினார்கள். அதன்பின் முறையான பிரேத பரிசோதனை நடந்து அந்த ஆள் விபத்தினால் இறந்து போனதாக அதிகாரிகள் கூறினார்கள். அவர்களும் சடலத்தை பொறுப்பேற்று எரித்து விட்டார்கள். இறந்து போனவர் மூன்று கம்பனிகளில் 8 ஆயுள் இன்சூரன்ஸ் பொலிஸி எடுத்திருந்தாராம்.

அதில் இரண்டு கம்பனிகள் அவருடைய மனைவிக்கு இன்சூரன்ஸ் பணத்தைக் கொடுத்து விட்டன. ஒரு கம்பனி மட்டும் கொடுக்காமல் கொஞ்சம் தாமதமாக்கிக் கொண்டே வந்தது.

அந்தக் கம்பனி தனியார் துப்பறியும் நிறுவனத்திடம் ஒரு துப்பறியும் நிபுணரை வாடகைக்கு அமர்த்தி அந்த ஆள், இறந்தவரின் மனைவியையும் – காதலியையும் கண்காணிக்கும் படி பணித்தது.

அந்த நிபுணர் விபத்து சம்பந்தமான குறிப்புக்களையெல்லாம் பார்த்தார். கார் தீப்பிடிக்க எந்தக் காரணமும் இல்லை என்பது தெரிந்தது. கருகிப் போன சடலத்தின் பல் அமைப்பு சம்பந்தமான குறிப்புகளையும் பார்த்தார்.

இறந்தவராகக் கூறப்பட்டவரின் மனைவியும் காதலியும் தொலைபேசி மூலமாக பேசிக் கொள்வதையெல்லாம் இரகசியமாக ஒட்டுக் கேட்டார். எல்லாவற்றையும் வைத்து கவனிக்கும் போது காரில் இறந்து போனது உண்மையிலேயே அந்த ஆள் இல்லை என்பது தெரிந்து விட்டது! அப்படியானால் அந்த ஆள் எங்கே?

அந்த ஆசாமிக்கு 46 வயது இருக்கும். அவனைக் காணவில்லையே... ஆனால், மனைவியுடனும் காதலியுடனும் வேறொரு இளைஞன் அடிக்கடி பேசுவதைக் கவனித்தார்கள்.

ஒரு நாள் திடீரென பிடித்து விசாரிக்கையில், இந்த இளைஞன் தான் அந்த ஆள் என்பது தெரிந்தது! என்ன விடயம் நடந்தது தெரியுமா? இந்த ஆள் முதலில் ஒரு ஆஸ்பத்திரியில் வேலைபார்க்கும் சிநேகிதனிடம் போய் ஏதாவதொரு அநாதை சடலம் கிடைக்குமா என்று கேட்டிருக்கிறான்.

இந்தச் சமயம் பார்த்து ஆஸ்பத்திரியில் அப்படி எதுவும் இருக்கவில்லை. உடனே இரண்டுபேரும் சேர்ந்து ஒரு பிளான் பண்ணி ஒரு பிச்சைக்காரனை அழைத்துவந்து அவனுக்கு அளவுக்கு மீறி தூக்க மாத்திரை கொடுத்து காலி பண்ணி... அவனைத் தனது காரில் வைத்து கொண்டு போய் ஒரு பாறையில் மோதவிட்டு தீயும் வைத்திருக்கிறார்கள்.

அதன் பின் அந்த ஆள் பிளாஸ்ரிக் சேர்ஜரி செய்து தன் முகத்தை அடையாளம் தெரியாமல் மாற்றி விட்டானாம். எப்படியிருக்கிறது இந்த ஏமாற்று வேலை?

அவன் திட்டம் மட்டும் நிறைவேறியிருந்தால் சுமாராக ஒரு எட்டுக்கோடி அவனுக்குக் கிடைத்திருக்கும். மாட்டிக் கொண்டதால் இப்பொழுது ஆயுள் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிறானாம்.

இந்தக் காலம் எப்படி இருக்கிறது என்றால்... தவறு செய்பவனும் புத்திசாலித்தனமாக அதைச் செய்கிறான். கொள்ளையடிப்பவனும் புத்திசாலித்தனமாகக் கொள்ளையடிக்கிறான். அதனால் நாம் அதைவிடப் புத்திசாலித்தனமாக இருந்து அதை சமாளிக்க வேண்டியிருக்கிறது.

(வெளிநாட்டில்) ஒரு அம்மா இன்சூரன்ஸ் கம்பனியைத் தேடி வந்தாராம். வந்து அங்கிருந்த அதிகாரியைப் பார்த்து, ``ஏன் சார்... இன்றைக்கு எனது கணவரின் உயிரை இன்ஷூர் பண்ணிக் கொண்டு, நாளைக்கு அவர் செத்துப் போனால் எனக்கு ஏதாவது கிடைக்குமா?" என்று கேட்டிருக்கின்றார். 'கிடைக்கும்!' என்றார் அவர். "என்ன" என்று கேட்டார் இவர். 'ஆயுள்தண்டனை' என்றாராம் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடமாகாண நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் இன்று முதல் டிசெம்பர் 5 ஆம் திகதி வரை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பல பகுதிகளிலும் பருவகால மழையைத் தொடர்ந்து டெங்குநோயின் பரவல் அதிகரித்துள்ள நிலையில், வடமாகாணத்தில் நுளம்பு கட்டுப்பாட்டுநடவடிக்கைகளை ஒருங்கிணைந்து தீவிரப்படுத்தும் நோக்குடன் இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி வரையில் வடமாகாண நுளம்புக்கட்டுப்பாட்டு வாரமாக வடமாகாண சுகாதார அமைச்சினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பிரதேச செயலாளர் பிரதேச மட்ட டெங்கு தடுப்பு செயலணிக் கூட்டத்தை ஒழுங்க செய்து பிரதேசங்களிலுள்ள நிறுவனங்களையும், கிராம மட்ட அமைப்புகளையும் இணைத்து நுளம்பு கட்டுப்பாட்டு வார நடவடிக்கைகளை திட்டமிடப்படவுள்ளதுடன் இதன் ஒருங்கிணைப் பாளராக சுகாதார வைத்திய அதிகாரி செயலாற்றவுள்ளார்.

கிராம மட்ட டெங்கு தடுப்பு செயலணிக் குழு கூட்டத்தை கிராம சேவகர் தலைமையில் ஏற்பாடு செய்து கிராம மட்ட அமைப்புகளை நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதுடன் பொது சுகாதார பரிசோதகர் இதற்கு ஒருங்கிணைப்பாளராக செயற்படவுள்ளார்.

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் ஏழு வலயங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்துக்கும் ஒவ்வொரு நாள் ஒதுக்கப்படுவதுடன் குறித்த நாளில் குறித்த வலயத்திற்குட்பட்ட சகல நிறுவனங்கள், வைத்தியசாலைகள், பொது இடங்கள், வணக்கத் தலங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள், பராமரிப் பற்ற காணிகள் என்பன நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

மேலும் குறித்த நாளில், குறித்த வலயத்தில் இடம்பெறும் நுளம்பு கட்டுப்பாட்டுநடவடிக்கைகளைபொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், மலேரியா தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள், கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலு நர்கள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், கிராம மட்ட சமூக அமைப்புகளின் தொண்டர்கள், சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் உள்ளடக்கிய குழு மேற்பா ர்வை செய்து ஆலோசனை வழங்கவுள்ளது.

அத்தோடு இவ்வாரத்தில் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்ட நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய விபரங்களையும், அதில் பங்கு பற்றிய உத்தியோகத்தர்களின் விபரங்களையும் சுகாதார வைத்திய அதிகாரி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக அரசாங்க அதிபருக்கும், மாகாண சுகாதார அமைச்சுகளுக்கும் தினமும் அனுப்பிவைப்பார் என குறிப்பிட்டுள்ளார்.

எனவே யாழ்.மாவட்டத்தில் அனைவரும் நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது மக்களை ஆட்கொல்லி டெங்கு நோயிலிருந்து பாதுகாப்போம் என அவர் மேலும் அறைகூவல் விடுத்துள்ளார். (அ-5)

# வடமாகாணத்தின் முதலாவது ஓவியக்கூட திறப்புவிழா

திருமுறைக் கலாமன்றத்தின் மற்றுமொரு சாதனைத் தடமாக 286, நக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வடமாகாணத்தின் முதலாவது ஓவியக் கூடத்தை தன்னகத்தே கொண்டமைந்துள்ள கலைத்தூது கலாமுற்றம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணிக்கு இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி, வத்திக்கான் தூதுவர் பேராயர் யோசப் ஸ்பிற்றறியினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்திறப்புவிழாவில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வடமாகாண சபை உறுப்பினர் இம்மானுவல் ஆனல்ட், சர்வதேச கட்டட திரைப்படக் கலைஞர் நவீன் குணரட்ன, யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி வி.பி.சிவநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

அருளுரைகளை யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை, நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், வண.கலைமாணி மீகஹஜந்துரே சிறிவிமல தேர, மௌலவி எம்.ஐ.மஷ்மூத், அருள் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகியோர் வழங்குவார்கள்.

இத்திறப்பு விழாவை முன்னிட்டு காலை 6.30 மணிக்கு பாற் பொங்கல் நிகழ்வும் காலை 9.00 மணிக்கு நக்கா வீதியில் அமைந்துள்ள புனித திரேசம்மாள் ஆலயத்தில் திருத்தந்தையின் பிரதிநிதி தலைமையில் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

திறப்பு விழாவைத் தொடர்ந்து ஈழத்து ஓவியர்களின் ஓவியக் காட்சி ஆரம்பமாகி தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்த சிறப்பிக்குமாறு திருமுறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20 | 20 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 120 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 |
| தக்காளி | 30 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 25 | 20 | 50 |
| கரட் | 30 | 40 | 65 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 200 | 220 | 220 |
| பெரிய வெங்காயம் | 90 | 180 | 120 |
| பாகற்காய் | 40 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 20 | 20 | 30 |
| கருணைக் கிழங்கு | 20 | 30 | 40 |
| பயற்றங்காய் | 20 | 80 | 30 |
| லீக்ஸ் | 40 | 60 | 80 |
| பீற்றூட் | 20 | 30 | 30 |
| கறிமிளகாய் | 60 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 60 | 50 | 90 |
| போஞ்சி | 100 | 90 | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 40 |

# இராசி பலன்

*29.11.2013*
*(கார்த்திகை 13, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.06 மணிக்கு*
*ஏகாதசி முற்பகல் 11.35 மணிக்கு*
*அத்தம் முற்பகல் 8.49 மணிவரை*
*இராகுகாலம் 110.4. - 12.13 மணிவரை*
*சுபநேரம் 6.13 - 7.43 மணிவரை*
*ஏகாதசி விரதம்*

**மேடம்** ஆரோக்கியம் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், தன வரவுகள் திருப்கரமாக அமையும், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சந்தோசமான அனுபவங்கள் ஏற்படலாம், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு.

**கடகம்** பெரியோர்களின் ஆசி கிடைக்கும், சகோதரர்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், வாக்கு மேன்மையுண்டு,

**சிங்கம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மாதர் நட்புண்டு, சுற்றத்தார் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**துலாம்** தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முனைவீர்கள், குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, பயணங்களால் பிரபல மாணவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும், உறவினர்களின் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**தனுசு** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், பிறர் உதவியுண்டு, ஆரோக்கியமான நாள், சொன்ன வாக்கைக் காப்பாற்றி உறவினர்களின் பாராட்டைப் பெறுவீர்கள்.

**மகரம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், தேக நலனில் தெளிவு ஏற்படலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்** புதிய திருப்பங்கள் ஏற்படலாம், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம், வேலைச் சுமை கூடும், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**மீனம்** உறவினர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், வருமானம் திருப்தி தரும்.

வளவன்

## தேசிய இளைஞர்மன்ற மாதாந்த கூட்டம்

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்டக்கிளையின் மாதாந்த கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தலைவர் எஸ்.லக்ஷன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளன உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் செயலாளர் திருமதி வினோதினி ஸ்ரீமேனன் அறிவித்துள்ளார். (அ-9,23)

## ஹற்றன் நஷனல் வங்கிக்கிளை வழமைபோல் இன்று இயங்கும்

### நேற்றைய தீவிபத்து தொடர்பில் ஊடகங்களுக்கு தகவல்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிக் கிளையில் இடம்பெற்ற தீ விபத்து வங்கியில் பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டி சாதனத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாகவே நிகழ்ந்தது என ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் கை.இந்திரவாசன் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


அதிகாலை வேளை ஏற்பட்ட புகை மண்டலத்தை அவதானித்ததுடன் விரைந்து செயற்பட்டதன் மூலமும் வங்கி உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் பொது மக்கள் விரைந்து செயற்பட்டு யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினின் ஒத்துழைப்புடன் 30 நிமிடங்களுக்குள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இத்தீ விபத்தின் மூலம் ஒரு சில தளபாடங்கள் தவிர வங்கியின் சொத்துக்களுக்கு வேறு எந்தவிதமான சேதங்களும் ஏற்படவில்லை.

குறிப்பாக வாடிக்கையாளர்களின் சொத்துக்களுக்கோ ஆவணங்களுக்கோ எந்த விதமான சேதமும் ஏற்படவில்லை.

மின்னொழுக்குகளை சீர் செய்து உரிய முறையில் வங்கிச் செயற்பாடுகளை உடனடியாக ஆரம்பிப்பதற்காக அனைத்துச் செயற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தமையால் நேற்று இரண்டு மணிநேரம் வங்கிக் கருமங்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்க முடியாது போனமையையிட்டு மனம் வருந்துகின்றோம்.

எனினும் இன்று வெள்ளிக்கிழமை எமது திருநெல்வேலிக் கிளை வலமைபோல் அனைத்துச் சேவைகளையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)




## மகளிருக்கான துடுப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரி கழகத்தால் மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களிடையே நடத்தப்படும் மகளிருக்கான அரச அதிபர் வெற்றிக்கிண்ண துடுப்பாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

அணிக்கு 6 பேர் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களை கொண்டமைந்த இப்போட்டிகளில் ஒருவர் அதிகூடியதாக 2 பந்துப் பரிமாற்றங்களையே பரிமாற முடியும் எனவும் கழக செயலாளர் யே.நிரோஷனந் அறிவித்துள்ளார். (அ-5)

## குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மேல் நீதிமன்றால் நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் இரும்புக் கோட்டை என வர்ணிக்கப்பட்ட ஆனையிறவுப் படைமுகாமை தகர்ப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து திட்டம் வகுத்து தாக்குதலிலும் பங்கு பற்றினார் என குற்றம் சாட்டப்பட்டு இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டவரின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை யாழ். மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

1999ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆனையிறவு படைமுகாமுக்கு தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் சரவணை மேற்கு வேலணையைச் சேர்ந்தவரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையுமான மகாலிங்கம் ஜனகன் (வயது 36) என்பவர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி முல்லைத்தீவு வட்டுவாகலில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இவர் பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டு இவரினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை ஒரு சான்றாக வைத்து யாழ். மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்காக யாழ். நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கை விசாரணை செய்த நீதிபதி குறித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை ஒரு சான்றாக ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறி நிராகரித்தார்.

குறித்த வழக்கு மீண்டும் விசாரணைக்காக டிசம்பர் மாதம் 19ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஆஜராகி இருந்தார். (அ-4)



போரில் உயிர் நீத்த உறவுகளின் நினைவாக மரம் நாட்டும் நிகழ்வு மாவீரர் தினமான நேற்றுமுன்தினம் புதன்கிழமையன்று வடமாகாண கல்வி அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மரக்கன்றை நாட்டிவைப்பதை படத் தில் காணலாம். இதன்போது வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர்களான வே.சிவயோகன், பா.கஜதீபன், இ.ஆனல்ட் ஆகியோரும் மரக்கன்று நட்டு வைத்தனர்.

## ஆறுகால்மடத்தடி பலசரக்கு கடையில் திருட்டுச் சம்பவம்




(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை ஆறுகால் மடத்திலுள்ள நாராயணன் ஸ்ரோர்ஸ் பலசரக்குக் கடையொன்றில் திருட்டுச்சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இத் திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இதில் ஒரு இலட்சம் ரூபாய் பணமும் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதி மிக்க பொருட்களும் திருட்டுப்போய் உள்ளன என கடையின் உரிமையாளார் ஜெயகார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

இத் திருட்டுச்சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸாருக்கு அதிகாலை 5.40 மணியளவில் தெரியப்படுத்திய போதிலும் அவர்கள் முற்பகல் 9.30 மணிக்கே சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணையை மேற்கொண்டனர்.

மாவீரர் தினம் அன்று மக்கள் எவரும் வெளியே செல்லாத சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இத் திருட்டு இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)




## மாணவர் கௌரவிப்பு

(மானிப்பாய்)

உடுவில் கல்விக்கோட்ட பாடசாலைகளில் இவ்வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் டிசம்பர் மாதம் 4ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வாழ்விற்கு ஒளியேற்றுவோம் எனும் தொனிப்பொருளில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வு கழகத் தலைவர் லயன் எஸ்.ஹரிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் பிராந்திய ஆலோசகரும் வைத்தியருமான லயன் வை.தியாகராஜா, சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.ரவிச்சந்திரன், லயன்ஸ் கழகங்களின் கல்வித்துறைக்கான மாவட்டத் தலைவர் வைத்தியர் லயன் ஜீ.சந்திரசேகரம், கௌரவவிருந்தினராக இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் லயன் எம்.செல்வஸ்தான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக கழகச் செயலாளர் லயன் சி.கஜன் அறிவித்துள்ளார். (அ-9,23)

## 2014 ஆம் ஆண்டுக்கான பாடசாலை தவணைகள் விபரம்

(யாழ்ப்பாணம்)

கல்வியமைச்சினால் 2014ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பாடசாலை தவணை நாட்கள் பற்றிய கால அட்டவணை பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சிங்கள, தமிழ் பாடசாலைகளுக்கு முதலாம் தவணை 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையும், இரண்டாம் தவணை ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் மூன்றாம் தவணை செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் நடைபெறும்.

முஸ்லிம் பாடசாலைகளுக்கு முதலாம் தவணை 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை வரையும் 2 ஆம் தவணை ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை முதல் யூன்மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை வரையும் மூன்றாம் தவணை ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)


# புற்றுநோய் வைத்தியசாலை ஜனவரியில் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புற்றுநோய் வைத்தியசாலை எதிர்வரும் ஜன்வரி மாதம் முதல் வாரத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

புலம்பெயர்ந்த ஒருவரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நடைபயணம் ஒன்றின் பயனாக கிடைக்கப் பெற்ற 300 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் இப்புற்று நோய் வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இந்த புற்றுநோய் வைத்தியசாலையில் 120 பேர் தங்கி சிகிச்சை பெறக் கூடிய படுக்கை வசதிகள், சிறுவர் பொழுது போக்கு பூங்கா, நோயாளர்களுக்கான ஆலோசனை வழங்கும் மண்டபம் உட்பட இரண்டு மாடிக் கட்டடத் தொகுதி என்பனவற்றின் நிர்மாணப் பணிகள் முழு மூச்சில் இடம் பெற்றுவருகின்றன.



புலம்பெயர் தமிழரான நாதன் சிவகணநாதனின் ஏற்பாட்டில் அவரது நண்பர் உட்பட 13 பேர் தெற்கே தெய்வேந்திர முனையிலிருந்து வடக்கே யாழ்ப்பாணம் பருத்தித்துறை முனை வரை 27 நாட்கள் தொடர்ந்து நடைபயணத்தின் ஊடாக திரட்டப்பட்ட 300 மில்லியன் ரூபா பணத்தின் உதவியுடனே இவ் வைத்தியசாலை நிர்மாணிக்கப்படுகிறது.

தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினத்தின் நன்கொடை மூலம் கிடைக்கப்பெற்ற, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அருகிலுள்ள 5 ஏக்கர் காணியிலே இப் புற்று நோய் வைத்தியசாலை நிர்மாணிக்கப்படுகிறது.

இவ் வைத்தியசாலை இயங்கத் தொடங்கும் பட்சத்தில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த பல நோயாளர்கள் நன்மையடைவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# மோ.சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஏ-9 வீதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சாவகச்சேரி அரசடி ஒழுங்கையிலிருந்து மோட்டார் சைக்கிள் ஏ-9 வீதிக்கு திரும்ப முற்பட்டவேளை கொடிகாமத்திலிருந்து வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது ஏ-9 வீதிக்கு வர முற்பட்ட மோட்டார் சைக்கிளில் பயணித்த மீசாலையைச் சேர்ந்த நடராஜா தம்பதியினர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-29)

# புற்றுநோய் கட்டிகள் வெற்றிகரமாக அகற்றல்

## இலங்கையில் சாதனை

புற்று நோயினால் பீடிக்கப்பட்ட பெண் ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையின் போது அவர் உடலுக்குள் இருநத இரு கட்டிகளும் வெற்றிகரமாக அகற்றப்படடதாக பதுளை புற்று நோயியல் வைத்திய நிபுணர் அனுருத்த தெரிவித்துள்ளார். இக்கட்டிகள் அகற்றப்பட்டமை இலங்கையில இதுவே முதல் முறையென்று அவர் கூறியுள்ளார்.

பதுளை புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பெண்ணொரு வருக்கு இரு மணித்தியாலங்களாக மேற் கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை பூரணமாக வெற்றியளித்துள்ளது. ஈரல் மற்றும் மலவாயில் ஆகிய இரு இடங்களிலேயே புற்று நோய் பீடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 26 ஆம் திகதியே மேற்படி சத்திரசி கிச்சை மேற்கொள்ளப்பட்டது. இத்தினம் இலங்கை வைத்திய வரலாற்றில் முக்கிய தினமாகும்.

இச்சத்திர சிகிச்சை மூலம் 200 மில்லி மீற்றர் இரத்தம் வெளியேறியுள்ளது. நான் மேற்கொண்ட இந்த வைத்திய சிகிச்சை முறைமை இலங்கையில் மேற்கொள்ளப்படு வதில்லை. மிக மிக எச்சரிக்கையுடனும் நிதானத்துடனும், இத்தகைய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வேண்டியவையாகும் என்றார். குறித்த சத்திர சிகிச்சையின் பின்னர் அப்பெண் சுகதேகியாகவுள்ளார் என தெரி விக்கப்படுகின்றது. (அ-2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

**பிள்ளையார் இன்**

தினமும் நிறைவான மதிய உணவு (புஃவே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை

- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:- இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829

(சி/5541)

**சேவை நலன் பாராட்டு**



**திரு. சின்னத்துரை சுந்தரலிங்கம் (SLTS-I)**

மு/ வித்தியானந்தக் கல்லூரி முள்ளியவளை (பிரதி அதிபர்)

1. ஆரம்பக் கல்வி:- 1959-1965 (மு/ வற்றாப்பளை மகா வித்தி)
2. இடைநிலை, உயர்கல்வி:- 1966-1973 (யா/ நெல்லியடி மத்திய மகா வித்தி)
3. முதல் நியமனம்:- 02.05.1978- 29.05.1978(மு/குமுழமுனை மகா வித்தி)
4. இரண்டாவது பாடசாலை:-30.05.1978-30.05.1981 (மு/ வற்றாப்பளை மகா வித்தி
5. மூன்றாவது பாடசாலை:- 01.06.1981 -31.03.1989 (இ/பலாங்கொடை தமிழ் மகா வித்தி)
6. 4ஆவது பாடசாலை:- 01.04.1989-29.11.2013 (மு/வித்தியானந்தக் கல்லூரி (உப அதிபர்)

கடமையும் கண்டிப்பும் கட்டுப்பாடும் கனிவதும்
கலந்துதோன்றாய் அமைந்திட்ட கலங்கரை விளக்கமாய்-எம்
கல்லூரி பிரதி அதிபராய் பல்லாண்டு கணதி மிகு சேவை செய்து- இன்று
பிரியாவிடை பெற்று ஓய்வு பெறும் வேளைதனில்
ஈடு இணையற்ற உம் சேவைக்கு எப்படி நன்றி சொல்வோம்
வித்தியானந்த கல்லூரி சமூகமாய் வாழ்த்தி நிற்கின்றோம்- வாழ்க

ஊழியர் நலன்புரிச் சங்கம்
வித்தியானந்தக் கல்லூரி

**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: 34 ¼ செவ் 2 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L / IT(கனடா PR)<br>தொ.இ: B/104 | பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: 10 ¾ செவ் 2 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, AAT<br>தொ.இ: G/129 |
| பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 60 செவ் 1 ல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L, AAT / வர்த்தகம்<br>தொ.இ: B/105 | பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 42 செவ் 2 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: கல்வியற் கல்லூரி / ஆசிரியர்<br>தொ.இ: G/136 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: 14 ½ செவ் 7 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Network Engineering / பொறியியலாளர்<br>தொ.இ: B/108 | பிறப்பு: 1987 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: 83 ¾ சூரி செவ் 1 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L / அரச திணைக்களம்<br>தொ.இ: G/147 |
| பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 61 ¾ செவ் 12 ல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: CIMA / கணக்காளர் (அவுஸ்திரேலியா PR)<br>தொ.இ: B/110 | பிறப்பு: 1975 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: 47 ¾ செவ் 7 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA, HNDA / நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>தொ.இ: G/152 |


சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

# இலங்கையின் விசா விதிமுறைகள் பற்றி நான் அறிந்திருக்கவில்லை

## கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்



இந்தியா மற்றும் ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு சுற்றுலா விசாவில் தான் செல்லும்போது உரைநிகழ்த்தியிருப்பதாகவும், அங்கெல்லாம் இதற்கான "ஜனநாயக வெளி" இருக்கிறது என்றும் கூறிய கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன், இலங்கையில் இது அனுமதிக்கப்படுவதில்லை என்பதைத் தான் உணர்ந்திருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் விசா விதிகளை மீறி பொது நிகழ்ச்சிகளில் உரையாற்றியதாக தடுத்து வைக்கப்பட்ட தமிழ் கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன், கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கையிலிருந்து நோர்வேக்கு நாடு கடத்தப்பட்டார்.

நோர்வேக்கு திரும்பியதன் பின்னர் தமிழோசைக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தான் யாழ்ப்பாணத்திலிருந்து தனது சொந்த ஊரான வடகாடுக்கு சென்று தனது தாயாரின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தச் சென்றுகொண்டிருக்கையில், பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

ஆனால் தாயாரின் நினைவிடத்துக்கு செல்லாமல் திரும்ப மாட்டேன் என்று தான் கூறி வீதியில் அமர்ந்து போராடிய பின்னர், தன்னை தாயின் நினைவிடத்துக்குச் செல்ல அவர்கள் அனுமதித்தனர் என்று அவர் கூறினார்.

விசா விதிகளை மீறியதான குற்றச்சாட்டு குறித்து பதிலளித்த அவர், இந்தியா மற்றும் ஐரோப்பா போன்ற நாடுகளில் தான் சுற்றுலா விசாவில் செல்லும்போது இது போன்ற உரைகளை நிகழ்த்தியிருப்பதாகவும், அங்கெல்லாம் இதற்கான "ஜனநாயக வெளி" இருக்கிறது என்றும் கூறினார்.

ஆனால் இலங்கையில் இது அனுமதிக்கப்படுவதில்லை என்பதைத் தான் உணர்ந்திருக்கவில்லை. மேலும் இலங்கையில் தன்னை ஒரு வெளிநாட்டவராக தான் கருதவில்லை.

ஆனால்தன்னைப்பற்றி இலங்கை அமைச்சர்கள் பஷீர் ஷேகு தாவூத் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் சாதகமான கருத்துக்களை தந்திருக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது மன உளைச்சல் இருந்ததென்றும் ஆனால் உடல் ரீதியாக எந்தவித துன்புறுத்தலுமில்லை என்றார். (அ-2)

# காணாமற் போனோர் தொடர்பில் விசாரிக்க காலநீடிப்பு தேவை

## விசாரணை ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நடைபெற்ற காலத்தில் காணாமற் போனவர்கள் பற்றி விசாரணை நடத்த ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு விசாரணைகளுக்கு வழங்கப்பட்ட கால நீடிப்பை எதிர்பார்ப்பதாக ஆணைக் குழுவின் தலைவர் முன்னாள் நீதிபதி மெக்ஸ்வெல் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆணைக்குழுவிடம் இதுவரை 8 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அவற்றுள் 4 ஆயிரம் முறைப்பாடுகள் பொது மக்களிடம் இருந்து கிடைத்துள்ளதுடன் ஏனையவை பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தவர்களிடமும் உறவினர்களிடமும் இருந்து கிடைத்துள்ளன.

அதிகளவான முறைப்பாடுகள் கிளிநொச்சியில் இருந்தே கிடைத்துள்ளன.

விசாரணைகளை நடத்துவதற்கு இன்னமும் கால அவகாசம் தேவைப்படுவதால், ஆணைக் குழுவின் பதவிக்காலத்தை நீடிக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஓகஸ்ட் மாதம் இந்த ஆணைக் குழுவை நியமித்தார். ஆறு மாத பதவிக்காலத்தைக் கொண்ட இந்த ஆணைக்குழு ஆறு மாதங்களில் விசாரணைகளை பூர்த்தி செய்து ஜனாதிபதியிடம் அறிக்கையைக் கையளிக்க வேண்டும்.

கடத்தல் மற்றும் காணாமற் போன சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அவர்கள் யார் என்பது குறித்து அடையாளம் காணப்பட வேண்டும் என ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்ததாக அவர் குறிப்பிட்டார். (அ-2)

# வடக்கில் 95 வீதமான மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

நாம் உலக ஓட்டத்திற்கமைய நல்லிணக்கத்தை முன்மொழிந்து, எமது அரசியல் வழிமுறையைத் தொடர்கிறோம். இதன் மூலம் சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வும் அமைதியும் தேசிய ரீதியான உறுதிப்பாடும் ஏற்படும். அப்பொழுதே நாம் எல்லோரும் ஒருமனதாக ஏற்றுக்கொள்கின்ற ஒரு வரவுசெலவுத் திட்டம் உருவாகும் என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது அமர்வின் ஆறாம் நாள் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த வரவு செலவுத் திட்டமானது வறுமை ஒழிப்பு, சுயதொழில் ஊக்குவிப்பு, உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்தல், தேசிய நல்லிணக்கம், பாதுகாப்பு, வீடமைப்பு, குடிநீர் வசதி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது ஒப்பீட்டளவில் கடந்த காலத்தைவிட முன்னேற்றகரமானது என கருதுகிறேன்.

ஆனாலும் நீண்ட போரினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற சமூகங்களைக் கொண்ட எமது நாட்டுக்கு இந்த வரவுசெலவுத் திட்டம் பல பற்றாக் குறைகளையே வெளிப்படுத்திக் காட்டும். ஆனால் போருக்குப் பின்னரான நான்கு ஆண்டுகாலத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற முன்னேற்றகரமான விடயங்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இதில் இடமுண்டு. இது முக்கியமானது.

வடக்கிலே துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த பல அபிவிருத்தித் திட்டங்களின் எதிர்காலம் எப்படி அமையப்போகிறது என்ற கேள்வி பலரிடமும் எழுந்துள்ளது. இதற்குக் காரணம் அங்கே மாகாணசபையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருப்பது அரசாங்கத்தை எப்போதும் எதிர்த்துவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாகும்.

எதிர்ப்பு அரசியல் பாரம்பரியத்தை முன்னெடுத்து வருகின்ற தரப்பினால் எவ்வாறு மக்களுடைய தேவைகளையும், நலன்களையும் நிறைவு செய்ய முடியும்? அத்துடன் உள்முரண்பாடுகளும் அபிப்பிராய பேதங்களுமாக நிறைந்து போயிருக்கும் வடமாகாண சபையானது அரசியல் உறுதிப்பாட்டை இழந்த நிலையிலேயே காணப்படுகிறது.

எனவேதான் வடக்கின் அபிவிருத்தி எவ்வாறு அமையப்போகிறது என பலரும் கேள்வி எழுப்புகிறார்கள். ஆதலால் அரசாங்கம் பாரபட்சம் இல்லாத முறையில் அபிவிருத்திப் பணிகளையும் அரசியல் அதிகாரப் பகிர்வையும் முன்னெடுக்குமென நம்புகிறேன்.

ஆயினும் இது ஒரு மிகக் கடினமான நிலைமைதான். உடன்பாடு கொள்ள முடியாத இரண்டு தரப்புகளாக எப்போதும் இருப்பதால் மக்களே நட்டத்தை அனுபவிக்கிறார்கள். ஆனால் மக்களுடைய நலன்கள் மீது அக்கறை கொண்டு செயற்பட்டால் முரண்பாடுகளையும் இடைவெளியையும் குறைத்து விட முடியும். அரசாங்கம் வடக்கிலே அனைத்துத் துறைகளிலும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை செய்துள்ளது. ஆயினும் இன்னமும் பல வேலைத்திட்டங்கள் தொடரப்பட வேண்டியுள்ளன. இதற்கு வடக்கு மாகாணசபையானது மக்கள் மீது கரிசனை கொண்டு செயற்பட வேண்டும்.

நீண்ட காலமாக பொது ஓட்டத்திற்குப் புறம்பானதொரு அரசியற் சூழலில் வாழ்ந்து பழக்கப்பட்ட மக்கள் உடனடியாக அபிவிருத்தியையும், அமைதியையும் புரிந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனாலும் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்ற தவிப்பு அவர்களிடம் உள்ளது. இந்தத் தவிப்பே இன்று அவர்களிடம் குழப்பமான மனநிலையைத் தோற்றுவித்துள்ளது. மக்களின இந்த குழப்பமான மன நிலையை சில அரசியல் கட்சிகள் தமக்கு கிடைத்த வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கிறது.

வடபகுதியிலே 95 வீதமான மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஏனையவர்களிலும் ஒரு சிறு பகுதியினர் தவிர மற்றையவர்கள் மிக விரைவில் தங்கள் சொந்த இடங்களுக்கு செல்லக்கூடிய சூழல் உருவாகும். மீள்குடியேறிய மக்கள் உட்பட வடக்கில் வாழும் அனைவருக்குமான தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதே இன்று எல்லோருக்குமான சவாலாக உள்ளது. இந்த வரவுசெலவுத் திட்டத்தில் இது குறித்த எதிர்பார்ப்புகளை நாம் கொண்டிருந்தோம்.

ஒரு காலத்தில் வட பகுதியிலே அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகள், தனியார் தொழில்மையங்கள் என பலவும் இருந்தன. இவையெல்லாம் இயங்கக் கூடிய சூழலும் இருந்தது. ஆனால் இவை அனைத்தும் இன்று இல்லை. இதனால் வேலை வாய்ப்பும் வட பகுதியின் உற்பத்தி திறனும் வீழ்ச்சியடைந்து விட்டது.

வேலைவாய்ப்பு இன்மை என்பது வடபகுதி மக்களிடத்திலே மிக பாரிய நம்பிக்கையீனத்தையும் எதிர்காலம் குறித்த கேள்வியையும் உருவாக்கியுள்ளது. இதனால் அங்குள்ள இளைஞர்கள் மிக அபாயகரமான சூழ்நிலைகளின் மத்தியில் கடல் வழிப்பயணத்தை மேற்கொண்டு அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு செல்ல விளைகிறார்கள். ஆனால் அந்த நாடுகளோ அகதிகள் தொடர்பில் இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன.

ஆகவே இளைய தலைமுறையினர் தமது சூழலில் தொழில் வாய்ப்பை பெறக்கூடிய வழிவகைகளை நாம் செய்ய வேண்டி உள்ளது.

வட பகுதியிலே கலாசார மத்திய நிலையம் ஒன்றும் அனைத்து வசதிகளுமுடைய மீன்பிடித்துறைமுகம் ஒன்றும் அமையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை வரவேற்கிறேன்.

பொதுவாகவே இந்த வரவு செலவுத்திட்டம் சம நேரத்தில் இரண்டு வகையான அவதானிப்புக்குள்ளாகிறது. ஒன்று தேசிய ரீதியான செயற்றிட்டங்களின் அடிப்படையிலானது. மற்றையது. பிராந்திய ரீதியான தேவைகளின் பாற்பட்டது. இந்த இரண்டு நோக்கு நிலைகளையும் ஒருங்கிணைப்பதற்கு இணைந்து பணியாற்றும் பொறிமுறையே அவசியம்.

அத்தகைய ஒன்றை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் முதலில் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். அதாவது எல்லோருக்கும் பொருத்தமான ஒரு வரவுசெலவுத் திட்டத்திற்காகவும் ஒரு தேசத்திற்காகவும் உழைப்போம் என்றார். (அ-2)

# வெளிநாட்டு சக்திகளுக்கு அஞ்சப் போவதில்லை

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

பேய்களுக்கு அச்சமென்றால் சுடுகாட்டில் வீடு கட்டியிருக்க மாட்டோம். சர்வதேசத்திற்கு சென்று இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்த சிலர் முயற்சிக்கின்றனர் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடுவலவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்குபற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாம் கடன் பெற்றுக் கொள்வதாக குற்றம் சுமத்துகின்றனர். நாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கிலேயே கடன் பெற்றுக் கொள்கின்றோம்.

ரரஜபக்ஷ அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

வெளிநாடுகளுக்கு சென்று அரசாங்கத்திற்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. நாம எந்த தரப்பிற்கும் அஞ்சப் போவதில்லை. பேய்களுக்கு பயந்தால் சுடு காட்டில் வீடு அமைக்க முடியாது என பழமொழியொன்று உண்டு.

தாய் நாட்டுக்கு ஆற்ற வேண்டிய சேவையை நாங்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளோம்.

எவ்வாறான தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும் நாம் எமது பயணத்தை கைவிட மாட்டோம்.

நாட்டின் ஜனநாயகத்தின் மீது எமக்கு நம்பிக்கை உண்டு. மக்களின நம்பிக்கையை நாம் ஒரு போதும் சீர்குலைக்க மாட்டோம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)

# வலம்புரியின் செய்திக்கு யாழ்.ம.உ.ஆணைக்குழு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 23.11.2013 அன்று வலம்புரி பத்திரிகையில் வெளியான காணாமற் போனவர்கள் குறித்து பொறுப்பற்ற விதத்தில் பதில் ஆணையாளர் மீது மக்கள் விசனம் எனும் செய்திக்கான விளக்கத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் அறிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேற்படி கடந்த 22.11.2013 வெள்ளிக்கிழமை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணக் காரியாலயத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சிவில் சமூக பிரதிநிதிகளுடனான ஒன்று கூடலில் காணாமற் போனோர் தொடர்பில் பதிலளித்த ஆணையாளரின் கருத்து தொடர்பில் தங்களது பத்திரிகையில் வெளியான செய்தி எம்மை ஆச்சரியத்திற்குள்ளாக்கியுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் பத்திரிகையாளர்களால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த ஆணையாளர் T.E. ஆனந்தராஜா "காணாமற் போனோர் தொடர்பில் ஆணைக்குழுவினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் காணாமற் போனோர்களை இன்னமும் காணாமற் போனவர்களாக கருதியே (still missing) தாம் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தாம் தொடர்ந் தும் காணாமற் போனவர்கள் தொடர்பில் அதிக கரிசனை செலுத்தி வருவதாகவும் தெரிவித்தார்" இருப்பினும் தங்களது பத்திரிகையில் வெளியான செய்தியில் குறிப்பிட்டது போல காணாமற் போனவர்கள் காணா மற் போனவர்கள் தான் என்ற பொருள் பட அவர் குறிப்பிடவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன் என அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பொதுநலவாய தலைவரான ஜனாதிபதியுடன் கனடா இணைந்து பணியாற்ற வேண்டும்

## அமைச்சர் அத்தாவுட அழைப்பு

(கொழும்பு)

**இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டை கனடாவின் பிரதமர் பகிஷ்கரித்தபோதிலும் அடுத்த இரண்டு வருடங்களுக்கு பொதுநலவாய அமைப்பின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கனடாவின் பிரதமர் இணைந்து செயற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று கிராமிய அலுவல்களுக்கான சிரேஷ்ட அமைச்சர் அத்தாவுட செனவிரட்ன தெரிவித்துள்ளார்.**

ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

இந்தியாவில் விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளமையின் காரணமாகவே இந்திய பிரதமர்



மன்மோகன்சிங் இலங்கை மாநாட்டுக்கு வருகை தரவில்லை. இலங்கைக்கு வருவதைவிட மன்மோகன் சிங்கிக்கு தேர்தல் முக்கியம் என்பதை நாங்கள் ஏற்கின்றோம்.

கனடா இந்த மாநாட்டை பகிஷ்கரிப்பதாக அறிவித்திருந்த போதிலும் அந்த நாட்டைத் தவிர வேறு எந்த நாடும் அதனை பின்பற்றவில்லை. அவுஸ்திரேலிய பிரதமரும் அந்த கோரிக்கையை ஏற்காது இலங்கை வந்திருந்தார்.

கனடாவில் ஐந்து இலட்சம் இலங்கை தமிழ் மக்கள் உள்ளனர். அவர்களின் வாக்குகளை பெறும் நோக்கிலேயே கனேடிய பிரதமர் பொதுநலவாய மாநாட்டை பகிஷ்கரித்தார்.

கனடாவின் பிரதமர் பகிஷ்கரித்த போதிலும் அடுத்த இரண்டு வருடங்களுக்கு பொதுநலவாய அமைப்பின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கனடாவின் பிரதமர் இணைந்து செயற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளின் பிரதமர்கள்,ஜனாதிபதிகள் ,வெளிவிவகார அமைச்சர்கள், ஆளுநர்கள் என பிரதிநிதித்துவங்கள் பல இடம்பெற்றன. எந்தவொரு நாடும் பங்கு பற்றுதலை தவிர்க்கவில்லை.

இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் குறித்து பேசிய நாடுகள் கூட இம்மாநாட்டில் பங்கு பற்றின. சனல் 4 ஊடகவியாளர்களும் வருகை தந்திருந்தனர். உண்மையில் சனல் 4 ஊடகவியலாளர் கெல்லம் மக்ரேவை யாழ்ப்பாணம் அனுப்பியிருக்கலாம். யாழ்ப்பாணத்தில் நிலைமைகள் எவ்வாறு உள்ளன என்று அவருக்கு காண்பித்திருக்கலாம்.

ஆனால் எமது நாட்டிலேயே சலர் கெல்லம் மக்ரேவுடன் இணைந்து கொண்டு சில செயற்பாடுகளை முன்னெடுத்தமை கவலையளிக்கும் விடயமாகும்.

ஐக்கிய தேசிய கட்சி இவ்வாறு செயற்பட்டது. இதனால் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படும் நிலை இருக்கிறது. பொதுநலவாயம் என்பது தொண்டு அடிப்படையில் நாடுகள் இணைந்து கொண்டு செயற்படும் அமைப்பாகும். இந்த அமைப்பினால் மனித உரிமை மீறல் விவகாரங்களை வைத்துக்கொண்டு நாடுகளுக்கு தண்டனை வழங்கமுடியாது.

மாநாட்டில் கலந்து கொள்ளாத இந்தியாவுக்கு என்ன நடந்தது என்று அனைவருக்கும் நன்றாகவே தெரியும். அங்கு ஒரு கட்சியினால் ஒரு போதும் ஆட்சி அமைக்க முடியாது.

மாநில கட்சிகளின் ஆதரவு நிச்சயம் தேவையாகும். எனவே தேர்தலைக் காரணமாகக் கொண்டே இந்திய பிரதமர் இலங்கை வரவில்லை. அவர் வருகை தராததன் காரணமாக நாம் இந்தியாவுடன் முரண்பட வேண்டிய அவசியமும் இல்லை என்றார். (அ-2)

# அனைத்து நாடுகளையும் ஒரேவிதமாக நடத்துங்கள்

## சர்வதேசத்திடம் இலங்கை கோரிக்கை

(கொழும்பு)

சர்வதேச சமூகம் அனைத்து நாடுகளையும் ஒரே விதமாக நடத்த வேண்டும்.

அத்துடன் அரசியல் காரணிகளின் அடிப்படையில் நாடுகள் தொடர்பில் பக்கச்சார்புத் தன்மை காண்பிக்கக் கூடாது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

காலி பேச்சுவார்த்தை கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் மற்றும் ஈடுபட்ட நாடுகளை ஒரே விதமாக சர்வதேச சமூகம் நடத்த வேண்டும்.

சமுத்திரங்கள் நாடுகளை பிளவுபடுத்தவில்லை எனவும், கலாசார மற்றும் ஏனைய ரீதியில் பிணைப்புகளை ஏற்படுத்தி வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

மீன்பிடித்துறை மட்டுமன்றி கடல் வள ஆராய்ச்சி, சட்டவிரோத ஆட்கடத்தல், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பில் நாடுகளுக்கு இடையில் புரிந்துணர்வு ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமானது என அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# மாற்றாற்றலுள்ளோர் தின விழா

வலிகாமம் கல்வி வலயம் விசேட கல்வி வள நிலையம் நடத்தும் மாற்றாற்றலுள்ளோர் தின விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/இணுவில் இந்துக் கல்லூரியில் வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் சிறுவர் நீதவான் நீதிமன்ற நீதிபதி கே.ஜீவராணி, சிறப்பு விருந்தினராக பிரபல சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான ஏ.எஸ். அற்புதராஜ், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் ஸ்ரீநதியா நகை மாளிகை உரிமையாளர் என்.சத்தியரூபன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இவ் விழாவில் குழு இசை, குழு நடனங்கள், பரிசில் வழங்கல் ஆகியன இடம் பெறவுள்ளன. (அ)





**யாழ்.மாநகர சபை முன்பள்ளி சிறார்களின் கண்காட்சியும் கலைநிகழ்ச்சியும் அண்மையில் நல்லூர் மாநகர முன்பள்ளி பண்டாரமாளிகை வளவில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிடுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.**

# லங்கா சீமெந்து நிறுவனத்தில் பணிபுரிந்தோருக்கு பணிக்கொடை

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவனத்தில் பணிபுரிந்த 57 உத்தியோகத்தர்களுக்கான பணிக்கொடைக் கொடுப்பனவுகள் நாளை வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட தொழில் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதன்படி குறித்த உத்தியோகத்தர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையை எடுத்து வருவதுடன், வங்கிப்புத்தகத்தின் நிழற்படப் பிரதி, 25 ரூபா பெறுமதியான முத்திரை ஆகியவற்றையும் எடுத்து வர வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கொடைக் கொடுப்பனவு பெறுவோர் பின்வருமாறு:

எம்.தேவகுமார், எஸ்.சிறீநாதன், ரி.தியாகலிங்கம், எஸ்.லோகநாதன், ஏ.தவராஜா, எஸ்.தேவலோகேஸ்வரன், எஸ்.சிவராஜகுமார், எஸ்.நித்தியானந்தன், எஸ்.செல்வானந்தன், ரி.தயானந்தன், எம்.ஜோன்பற்றிக், ஜி.அன்ரன் மகேசன், என்.சண்முகரத்தினம், பி.எஸ்.விஜய்குமார், கே.குகதாசன், எஸ்.யோகேஸ்வரன், ரி.பரராஜசிங்கம், எவ்.வரதபவன், கே.அருளோதி, டபிள்யூ. வின்னேஸ்வரராஜா, எ.பவளநாதன், ரி.ஞானசேகரம், கே.வைரவநத்னம், கே.சிவராஜா, எம்.செல்வரத்தினம், ரி.கணேசமூர்த்தி, எஸ்.வேலுசாமி, எஸ்.நாகேஸ்வரன், கே.திருக்குமரன், எம்.பி.குணரத்தினம், ரி.வரதராஜன், எஸ்.பாலசிங்கம், ஆர்.ராஜகுமார், வி.சதானந்தன், எம்.ஞானேந்திரன், கே.தவராஜா, ரி.வசந்தராஜா, எஸ்.கமல், கே.சிவலோகநாதன், எம்.புவனேஸ்வரன், ரி.வேல்முருகன், ஆர்.நாகராஜா, கே.மகாதேவன், கே.மனோகரன், கே.நவரத்தினம், ரி.தயாளகுமார், ரி.யோகேஸ்வரன், ஜே.ரத்தினபோஸ், பி.செல்வநாயகம்,எம்.கணேசலிங்கம், வி.அருளானந்தம், பி.வரதராஜா, என்.ராஜலிங்கம், எஸ்.தேவகுணாளன், எஸ்.வாமதேவன், என்.சந்திரசேகரம், எஸ்.பஞ்சலிங்கம். (அ-5)

# நாட்டில் 12 ஆயிரத்து 925 சிறார்கள் சிறுவர் இல்லங்களில் வாழ்கின்றனர்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள 403 சிறுவர் இல்லங்களில் 12ஆயிரத்து925 சிறார்கள் உள்ளதாக சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டில் வரவு செலவு திட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக 237.4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்தில் வாய் மூல விடைக்காக ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. பி. ஹரிசன் எழுப்பியிருந்த கேள்விக்கான விடை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒட்டு மொத்தமாக 237.4 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், நிறுவனங்களில் உள்ள பிள்ளைகளின் திறமைகளை விருத்தி செய்வதற்காக மட்டும் 28.1 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு பிள்ளைக்கும் திறமைகளை விருத்தி செய்ய மாகாண அடிப்படையில் வெவ்வேறு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி வட மத்திய மாகாணத்திலுள்ள பிள்ளை ஒன்றுக்கு 11 ஆயிரம் ரூபாவும், தென் மாகாணத்தி லுள்ள பிள்ளை ஒன்றுக்கு 14ஆயிரத்து 750 ரூபாவும், ஊவா மாகாணத்திலுள்ள பிள்ளை ஒன்றுக்கு ஆயிரத்து 900 ரூபாவும் மேல் மாகாணத்திலுள்ள பிள்ளை ஒன்றுக்கு 668 ரூபாவும், கிழக்கு மாகாணத்திலுள்ள பிள்ளை ஒன்றுக்கு 270 ரூபாவும், வட மாகாண பிள்ளை ஒன்றுக்கு 398 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)



# சிறுவர் அரங்கம்

651

## ஆறாவது முட்டாள்!

அரசர் கிருஷ்ணதேவராயருக்கு அன்று விபரீதமான ஓர் ஆசை ஏற்பட்டது. அவர் அப்பாஜியிடம், "அமைச்சரே, இன்று மாலை ஆறு மணிக்குள் நம் தலைநகரான விஜய நகரை நீர் நன்றாகச் சுற்றிப் பார்த்து, ஆறு முட்டாள்களின் விலாசத்தைக் குறித்துக் கொண்டு வாருங்கள்," என்று ஆணையிட்டார்.

"முட்டாள்களின் முகவரி எதற்கு?" என்று பணிவுடன் கேட்டார் அப்பாஜி.

"வீணாக விளக்கம் கேட்க வேண்டாம். சொன்னதைச் செய்யும்!" என்று அரசர் கண்டிப்பாகக் கூறினார்.

அரசர் விருப்பப்படி முட்டாள்களைத் தேடி அலைந்தார் அப்பாஜி. அந்தி நேரத்திற்குள் ஆறு முட்டாள்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்கள் விலாசத்தைக் குறிக்க வேண்டுமே! எங்கே போவது? எப்படி முட்டாள்களைச் சந்திப்பது?

அப்பாஜி இரண்டு மணி நேரம் மாறு வேடமணிந்து முட்டாள்களைத் தேடினார். யாரையும் காணோம். நகர எல்லையை ஒட்டிய மரத்தின் நிழலில் சிறிது நேரம் நின்றார்.

அப்போது ஒருவன் கழுதை மீது ஏறி வந்தான். அவன் தலை மீது ஒரு புல்கட்டினைச் சுமந்து கொண்டிருந்தான்.

"ஐயா, கழுதை மீது இருக்கும் நீர் ஏன் புல்கட்டினைச் சுமந்துக் கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டார் அப்பாஜி.

"உமக்கு அறிவு இருக்கா? என் கழுதைக்கு வயதாகிவிட்டது. ரொம்பவும் தளர்ந்து விட்டது அதனால், என்னை மட்டுமே சுமக்க இயலும். இந்தப் புல்கட்டினையும் சேர்த்துச் சுமக்க இயலாது. ஆகவே, நான் புல்கட்டினைச் சுமந்து செல்கிறேன்," என்றான்.

அப்பாஜிக்கு ஒரே மகிழ்ச்சி. தான் தேடி வந்த முட்டாள்களில் ஒருவன் அகப்பட்டுக் கொண்டானே! அவனிடம் சாமர்த்தியமாகப் பேசி அவனது விலாசத்தைக் கேட்டுக் குறித்துக் கொண்டார்.



சிறிது தூரம் சென்றதும் அருகில் உள்ள ஒரு மரத்தின் நுனி கிளையில் ஒருவன் உட்கார்ந்துக் கொண்டு மரத்தை வெட்டிக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்த அப்பாஜி,

"ஐயா! இப்படி உட்கார்ந்துக் கொண்டு வெட்டினால் நீங்கள் கீழே விழுந்து விடுவீர்கள்.

அந்த பக்கமா உட்கார்ந்து வெட்டுங்க," என்றார்.

"ஏன்யா... நான் என்ன மடயன்னு நெனச்சியா... நான் இப்படி உட்கார்ந்துகிட்டு மரத்தை வெட்டினா இந்த மரக்கிளை கீழேவிழும். நீ உடனே தூக்கிகிட்டு ஓடலாம்னு பார்த்தியா? அதுக்காகத் தானே நான் இங்க உட்கார்ந்துகிட்டு வெட்டுறேன்," என்றான்.

"சே! உங்க புத்திசாலித் தனம்யாருக்கு வரும்... உங்க வீட்டு முகவரியை கொடுங்க..." என்று வாங்கிக் கொண்டார்.

அடுத்து பாட்டி ஒருத்தி அடுப்பை பற்றவைக்க மிகவும் போராடிக் கொண்டிருந்தார்.

"பாட்டி என்ன பிரச்சினை? என்றார் அப்பாஜி, "ஐயா! இது நல்லா காய்ஞ்ச விறகு தான். மண்ணென்ணெய் இல்லை. தண்ணியும், மண்ணென்ணெயும் ஒரேமாதிரி தானே இருக்கு அதனால இந்த விறகுகளில நல்லா தண்ணிய ஊத்தி எரிய வைக்க முயற்சி செய்றேன் எரியவே மாட்டேங்குது," என்றாள். சிரித்துக்கொண்டே அவளது முகவரியையும் குறித்துக் கொண்டார் அப்பாஜி.

அடுத்த முட்டாள் அவ்வளவு எளிதில் கிடைக்கவில்லை. இன்னும் மூன்று முட்டாளைத் தேடியாக வேண்டும்! ஒரு மணி நேரமே உள்ளது.

ஆற்றங்கரைக்குச் சென்றார் அப்பாஜி. அங்கே ஒருவன் குளித்து முடித்துவிட்டு இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தார். அப்பாஜி அவனிடம்,

"தாங்கள் எதைத் தேடிக் கொண்டு அலைகிறீர்கள்?" என்று விசாரித்தார்.

அவன், "ஐயா, நான் என் உடைகளையும் கொஞ்சம் பணத்தையும் ஓர் இடத்தில் வைத்துவிட்டுக் குளித்தேன். குளித்துவிட்டு வந்து பார்த்தால் பணத்தையும், உடைகளையும் காணோம்," என்று கவலையுடன் கூறினான். "ஏதாவது அடையாளம் வைத்து இருந்தாயா?" "ஆமாம், அடையாளத்தையும் காணோம்." "என்ன அடையாளம்?"

"வானத்தில் வெண்மேகம் ஒன்றிருந்தது. அதை அடையாளமாகக் கொண்டு அதன் அடியில் அவற்றை வைத்தேன்."

அவனது முட்டாள்தனத்தைப் புரிந்து கொண்ட அப்பாஜி அவன் பெயரோடு விலாசத்தையும் குறித்துக் கொண்டார்.

மாலை ஆறு மணி அப்பாஜி அரசனிடம் விரைந்து சென்றார். நான்கு முட்டாள்களுடைய விலாசத்தையும் கொடுத்தார்.

கிருஷ்ணதேவராயர் அவற்றைப் பார்த்தார். முட்டாள்களின் விபரங்களை அறிந்து ரசித்து சிரித்த அரசன், "அமைச்சரே, இன்னும் இரண்டு முட்டாள்களின் விலாசம் எங்கே?" என்று கேட்டார்.

அப்பாஜி, "அரசே, ஒரு பெரிய சாம்ராஜ்ஜியத்தின் மந்திரி நாள் முழுவதும் முட்டாள்களைத் தேடிக் கொண்டு அலைந்தது முட்டாள்தனமல்லவா! ஆகவே, எனது விலாசத்தை ஐந்தாவதாக எழுதிக் கொள்ளுங்கள்," என்று பணிவோடு வேண்டினார். அரசரும் அப்பாஜியின் முகவரியை எழுதிக் கொண்டார்.

பிறகு, "அமைச்சரே, ஆறாவது முட்டாளின் விலாசம் எங்கே?" என்று அரசர் ஆர்வத்துடன் கேட்டார்.

"அரசே, கோபித்துக் கொள்ளாதீர்கள்! உங்கள் விலாசம் உங்களுக்குத் தெரியாதா? ஒரு நாட்டின் அமைச்சருக்கு என்ன வேலை கொடுக்க வேண்டும் என்று ஒரு ஒழுங்கு கிடையாதா? நாம் அறிவாளிகளைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களால் பல நன்மைகளைப் பெற வேண்டுமே தவிர, முட்டாள்களைத் தேடிக் கண்டு பிடித்து, அவர்களது தொடர்பால் நம்மையும் முட்டாளாக்கிக் கொள்ளக் கூடாதல்லவா!" என்று உருக்கமாகக் கூறினார். அரசனுக்குத் தான் செய்த தவறு புரிந்து விட்டது. தன் கையிலிருந்து நான்கு முட்டாள் களின் விலாசத்தையும் உடனே கிழித்து எறிந்தார். அப்பாஜியின் அறிவுக்கூர்மையையும் துணிச்சலையும் பாராட்டி அவருக்குப் பரிசு அளித்தார்.

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1781-கூலிகளை ஏற்றிச்சென்ற சொங் என்ற கப்பல் மாலுமிகள் காப்புறுதிக்காக 133 ஆபிரிக்கர்களைக்கொன்று கடலுக்குள் எறிந்தனர்.
- 1830-போலந்தில் ரஷ்யாவின் ஆட்சிக்கெதிராக புரட்சி வெடித்தது.
- 1855-துருக்கியில் தாதியர் பயிற்சிக்காக புளோரன்ஸ் நைட்டிங்கேள் நிதியம் நிறுவப்பட்டது.
- 1877-தோமஸ் அல்வா எடிசன், போனோகிராஃப் என்ற ஒலிப்பதிவுக் கருவியை முதற்தடவையாகக் காட்சிப்படுத்தினார்.
- 1915-கலிபோர்னியாவில் சாண்டா கட்டலீனா தீவின் பல முக்கிய கட்டடங்கள் தீயில் எரிந்தன.
- 1922- ஹவார்ட் கார்ட்டர் பண்டைய எகிப்தின் துட்டன்காமுன் மன்னனின் கல்லறையை பொதுமக்களின் பார்வைக்கு திறந்துவிட்டார்.
- 1929-ஐக்கிய அமெரிக்காவின் ரிச்சார்ட் பயேர்ட் தென் முனை மேல் பறந்த முதல் மனிதரானார்.
- 1945-யூகொஸ்லாவிய சமஷ்டி மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1947-பாலஸ்தீனத்தைப் பிரிப்பதென ஐ.நா. பொதுச் சபை முடிவெடுத்தது.
- 1950-வட கொரியா மற்றும் சீனப் படைகள் ஐ.நா படைகளை வடகொரியாவிலிருந்து வெளியேறும்படி செய்தனர்.
- 1961-நாசாவின் மேர்க்குரி- அட்லஸ் 5 விண்கலம் சிம்பன்சி ஒன்றை ஏற்றிக் கொண்டு விண்ணுக்கு அனுப்பப்பட்டது. இது பூமியை இரு தடவைகள் சுற்றிவந்து புவேர்ட்டோ ரிக்கோவில் இறங்கியது.
- 1982-ஐ.நா பொது அவை சோவியத் படைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து உடனடியாக விலகும்படி சோவியத் ஒன்றியத்தைக் கேட்டது.
- 2006-அணுவாயுதங்களை எடுத்துச்சென்று 700 கி.மீ தூரம் உள்ள இலக்குகளைத் தாக்கக் கூடிய ஷாகீன் 1 என்ற ஏவுகணை சோதனையை பாகிஸ்தான் வெற்றிகரமாக நடத்தியது.

### பிறப்புக்கள்

- 1889-எட்வின் ஹபிள், வானிலையாளர் (இ.1953)

### இறப்புக்கள்

- 1989-மருதகாசி, திரைப்படப் பாடலாசிரியர் (பி.1920)
- 1993-ஜே.ஆர்.டி.டாடா, இந்தியாவின் முதன்மையான தொழிலதிபர்களுள் ஒருவர், இந்திய வானூர்திப் போக்குவரத்தின் முன்னோடி (பி.1904)
- 2008-ஜோர்ன் அட்சன், டென்மார்க் கட்டடக் கலைஞர் (பி.1918)

### மேர்க்குரித் திட்டம்



மேர்க்குரித் திட்டம் என்பது மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது விண்வெளித் திட்டமாகும். இத்திட்டம் 1959 இல் ஆரம்பித்து 1963 வரை தொடர்ந்தது.

இத்திட்டம் மொத்தம் 20 தானியங்கிகளைக்கொண்டு சென்றபோதும் இவற்றில் சிலவே வெற்றிகரமானதாக இருந்தன. இவற்றின் முதல் 4 பயணங்களில் மனிதரல்லாத விலங்குகளே விண்வெளிக்கு அனுப்பப் பட்டிருந்தது.

மேர்க்குரி- அட்லஸ் 6 என்ற விண்கலம் பெப்ரவரி 20, 1960 இல் விண்ணுக்கு முதன்முதலில் அமெரிக்காவின் மனிதனைக் கொண்டு சென்றது.

# கைகளை நம்புவோம்! கைரோகைகளை அல்ல...

**கேள்வி:-** எல்லாம் செய்து விட்டேன். ஆனாலும் வெற்றி கழுவும் மீனில் நழுவும் மீனாக இருக்கிறதே?

சத்குரு:-சில சமயங்களில் எதேச்சையாக, அதிர்ஷ்டவசமாக சில விடயங்கள் உங்களுக்குச் சாதகமாக நிகழ்ந்துவிடலாம். அப்படிக் காற்று உங்கள் பக்கம் வீசும் சமயத்திற்காக நீங்கள் காத்திருந்தால், நல்ல விடயங்கள் உங்கள் கல்லறையில்தான் நடக்கும். ஏனென்றால், அச்சமயம் வராமல் கூட போய்விடலாம்.

உங்களுக்குத் தெரியுமா? கோடான கோடி தடவை ஒரு திடமான சுவரின் ஊடே நடந்து அதைக் கடக்க முயன்றால், அதில் ஒருமுறை நீங்கள் அதனைக் கடந்துவிட முடியுமென்று குவான்டம் கோட்பாடுகூட சொல்கிறது.

அதில் சிறிய சிக்கல், அந்த கோடான கோடி தடவையைத் தொடுமுன் உங்கள் மண்டையோடு உடைந்திருக்கும்.


நீங்கள் அதிர்ஷ்டத்தை நம்பி வாழும்போது, நீங்கள் பயத்திலும் பதற்றத்திலும் வாழ்கிறீர்கள். நீங்கள் தெளிவான நோக்கத்துடனும் திறமையுடனும் வாழும்போது உங்களுக்கு எது நடந்தாலும் நடக்காவிட்டாலும் உங்களுக்கு நடப்பவை மேல் உங்களுக்கு ஆளுமை இருக்கும்.

அதுதான் ஸ்திரமான வாழ்க்கை.

**தோல்வியில் தொலைவதை நிறுத்துங்கள்!**

உறுதியோடு இருக்கும் ஒரு மனிதனுக்குத் தோல்வி என்பதே கிடையாது. ஒருநாளுக்கு 100 முறை நீங்கள் கீழே விழுந்தால் அவை நீங்கள் கற்கும் 100 பாடங்களாகிவிடும். நீங்கள் விரும்புவதை உருவாக்குவதில் உறுதியுடன் இருந்தால் உங்கள் மனம் ஒரே திசையில் நிலைத்துவிடும்.

## வெற்றியை நோக்கிய எண்ணமும் உணர்வும் ஒன்றுசேர்ந்தால் மட்டுமே அது சாத்தியம்..!




உங்கள் மனம் இருக்கும் திசையில் உங்கள் உணர்ச்சிகளும் ஒன்றிவிடும். ஏனென்றால், நீங்கள் சிந்திக்கும் விதமாகத்தான் நீங்கள் வாழ்க்கையை உணரும் விதமும் இருக்கும். உங்கள் எண்ணமும் உணர்வுகளும் ஒன்றுசேர்ந்தால் உங்கள் சக்திகளும் உங்கள் உடலும்கூட அத்திசையில் ஒருங்கிணைந்துவிடும்.

இவை அனைத்தும் ஒருமுகமாகின்ற போது நீங்கள் விரும்புவதை உருவாக்கி உங்கள் கனவை நிஜமாக்கும் திறமை அபாரமாகிவிடும். பல விதங்களில் நீங்கள் படைப்பாளராகிவிடுவீர்கள்.


(தொடரும்)



ஆன்மீகம் 52

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# மீண்டும் "புதிய சந்தேகத்தை" கிளப்பியிருக்கும் ராஜீவ் கொலை வழக்கு



...அதன்பிறகு சுப்ரீம் கோர்ட்டில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்த சி.பி.ஐ. டைரக்டர், "எனக்கு அரசு செயலாளர் அந்தஸ்து வேண்டும். தன்னாட்சி தர வேண்டும்" என்ற விதத்தில் சில அதிகாரங்களை சுப்ரீம் கோர்ட் மூலமாகவே கோரினார். அதற்கும் மத்திய அரசு ஒப்புக் கொள்ளவில்லை. இது போன்ற பரபரப்பான சூழ்நிலையில், "சி.பி.ஐ. சட்டபூர்வ அங்கீகாரம் பெற்ற அமைப்பு அல்ல" என்று அனைவரையும் தூக்கி வாரிப் போடும் தீர்ப்பு ஒன்றை அஸ்ஸாம் உயர்நீதிமன்றம் வழங்கியது. இந்தத் தீர்ப்பு அரசியல் வட்டாரத்தில் மட்டுமல்ல. அதிகார வட்டாரத்திலும் அதிர்வு அலைகளைப் பாயவிட்டது. சி.பி.ஐ. விசாரிக்கும் அல்லது ஏற்கனவே விசாரித்து தீர்ப்புச் சொன்ன வழக்குகள் எல்லாம் என்ன ஆகும் என்ற அச்ச உணர்வு தொற்றிக் கொண்டது. இது போன்ற நேரத்தில் அவசர அவசரமாக சுப்ரீம் கோர்ட்டை அணுகிய மத்திய அரசு அஸ்ஸாம் உயர் நீதிமன்ற உத்தரவுக்கு ஸ்டே பெற்றது. இனி "சி.பி.ஐ. அமைப்பு சட்டபூர்வ அங்கீகாரம் பெற்ற அமைப்பா? இல்லையா?" என்ற வாதம் இந்திய சுப்ரீம் கோர்ட்டில் நடைபெறும் என்று எதிர்பார்க்கலாம்.

இது மாதிரியான விஷயங்களால் மட்டுமின்றி, சி.பி.ஐ.யில் பணிபுரிந்து வெளியில் வந்த அதிகாரிகளின் பேட்டிகளாலும் சி.பி.ஐ. அமைப்பின் தனித்துவம், மகத்துவம் எல்லாம் சீர்குலைக்கப்படுகிறது. 22 வருடத்திற்கு முன்பு விசாரித்த வழக்குகளில் எல்லாம் எஸ்.பி.க்கள் அளிக்கும் பேட்டிகள் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்கு வலுவூட்டும் அதே நேரத்தில், "எடுப்பார் கைப்பிள்ளை போல் இருக்கும்" சி.பி.ஐ. அமைப்பு என்பது ஒன்று தேவையா என்ற கேள்வியை மக்கள் மத்தி யில் எழுப்பியிருக்கிறது. ஒரு புறம் சி.பி.ஐ. அமைப்பு பற்றிய விவாதம் என்றால் இன் னொரு புறம் ராஜீவ் கொலையாளிகளுக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனை பற்றிய விவாதம். எல்லாம் இனி தமிழகத்தில் என்ன? அகில இந்திய அளவிலேயே சூடு பிடிக்கத் தொடங்கும்.

தியாகராஜனின் பேட்டியை மனதில் வைத்து ஏற்கனவே பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் ராமதாஸ் அறிக்கை விடுத்துவிட்டார். அவர், "பொதுவாக குற்றவழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்கு மூலங்கள் சாட்சியங்களாக கருதப்படுவதில்லை. ஆனால், பேரறிவாளனை கொடுமைப்படுததி பெறப்பட்ட வாக்குமூலத்தை ராஜீவ் கொலை வழக்கில் சாட்சியமாக ஏற்றுக் கொண்டு அவருக்கு நீதிமன்றம் தூக்குத் தண்டனை அளித்தது. ஆனால் இப்போது அந்த வாக்குமூலமே திரித்து பதிவு செய்யப்பட்டது என்று சி.பி.ஐ. எஸ்.பி. தியாகராஜனே ஒப்புக் கொண்டுள்ளார்.

தண்டனை வழங்க அடிப்படையாக அமைந்த சாட்சியமே தகர்ந்து விட்ட பிறகு பேரறிவாளனின் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும்" என்று கூறியிருக்கும் அவர், "இதையும் மீறி தூக்கிலிட்டால் நீதியை தூக்கிலிடுவதற்கு சமம்" என்று வேதனையுடன் கருத்துச் சொல்லியுள்ளார். பேரறிவாளன் மட்டுமல்ல, முருகன், சாந்தன் ஆகிய மூவரின் தூக்குத் தண்டனையையும் ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள ராமதாஸ், "வாக்குமூலத்தை திரித்துப் பதிவு செய்த அதிகாரிகள், அவர்களுக்கு துணையாக இருந்த அதிகாரிகள் அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ஆக்ரோஷமான அறிக்கை விடுத்துள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ள கருத்தில், "சில குற்றவாளிகள் தப்பினாலும், ஒரு நிரபராதி கூட தண்டிக்கப் படக்கூடாது என்பதுதான் குற்றவியல் சட்டத்தின் அடிப்படை நெறியாகும். அந்த அடிப்படையில் தற்போது வெளியாகியுள்ள இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை (எஸ்.பி. தியாகராஜனின் பேட்டி) காணும் போது, நடந்து முடிந்த வழக்கு விசாரணையிலும், அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பிலும் மிகப்பெரய கேள்விக்குறி எழுந்துள்ளது. எனவே இனியாவது இது பற்றி முழு விசாரணை நடத்திட அரசு முன்வர வேண்டும். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இத்தனை ஆண்டுகள் சிறையிலே தன் இளம்பிராயத்தைச் செலவிட்ட பேரறிவாளனுக்கு நியாயத்தை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்று முதல் முறையாக ராஜீவ் கொலை வழக்கு பற்றி முழு விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை பகிரங்கமாக வைத்திருக்கிறார்.


பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள், "இந்த பேட்டி எங்களுக்கு நம்பிக்கை தருகிறது. எஸ்.பி.யின் பேட்டியை வரவேற்கும் அதே நேரத்தில் என் மகனுக்கும் கொலைக்கும் சம்பந்தமில்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது" என்று கூறியிருக்கிறார். ஆனால் சி.பி.ஐ. முன்னாள் டைரக்டர் கார்த்திகேயன் (ராஜீவ் கொலை வழக்கை விசாரிதத சிறப்பு புலனாய்வு அமைப்பின் தலைவர்), "ராஜீவ கொலை வழக்கு விசாரணை என்பது இது வரை நடைபெற்ற விசாரணைகளிலேயே மிகவும் நியாயமானது. நீதிமன்றம் பாராட்டியுள்ளது. "இந்த விசாரணை எதிர்கால வழக்கு விசாரணைகளுக்கு ஒரு முன்மாதிரி" என்று இன்டர்போல் பாராட்டியிருக்கிறது.

இவ்வழக்கில் உள்ள குற்றவாளிகளுக்கு எதிராக செயல்பட வேண்டும் என்று எங்களுக்கு எதுவும் இல்லை. நாங்கள் எங்கள் கடமையை மட்டுமே செய்தோம்" என்று பிரபல ஆங்கில நாளேடான "தி இந்து" விற்கு பேட்டியளித்துள்ளார். ஆனால் அவரே, " தூக்குத் தண்டனை பெற்றவரை 20 வருடங்களுக்குப் பிறகு தூக்கிலிட வேண்டுமா?" என்பது விவாதத்திற்குரியது. அந்த விஷயத்தில் ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற நீதியரசர் கே.டி.தாமஸ். வி.ஆர். கிருஷ்ண அய்யர் போன்றோரின் கருத்துக்களுடன் நான் உடன்படுகிறேன் என்று கூறியிருக்கிறார் கார்த்திகேயன்.

சி.பி.ஐ.எஸ்.பி. தியாகராஜனின் பேட்டி ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் மீண்டும் "புதிய சந்தேகத்தை" கிளப்பியிருக்கிறது. அதுவும் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்குத்தண்டனையை எதிர்த்து வழங்கப்பட்ட கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. அப்படி நிராகரிக்கப்பட்டது செல்லாது என்று உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன பெஞ்ச் முன்பு வரும் நேரத்தில் வெளியாகும் இந்த "ஒப்புதல் வாக்குமூலங்கள்" மூன்று தூக்குத் தண்டனை கைதிகளின் வாழ்விலும் வெளிச்சத்தைக் காட்டும் கைவிளக்கு போல் அமைந்திருக்கிறது என்பதுதான் தமிழகத்தில் நிலவும் கருத்து. இந்த விஷயத்தில் ஏற்கனவே இவர்களின் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டும் என்று தமிழக சட்டமன்றமே ஒரு மனதாக தீர்மாணம் நிறைவேற்றியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

-இணையம்- (முற்றும்)

# திரைப்படங்களை இலவசமாய் காண்பதற்கு புதிய இணையத்தளம்




பேஸ்புக், கூகுள் ப்ளஸ் போன்றதொரு சமூக இணையதளம் வேர்ல்டுப்ளோட். இத்தளம் தனது பயனர்களுக்காக இருபத்தைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படங்களை பார்ப்பதற்கான வசதியை தற்பொழுது அறிமுகப்படுத்தியுள்ளது. இதுபற்றி இந்நிறுவனத்தின் தலைவர் புஸ்கர் மகட்டா கூறியதாவது ஒன்லைனில் நாங்கள் இலவச திரைப்பட சேவையை அறிமுகப்படுத்தியுள்ளோம். எங்கள் தளத்தின் மூலம் காணக்கிடைக்கும் திரைப்படங்கள் தற்போதைக்கு ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் அமைந்திருக்கும். விரைவில் அனைத்து இந்திய மொழிகளிலும் திரைப்படங்களை காண்பதற்கான வழிவகைகள் செய்ய உள்ளோம்"

18000 க்கும் மேற்பட்ட ஆங்கிலப்படங்கள், 7000த்திற்கும் மேற்பட்ட இந்தியப்படங்கள் என வேர்ல்டுப்ளோட் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. உலகளவில்ஏனைய தேசிய மொழிகளிலும், குறிப்பாக எதிர் வரும் காலங்களில் பிரஞ்சு, இத்தாலி போன்ற வெளிநாட்டு மொழிகளில் அமைந்த படங்களையும், இந்தியர்களுக்கான மொழிகளில் தமிழ், மலையாளம், கன்னடம், பெங்காலி போன்ற மொழிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான திரைப்படங்களை இலவசமாக காண முடியும் என்றும் அந்நிறுவனத் தலைவர் கூறியுள்ளார்.

அக்காலப் படங்கள் முதல், இக்காலத்தில் சமீபத்தில் வெளியிட்ட திரைப்படங்கள் வரை இந்த தளத்தில் காண முடியும் என்பது சிறப்பு. அதைப்பற்றி அந்நிறுவனத்தலைவர் கூறும் பொழுது, 1890 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கறுப்பு வெள்ளைப் படங்கள் முதல் 2013 தற்காலத்தில் உருவாக்கப்பட்ட வண்ணத் திரைப்படங்கள் வரை அனைத்து திரைப்படங்களையும் வேர்ல்ட் ப்ளோட் தளத்தின் மூலம் இலவசமாக அனைவருமே பார்க்க முடியும் என்றார்.

இந்த இலவசமாக சேவையை லேப்டாப், ஐபேட், ஆண்ட்ராய்ட் போன்கள், டேப்ளட் போன்றவைகளிலும் கண்டுகளிக்கும் வகையில் தளத்தின் இன்டர்பேஸ் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாமர மக்களும் பார்க்கும் வண்ணம் வீட்டில் இருக்கும் வண்ணத் தொலைக் காட்சிகளிலும் இத்தளத்தின் படங்களை பார்க்கலாம் என அவர் தெரிவித்துள்ளார். இத்தளத்தில் இணைந்து இதில் உள்ள பல்வேறு வசதிகளைப் பயன்படுத்தலாம்.

**இணையத்தள முகவரி:-** http://worldfloat.com/

# தமிழில் குறுந்தகவல் அனுப்ப புதிய மென்பொருள்

## தமிழ் இளைஞன் சாதனை





தற்போதும் கூட சில செல்போன் நிறுவனங்கள் தமிழில் குறுந்தகவல் அனுப்பும் வசதியைச் செய்திருந்தாலும் அதைப் பயன்படுத்துவதில் சிரமம் உள்ளது. இதற்குத் தீர்வு காணும் வகையில் செல்போனில் உள்ள எண விசைப் பலகையிலேயே தமிழில் தட்டச்சு செய்யும் புதிய முறையை புதுக்கோட்டையைச் சேர்ந்த டி. வாசுதேவன் வடிவமைத்துள்ளார். புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வாசுதேவன் என்பவர் தனது உறவினருடன் சேர்ந்து கடந்த 2008 ஆம் ஆண்டு கைபேசியில் எளிதாக தமிழ் எழுத்துகளை டைப் செய்வதற்கான மென்பொருளை உருவாக்கினார. இதையடுத்து, வெறும் எண்களாலேயே கணனி விசைப்பலகை மற்றும் கைபேசியில் தமிழில் தகவல்களை பரிமாறி கொள்ளும் மென்பொருளுக்கான காப்புரிமையையும் பெற்றார்.

விரைவில் இந்த சேவையை பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்தி கொள்ளலாம் என்று கூறியுள்ள வாசுதேவன், http://www.easytype.in/ என்ற இணையதளம் மூலம்வரும்ஜனவரி20 ஆம்திகதிவரை மென பொருளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் தமிழ் உட்பட மொத்தம் 16 மொழிகளில் பூஜ்யம் முதல் ஒன்பது வரையிலான நியூமரிக் வடிவில்தான் இந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார் தெரிவித்தார். தற்போது அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், இந்த மென்பொருளை அதிக செலவில் உருவாக்கியுள்ளதாகவும் இந்த முயற்சிக்கு அரசு உதவ வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார் வாசுதேவன்.

# பிறக்கவிருக்கும் குழந்தையின் முகத்தை அறிய புதிய மென்பொருள்


திருமணம் முடிந்ததும் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்ப்பது தமக்கான வாரிசை தான். அது ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி யார் ஜாடையில் குழந்தை இருக்கும் என ஆவலாக இருக்கும்.

இந்த கவலையை நீக்க இந்த சின்ன் சொப்ட்வேர் பயன்படுகின்றது. 18 எம்.பி. கொள்ளளவு கொண்ட இதனை http://www.4shared.com/file/N-vXJbAE/BabyMakerSetup.html? முகவரியில் பதிவிறக்கம் செய்யவும். இதனை இன்ஸ்டால் செய்ததும் உங்களுக்கு கீழ் கண்ட விண்டோ ஓப்பன் ஆகும்.



இதில் முதலில் அப்பாவின்(ஆண்) புகைப்படத்தினையும் அடுத்துஅம்மாவின் (பெண்) புகைப்படத்தினையும் தேர்வு செய்யவும். அடுத்து குழந்தை உங்களுக்கு ஆணா பெண்ணா என்பதனையும் தேர்வு செய்யவும்.

ஓகே.கொடுங்கள். சில நிமிடங்கள் காத்திருப்பிற்கு பின்ன்ர் இறுதியாக உங்களுக்கான குழந்தை புகைப்படம் வெளியாகும்.



நீங்களும் உங்கள் துணைவியாரும் உருவத்திற்கு ஏற்ப உங்களுக்கான குழந்தையின் புகைப்படத்தினை காணலாம்.




நான் அஜித்தின் புகைப்படத்தினையும் அவரது மனைவி ஷாலினியின் புகைப்படத்தையும் இணைத்து பயன்படுத்தினேன். அவரது மகள் ஜாடையில் புகைப்படம் வந்துள்ளது. நீங்களும் பயன்படுத்திப்பாருங்கள்.

# Samsung Galaxy S5 கைபேசியின் சில தகவல்கள்




சம்சுங் நிறுவனத்தினால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட Samsung Galaxy S4 ஸ்மார்ட் கைபேசியானது மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்நிலையில் Samsung Galaxy S5 ஸ்மார்ட் கைபேசியினை வடிவமைக்கும் முயற்சியில் அந்நிறுவனம் மும்முரமாக களமிறங்கியுள்ளது.தற்போது இக்கைபேசி தொடர்பான சில பரபரப்பான தகவல்கள் வெளியாக ஆரம்பித்துள்ளன.

அதன் அடிப்படையில், இக்கைப்பேசி மூலம் ஒன்றிற்கு மேற்பட்ட நபர்கள் (Multi-Party Video Conferencing) ஒரே நேரத்தில் வீடியோ அழைப்பினை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தவிர 5 அங்குல அளவுடையதும். 2560x1440 Pixel Resoution உடையதுமான தொடுதிரையினைக் கொண்டிருப்பதுடன், 64-bit Processor, 4GB RAM, 16 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா போன்றவற்றினையும் கொண்டிருக்கும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஆங்கில மொழித்திறன் பயிற்சி செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை காலை 8.30 மணி முதல் பி.ப. ஒரு மணி வரை யாழ்.சின்மயா மிஷன் அனுசரணையில் ஆங்கில மொழித்திறன் விருத்திக்கான பயிற்சி செயற்றிட்டம் திருமதி ஏ.ஒல்கா (அதிபர் ஜேர்மன்) என்பவரால் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் 2012, 2013 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை கலந்து கொள்ளுமாறு அதிபர் திருமதி வி.சண்முகரட்ணம் அறிவித்துள்ளார். (அ)

## வெளிநாட்டு பணியாளர்கள் குறித்து மாவட்ட பணியகங்களில் முறையிடலாம்

### அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(கொழும்பு)

வேலைவாய்ப்புக்கென வெளிநாடு செல்லும் ஊழியர்கள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்வதாயின் இனி மேல் கொழும்புக்கு செல்லத் தேவையில்லை.

அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலுள்ள அலுவலகங்களில் முறைப்பாடுகளைச் செய்யலாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.



முறைப்பாடு செய்யப்பட்டு 50 விநாடிகளுக்குள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பதிவு செய்யப்பட்ட முகவருடன் தொடர்பு கொண்டு பிரச்சினை குறித்து அறிவிக்கும். 48 மணிநேரத்துக்குள் குறித்த பிரச்சினைகள் தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

அத்துடன் இவை தொடர்பில் நடமாடும் சேவைகளும் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன. சட்டவிரோதமாக தங்கியிருந்தவர்களுக்கு கடந்த ஜூலை மாதம் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

அப்போது 16 ஆயிரம் பேருக்கு விசா கிடைத்து நாடு திரும்பினர். மேலும் தற்காலிகமாக பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக தங்கியிருந்த 5ஆயிரத்து500 பேர் பொது மன்னிப்புக் காலத்தில் தம்மை சட்டரீதியாக பதிவு செய்துகொண்டுள்ளனர்.

மேலும் ஒரு பெண் வெளிநாடு செல்வதாக இருந்தால் அவரது குடும்பப் பின்னணி பற்றிய அறிக்கை சமர்ப்பிப்பது அவசியம். (அ-2)

## பயிற்சிப்பட்டறை

(கரவெட்டி)

ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் ஒழுங்கமைப் பட்ட உதை பந்தாட்ட நிர்வாகமும் முகாமைத்துவமும் என்னும் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை மலேசியாவில் இடம் பெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் பொதுச் செயலாளர் தி.வரதராசன் பங்குபற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-9-24)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதனால் அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு ஒன்றியம் கேட்டுள்ளது. (அ)

## வடக்கு மக்களின் போசாக்கிற்கு ஜப்பான் 228 மில்.ரூபா நிதி ஒதுக்கீடு

வடக்கு இடம்பெயர் மக்களின் போசாக்கு நிலைமை குறித்து ஜப்பான் கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக வடக்கு இடம்பெயர் சிறுவர், சிறுமியரிடையே அதிகளவில் போசாக்கு பிரச்சினை காணப்படுவதாக ஜப்பான் சுட்டிக்காட்டியுள்ளது.

சிறுவர், சிறுமியருக்கு இன்னமும் உரிய ஊட்டச்சத்து கிடைக்கப் பெறவில்லை என ஜப்பான் தெரிவித்துள்ளது. இதனால் ஜப்பான், உலக உணவுத் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 228 மில்லியன் ரூபா உதவியை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

உணவுத் திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் குறித்த உதவியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கண்காணிப்பு செய்யும் எனவும் மீன்ரின்கள் உள்ளிட்ட பல்வேறு உணவுப்பொருட்கள் வழங்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

உணவுப் பொருள் உதவியின் ஊடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும் என ஜப்பான் நம்பிக்கையையும் வெளியிட்டுள்ளது. (அ-2)

## தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்தால் அரசாங்கத்தை மாற்றியிருக்கலாம்

### மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி

(கொழும்பு)

**அமைச்சர் ரவூப் ஹக்கீம் அன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்திருந்தாராயின் இன்று முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்கள். முஸ்லிம் தலைமைத்துவம் இனிமேலாவது சரியான பாதையை தேர்ந்தெடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாணசபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மாகாண சபைக்கான அதிகாரங்களை முதலமைச்சருக்கே வழங்கப்பட வேண்டும். வடக்கில் இராணுவ குடும்பங்களை குடியேற்றி சிறுபான்மையினரை அழிககவே ஜனாதிபதி திட்டம் தீட்டுகின்றார்.

அன்று கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்திருக்குமாயின் இன்று முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கமாட்டார்கள். அரசாங்கத்தை நம்பி உரிமைகளை இழந்திருக்கவும் முடியாது.

நாட்டில் இன்று சிறுபான்மை மக்கள் அடக்கப்பட்டு வாழ்கின்றனர். இதற்கு சிறுபான்மைத் தலைமைத்துவம் முக்கிய காரணமாகும். தனித்தனியாக அரசாங்கத்திற்கு எதிராக போராடாது தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டிருப்பின் அரசாங்கத்தை மாற்றியமைத்திருக்கமுடியும்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பெற்றெடுக்க வேண்டுமெனில் தமிழ், முஸ்லிம் இனங்கள் ஒன்றிணைய வேண்டும்.


இரு இனத் தலைவர்களும் ஒற்றுமையுடனும் விட்டுக் கொடுப்புடனும் செயற்பட வேண்டும். குறிப்பாக முஸ்லிம் மக்களின் நன்மைகளுக்காக முஸ்லிம் தலைவர்கள் இனியாவது சரியானதொரு பாதையை தெரிவு செய்யவேண்டும்.

மேலும் மாகாணசபையின் அனைத்து அதிகாரங்களையும் முதலமைச்சரிடம் ஒப்படைக்க வேண்டும். இதில் ஆளுநர் எவ்விதத்திலும் தலையிடக் கூடாது. மாகாணசபை என்றால் என்ன



வென்பதை முதலில் அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். அதை விடுத்து மாகாண சபையிலும் இராணுவத்தினரின் தலையீடுகளை உள்நுழைத்து நாட்டை இராணுவ மயப்படுத்தக்கூடாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரச குடும்பத்தினர் நாட்டை இராணுவ மயப்படுத்தி இராணுவ ஆட்சியை நடத்தவே முயற்சிக்கின்றனர். அரசியல்வாதிகளால் செய்யமுடியாததை இராணுவத்தின் மூலம் செயற்படுத்தவே அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றார். (அ-2)



யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு நாவலர் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணக்கம் செலுத்துவதை படத்தில் காணலாம்.

## பொதுநலவாய உச்சி மாநாட்டின் போது அமைச்சர் வீரவன்ச எங்கே சென்றிருந்தார்?

### ஐ.தேசிய கட்சி கேள்வி

(கொழும்பு)

இலங்கையில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகள் நடைபெற்ற காலத்தில், தேசப்பற்றாளர் அமைச்சர் விமல் வீரவன்ச எங்கு மறைந்திருந்தார் என ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகள் நடைபெற்ற போது இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரியிருந்தார் என ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாணசபை உறுப்பினர் நிரோசன் பாதுக்க தெரிவித்துள்ளார்.

அமர்வுகள் நடைபெற்ற காலத்தில் விமல் வீரவன்ச தலைமறைவாகியிருந்தார் எனவும் அவர் சுட்டிக் காட்டிக்காட்டியுள்ளார்.

அமர்வுகள் நடைபெற்ற காலத்தில் விமல் வீரவன்ச எங்கிருந்தார் என கண்டு பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 5இலட்சம் ரூபா சன்மானம் வழங்கத் தீர்மானித்திருந்த போதிலும் எவராலும் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை என அவர் தெரிவித்துள்ளார். ஜாதிக ஹெல உறுமய கட்சியும் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகள் நடைபெறும காலத்தில் அமைதியைப் பேணி வந்ததாக தெரிவித்துள்ளார்.

சனல்4 ஊடகவியலாளர்களை நாட்டுக்குள் அனுமதித்த அரசாங்கம், ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டமையை தேசத் துரோகமாகவும் தாம் கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

சனல்4 ஊடகவியலாளர்களை, நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதியளித்த பின்னர் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

மாறாக அவர்களுக்கு அனுமதியை மறுத்திருக்கலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் நாட்டின் நன்மதிப்பிற்கே களங்கம் ஏற்படும் என நிரோசன் பாதுக்க தெரிவித்துள்ளார். (அ-2)

## பிரதமராகும் கனவு என்னிடம் இல்லை-சபாநாயகர் கூறுகிறார்

பிரதமர் பதவிக்கான எந்தவொரு கனவும் தனக்கு கிடையாது என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 5ஆம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மங்கள சமரவீர எம்.பியின் வாழ்த்துக்கு பதிலளிக்கும் முகமாகவே சபாநாயகர் இதனைத் தெரிவித்தார்.

மங்கள சமரவீர எம்.பி. தனது உரையின் ஆரம்பத்தில் முன்னதாக உரையாற்றிய அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் உரையை விமர்சித்ததுடன், அமைச்சர் தினேஷ் குணவர்தன அடுத்த பிரதமர் பதவிக்காக முயற்சிப்பதாகவும் அப்பதவிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவாகவிருப்பதாகவும் கூறி, இருவருக்கும் தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் கூறிய சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பிரதமர் பதவிக்கான எந்தக் கனவும் என்னிடம் கிடையாது என்று சிரித்தவாறே கூறினார். (அ-2)

# முத்தையா முரளீதரனுக்கு ஒரு மனம் திறந்த மடல்...

-புகழேந்தி- தங்கராஜ்-


© AFP/Getty Images

பெருமதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய முன்னாள் கிரிக்கெட் பந்துவீச்சாளர் முத்தையா முரளீதரனுக்கு வணக்கம். (மன்னிக்கவும்... ஆயுபோவன்!)

*போர்* என்கிற போலியான பெயரில் இலங்கை அரசு நடத்திய திட்டமிட்ட இனப்படுகொலை நடவடிக்கையில் காணாமற்போன தங்களது தந்தையையோ தனயனையோ, கணவனையோ, குழந்தையையோ, மகனையோ, மகளையோ தேடித்தேடி அலைந்து கொண்டிருக்கும்- எங்கள் ஈழச் சகோதரிகளின் கண்ணீரைக் கொச்சைப்படுத்தும் உங்களது லேட்டஸ்ட் தூஸ்ரா பார்த்து அதிர்ந்து போய்த்தான் இதை எழுதுகிறேன்.

கடந்த நான்கைந்து ஆண்டுகளாக உலர்ந்தும் உலராத கண்ணீரோடு தங்கள் உறவுகளைத் தேடித்திரிந்து கொண்டிருப்பவர்கள் அந்தச் சகோதரிகள். தங்களது உறவு மலர்கள் உயிர்த்திருக்கின்றனவா? உதிர்ந்துவிட்டனவா? என்பதைக்கூட அறியமுடியவில்லை அவர்களால்!

சுற்றிலும் இராணுவம் சூழ்ந்து நிற்கிறது. அவர்கள் கையில் மட்டுமா ஆயுதம் இருக்கிறது! மெய்யாகவே சொல்கிறேன்... அவர்கள் மெய்யிலும்! (பேசாப்பொருளையும் பேசவைக்கிறீர்கள் முரளி..!)

எங்கள் உறவுகள் எங்கே என்று நீதி கேட்டு வீதிக்கு வந்து போராடக்கூட முடியாத நிலை. அப்படிப் போராடினால், கர்ணாமற் போனவர்களுக்காக போராடும் சகோதரிகளின் பெயர்களும், அந்தக் காணாமற் போனோர் பட்டியலில் இணைந்துவிடக் கூடும். காணாமற்போகும் எங்கள் சகோதரிகள் உடனடியாகக் கொல்லப்படுவார்கள் என்றா நினைக்கிறீர்கள் முரளி! சிறுகச் சிறுக சிதைத்துக்கொள்ளத்தானே...

கற்பழிப்பை ஒரு ஆயுதமாகவே தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்துகிறது சிங்கள இனவெறி இராணுவம் என்று கிரெனெடா நாட்டின் கறுப்பினச் சகோதரி கிமாலி பிலிப் சொல்வது உங்கள் கவனத்துக்கு வரவே இல்லையா, முரளி? இலங்கை இராணுவத்தின் பாலியல் பலாத்காரங்கள் விசாரிக்கப்பட்டாக வேண்டும் என்று பிரித்தானியா வெளிப்படையாக அறிவிப்பது உங்கள் காதில் விழவே இல்லையா?

வட கிழக்கில் நிறுத்தப்பட்டிருக்கும் இராணுவத்தினரால் அங்குள்ள சிறுமிகள் உள்ளிட்ட சகோதரிகள் அச்சத்துடனேயே வாழ வேண்டியுள்ளது... பாலியல் பலாத்காரம் தொடர்கிறது. என்றெல்லாம் கண் கலங்கச் சொன்ன ஒரு கண்ணியமான பெண்மணியை அறிவீர்களா? அந்தப் பெண்மணிதான் நவநீதம்பிள்ளை.

தமிழ் வம்சாவளியில் பிறந்தவர் என்றாலும், நவநீதம்பிள்ளை தென்னாபிரிக்க பிரஜை. இலங்கைக்கும் தென்னாபிரிக்காவுக்கும் பல ஆயிரம் மைல் தூரம். அங்கேயிருந்து கொண்டு எங்கள் சகோதரிகளின் கண்ணீர் ஈரத்தைப் புரிந்து கொள்ள நவநீதம்பிள்ளையால் முடிகிறது. இலங்கை மண்ணிலேயே இருந்தும் அந்தக் கண்ணீரின் வலியையும் வேதனையையும் புரிந்து கொள்ள முடியவில்லையே உங்களால்!

நீங்கள் ஒரு உலக சாதனையாளர். டெஸ்ட் கிரிக்கெட்டில் 800 விக்கெட். ஒரு நாள் போட்டிகளில் 500 க்கு மேல் என்று சாதித்திருப்பவர். சர்வதேச அங்கீகாரம் பெற்ற வர் என்கிற அடிப்படையில், சில உண்மைகளை நீங்கள் வெளிப்படையாகப்பேச முடியாது என்று சொல்கிற நண்பர்கள் இருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்காக நீங்கள் குரல் கொடுக்க முடியாது என்கிற நயத்தகு நாகரிகம் நியாயமானதாகவே இருக்கட்டும்! கொலைகாரர்களைக் காப்பாற்ற, கொலை செய்யப்படுவோர் மீதே பந்து வீசுகிறீர்களே அது என்ன நியாயம்?

உலகறிந்த ஒரு விளை யாட்டு வீரர்- ஒரு சர்வதேச பிரபலம்- இதைப் பற்றியெல்லாம் பேச முடியாது என்றெல்லாம் சொல்கிற மோதாவிகள், நவநீதம்பிள்ளையை யாரென்று நினைத்தார்கள்! அவர் உலகின் உயர் பதவி ஒன்றை வகிப்பவர். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் ஆணையாளர். உலகுக்கே பதில் சொல்ல வேண்டியவர். அவசரப்பட்டு எதுவும் பேசி விட முடியாது அவரால்! அதற்காக- எவர் வீட்டுக் குழந்தையையோ எவரோ சீரழித்தால் எனக்கென்ன என்கிற மலிவான மனநிலை அவருக்கு இல்லை முரளி!

உங்களுக்குத் தெரியுமா? இலங்கையில் போர் என்கிற பெயரில் சிங்கள இனவெறி இராணுவம் மேற்கொண்ட இன அழிப்பை அம்பலப் படுத்தியதில் நவநீதம்பிள்ளை க்கு முக்கிய பங்கு இருக்கிறது என்றால் அதை மூடிமறைப் பதில் இந்தியாவுக்கு முக்கிய பங்கு இருக்கிறது.

இலங்கையின் மலையகத் தமிழர் என்றாலும், இந்தியக் குடியுரிமை பெற்ற அயல்நாட்டவர் என்கிற உரிமையைப் பெற்றிருக்கீறீர்கள் நீங்கள். விசா இல்லாமலேயே நீங்கள் இந்தியாவுக்குச் செல்ல முடியும். உயிர்ப்பலி கேட்கும் தேயிலைத் தோட்ட வேலைகளுக்காக இந்தியாவிலிருந்து வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டு கசிக்கிப் பிழியப்பட்ட மலையக உறவுகள் அத்தனை பேரும் இந்த உரிமையைப் பெறத் தகுதியானவர்களா இல்லையா? இந்த உரிமையை அனுபவித்துவரும் நீங்கள், என்றைக்காவது உங்கள் உறவுகள் இந்த உரிமையைப் பெற குரல் கொடுத்ததுண்டா...?

நீங்கள் ஒரு சுயநலமி என்று இங்கு குற்றஞ்சாட்டவில்லை. பொது நலன் குறித்து கவலைப்படாத ஒரு கிரிக்கெட் ஆட்டக்காரர் என்று மட்டுமே சொல்லத் தோன்றுகிறது.

பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்படும் எங்கள் சகோதரிகள்பற்றி கூட கவலைப்படமாட்டேன் என்கிற அளவுக்கு உங்களை நீங்களே அம்பலப் படுத்தியுள்ள நிலையில் இதைச் சுட்டிக்காட்டாது இருக்க முடியவில்லை.

தங்களது உயிரைப் பற்றியும் தாங்கள் எதிர் கொள்ள நேரும் ஆபத்துக்கள் பற்றியும் கவலைப் படாது, காணாமற்போன தங்கள் உறவுகளுக்காக ஆவேசத்தோடு நியாயம் கேட்கும் எங்கள் சகோதரிகளின் கால் தூசுக்குக் கூட மதிக்க முடியாது- உங்களது 800 விக்கெட்டையும் 500 விக்கெட்டையும்!

பிரித்தானிய பிரதமர் டேவிட் கெமரூனின் யாழ்ப்பாண பயணத்தின்போது நல்லூரில் திரண்ட சகோதரிகளில் ஒரு சிறுமி- என் அண்ணா எங்கே? பாடசாலைக்குக்கூட போக முடியாத தவிப்புடன் திரிகிறேன் என்று தன் கைப்பட எழுதிய அட்டையுடன் கண் கலங்க நின்றிருந்தாள்.

என்னை உன் அண்ணனாக ஏற்றுக்கொள் சகோதரி என்று நீங்கள் உச்சிமுகர்ந்திருந்தால் தமிழ் கூறும் நல்லுலகம் உங்களை மெச்சி மகிழ்ந்திருக்காதா என்ன?

அலரிமாளிகையிலிருந்து பாராட்டுப் பத்திரம் கிடைத்தால்தான் எதிர்காலம் பத்திரமாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள் நீங்கள்!

நீங்கள் உச்சரித்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் கள்ளிப் பாலில் ஊற வைத்தவை...

நடந்த இனப்படுகொலையை மூடி மறைப்பதற்காக நடந்தது போர் என்கிற பொய்யை விதைப்பதற்காகவும் கோடிக் கணக்கான பணத்தைக் கொட்டுகிறது கொழும்பு.

இனப் படுகொலை என்கிற வார்த்தை தன்னை மட்டுமே குறிவைக்கும் வார்த்தை என்பதால் போர்க் குற்றம் என்கிற இரு தரப்பைக் குறி வைக்கும் வார்த்தையைப் பரவலாகப் படரவிடுகிறது.

அதே வார்த்தையைப் பயன்படுத்தி போர் என்பதற்கு இரண்டு பக்கம் உள்ளது. என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்கிற விஷத்தைக் கக்குகிறீர்கள் நீங்கள். இதற்கு என்ன அர்த்தம்? பல்லாயிரக்கணக்கான தமிழ்ச் சகோதரிகள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்படலாம் என்றா? ஒன்றரை லட்சம் பேர் கொல்லப்படலாம் தான் என்றா?

போர் என்பதற்கு இரண்டு பக்கம் உள்ளது என்கிற உங்களது அரிய கண்டுபிடிப்பின் அடிப்படையில்- நடந்தது போர் என்றே வைத்துக் கொள்வோம்.

எங்கள் சகோதரிகளைச் சீரழித்ததற்கும் சிறுமைப்படுத்தியதற்கும் போர்தான் காரணம் என்றும் வைத்துக்கொள்வோம்.

நீங்கள் சொல்கிற அந்தப் போரில் இராணுவ தரப்பினரை மற்றைய தரப்பினர் அவமதித்ததாக இன்றுவரை எவருமே சொல்லவில்லை யே... ஏன்?

நடந்தது போர்தான் என்றால், மனித உரிமை மீறல்கள் இரு தரப்பிலுமே நடந்தது என்றால் ஒரு தரப்பின் மீதான புகார்களுக்கு மட்டும் ஆதாரங்கள் வெளியாகிக் கொண்டிருப்பது ஏன்? என்று எப்போதாவது யோசித்துப் பார்த்திருக்கிறீர்களா? இதையெல்லாம் கொஞ்சமும் யோசிக்காது, 20,30 தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளைக் காணவில்லை என்று அழுது புலம்பி ஆர்ப்பாட்டம் செய்வதால் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் உண்மையாகிவிடுமா என்று ஆணவமாகப் பேசலாமா?

கடந்த காலத்தைப் பற்றி எதற்காகப்பேச வேண்டும்? எதிர்காலத்தைப் பற்றி பேசுவோம் என்று போதிக்கிறீர், வாகரை முதல் முள்ளிவாய்க்கால் வரை பங்கர்களைத் தேடிதேடிப் பதுங்கியிருந்தீர்களென்றால் இப்படியொரு உபதேசத்தை உங்களால் உதிர்த்திருக்க முடியுமா?

எங்கள் உறவுகள் மீது விமானங்களிலிருந்து மாறிமாறி குண்டு வீசிக்கொண்டிருந்த போது உலகின் ஏதோவொரு மைதானத்தில் பந்து வீசிக்கொண்டிருந்தீர்கள். அப்போது நீங்கள் வாய் திறக்காததை நாங்கள் யாராவது கண்டித்தோமா?

தன் இனத்துக்கு எதிரான அநீதிகளைத் தட்டிக் கேட்கக்கூட அஞ்சி நடுங்கும் பிரபலங்கள் எல்லா இனங்களிலும் இருப்பார்கள். அதுபோன்று தன் இனம் இழைக்கிற அநீதியைத் தட்டிக் கேட்கத் தயங்காதவர்களும் எல்லா இனத்திலும் இருக்கிறார்கள்.

அஞ்சி அஞ்சி சாகிறவர்களுக்கு உங்கள் மாதிரியானவர்கள் அடையாளம் என்றால், சாவுக்கும் அஞ்சாது நேர்படப் பேசியவர்களின் அடையாளமாக இருந்தவர் லசந்த விக்கிரமசிங்க. *தன்னுடைய சொந்த மக்களையே விமானத்திலிருந்து குண்டு வீசிக் கொல்லும் ஒரே நாடு என்னுடைய இலங்கை* என்று மனம் திறந்து பேசினார். கொல்லப்பட்ட மக்களுக்காக அவர்கள் கொல்லப் பட்ட நேரத்திலேயே நீதி கேட்டவர்.

தமிழினத்துக்குச் செய்கிற துரோகத்துக்காக என்று சொல்லவரவில்லை, சிங்கள சிநேகிதர்கள் மீதான உங் களது விசுவாசத்துக்காக லங்கா ரத்னா பட்டமேகூட உங்களுக்குக் கொடுக்கப்பட லாம் என்பது சிலரின் யூகம். அந்த யூகத்தை மறுக்க முடியவில்லை.

# கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள்/ மேல் மாகாணம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1. சுருக்கமான விடை எழுதுக

1.பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக

ஆறுமுக முடையாய் ஆறிரண்டு தோளுடையாய்

2. மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபம் என்பதில் வந்த அணியை எழுதுக

3. உண்ணல். உன்னல் என்ற சொற்களை பொருள் வேறுபட வாக்கியங்களில் வைத்து எழுதுக.

4.தன்வினை வாக்கியத்தைப் பிறவினை வாக்கியமாக எழுதுக

1. மாணவன் வகுப்பறையில் படித்துக் கொண்டிருந்தான்

5. பின்வரும் வாக்கியங்களின் வேற்றுமைப் பொருளை எழுதுக

1.வகுப்பறையில் மாணவர்கள் இருந்தனர்.

2.வகுப்பறையிலிருந்து மாணவர்கள் வெளியேறினர்.

6.பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைத் தெரிவு செய்து வாக்கியத்தைத் திருப்பி எழுதுக.

நான் நன்றாகப் படித்தேன். நான் பரீட்சையில் சித்தியடைந்தேன்

(ஆனால். எனினும். அதனால்)

7.பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக எழுதுக.

ஒன்பது மணி நிறுவைக்குப் பொறகு வந்து இன்னைக்கு எடுத்துக் காட்றன் பார்த்துக் கொள்

8.பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயர்களைத் தெரிவு செய்க.

முதலாளி. வானொலி. பெண்ணியம். நீரேரி

9.விளம்பரம் எழுதுவதற்கான காரணங்கள் இரண்டு தருக.

10. சுருக்கம் எழுதும் படிமுறைகளை ஒழுங்குபடுத்தி எழுதுக.

1.துணைக்கருத்துக்களைக் குறிப்பெடுத்தல்

2.தன் கூற்று வாக்கியத்தைப் பிறர் கூற்றாக எழுதுதல்

3.தரப்பட்ட பகுதியைத் தெளிவாக வாசித்தல்

4.பிரதான கருத்தைத் தெரிவு செய்தல் (10x2=20 புள்ளிகள்)

2.பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. பொருத்தமான தலையங்கம் இடுக.

அ. வளர்ந்து வரும் உலகின் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் நாட்டின் கல்வித் திட்டம் அமைய வேண்டும்.இந்த வகையில் எமது நாட்டிலும் க.பொ.த. உயர்தர வகுப்பிற்குத் தொழில்நுட்ப பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் மாணவர்கள் அடையக் கூடிய நன்மைகளையும் அதனை மேம்படுத்தக் கூடிய நடவடிக்கைகளையும் விளக்கும் வகையில் விளக்கக் கட்டுரை.

ஆ.மாணவர் மன்றங்கள் பாடசாலையில் மாணவரது அறிவு திறன் மனப்பாங்கை வளர்ச்சியடையச் செய்கின்றன என்பதனை வலியுறுத்தி மாணவர் மன்றத்தில் ஆற்றும் சொற்பொழிவு

இ.தொடர் சாதனங்களின் பெருக்கம் உலகையே சுருங்க வைத்துள்ளது. இந்த வகையில் முகப் புத்தகம் (Face book) மாணவர் கல்வியில் ஏற்படுத்தும் தாக்கத்தின் சாதக பாதக நிலைமைகளை எடுத்துக்கூறும் வகையில் இருவருக்கிடையே இடம்பெறும் உரையாடல்

ஈ.உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு என்ற கருவை மையமாகக் கொண்டு ஒரு சிறுகதை. (25 புள்ளிகள்)

3. கீழே தரப்பட்ட உரைப்பகுதியின் கருத்தை 40-45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.

ஒருவருக்கு தமது உள்ளத்திலெழும் எந்தவித கருத்தையும் பிறருக்கு உணர்த்தும் தொடர்பு சாதனங்களுள் முதன்மையானது மொழியாகும். உலகத்தில் நாம் காணும் பொருட்கள், அவற்றின் பண்புகள், அவை பற்றிய கட்புலனாகாக் கருத்துக்கள் ஆகியவற்றை உணர்த்தும் கருவியாக மொழி அமைந்துள்ளது. எனவே கருத்தை அது பொருளாயினும் பண்பாயினும் அதை உணர்த்துவது மொழியாய் இருப்பதனால் மொழி ஒரு கருத்துப் பொருளாகும். மொழி கருத்துக்களை உணர்த்து முகத்தான் அது சைகை மொழியாகவே இருந்தது என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். குழந்தை பசிவரும் போது அழுவதும் அது தீர்ந்து சிரிப்பதும் சைகை மொழியே ஆகும். ஆனால் சைகை மொழியால் எல்லாக் கருத்துக்களையும் உணர்த்த முடியாது. குழந்தையின் மொழி வளர்ச்சி சைகை நிலையிலிருந்து சூழலில் கேட்கும் ஒலி நிலைக்கு மாறுவது நாம் கண்ட அனுபவமாகும். இதேபோன்று மொழி எழுத்து வடிவம் பெறும் முன்னரே பல்லாயிரம் வருடம் ஒலி வடிவமாகவே இருந்தது. இன்றும் நம் நாட்டில் குறவர்களுடைய மொழி ஒலி வடிவிலேயே உள்ளது. ஒரு பொருளையோ அதன் பண்பாட்டையோ அல்லது அப்பாற்பட்ட சிந்தனைக் கருத்தையோ வெளிப்படுத்துவதற்கு ஒலியே கருவியாக அமைந்தது. (10 புள்ளிகள்)

4.பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரண வாக்கியங்களில் விடை எழுதுக.

கையினில் உலக்கை பற்றிக்
காந்தளில் உதிரம் பாய
மெய்யினில் வியர்வை சிந்த
விழியினில் அருவி பாய
நெய்யினின் முடித்த கூந்தல்
நெற்குத்துங் கொடுமை காணா
மையினில் திகழ் வேற்கண்ணார்
அரம்மையர் மறுகிச் சோர்ந்தார்

1. இப்பாடலில் கைகள் எதனைப் பற்றியிருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

2. இப்பாடலில் குறிப்பிடப்படும் பெண் செய்யும் வேலை யாது?

3.அரம்மையர் மறுகிச் சோர்ந்தார் என்பதினூடாகக் கவிஞர் கூறுவது யாது?

4. பின்வரும் தொடர்கள் எவ்வகை அணி என எழுதுக.

1. காந்தளில் உதிரம் பாய

2.வேற்கண்ணார்

ஒத்த சொல் எழுதுக

உதிரம் மெய் (10 புள்ளிகள்)

5. சிறந்த நற்பண்புகளால் உயர்வடைந்த நண்பனைப் பாராட்டும் விதத்தில் நூறு சொற்களில் ஒரு கடிதம் எழுதுக. (15 புள்ளிகள்)

## தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி (II), பகுதி (III)

1. 2. 3. 4. ஆகிய வினாக்களுக்கும் 5. 6. 7 ஆம் வினாக்களில் ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.

1. சுருக்கமான விடை எழுதுக.

1. வெண்ணிலா வேயிந்த வேகமுனக் காகாதே. இத்தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

2. கையில் வெண்ணெயிருக்க நெய்தேடி அலையும் வெள்ளியரும் உண்டென்பதை இன்று நேராக அறிந்தேன் .இக்கூற்றில் கையில் வெண்ணெயிருக்க நெய்தேடி அலையும் வெள்ளியர் என்பதன் பொருளை எழுதுக.

3. நந்திக் கலம்பகத்தில் நிகழ்பவை எனக் குறிப்பிட்டவற்றுள் இரண்டு தருக.

4. குடிபுறங் காத்து ஓம்பிக் குற்றம் கடிதல்

வடு அன்று வேந்தன் தொழில் இக்குறளின் பொருளை எழுதுக.

5. .......... இனி அழையாதே! உன்குரல் இனி அவன் காதில் கேளாது

மங்கையர் திலகமே. இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது.

6. கு.ப.ரா. என்ற சுருக்கப் பெயரினைக் கொண்டவர் யார்? நந்தி என்ற புனைப்பெயர் பெற்றவர் யார்?

7. குழந்தை ரோகினியின் துன்பத்திற்கு காரணம் இரண்டு எழுதுக.

8.......... தம்பி

கழற்றிட கழற்றிட துணி புதிதாய்

வண்ணப் பொற் சேலைகளாய் அவை

வளர்ந்தன வளர்ந்தன வளர்ந்தனவே என்ற பாரதியார்

கவி நயப்பாடத்தில் வரும் இவ்வரிகளில் குறிப்பிடப்படும் இருவரும் யாவர்.

9.கல்வியே அழியாச் செல்வம் எனும் கட்டுரையில் முற்காலத்தில் பெண்கள் எல்லோரும் கல்வியில் சிறந்தவர்கள் என்பதற்கு உதாரணமாகக் கூறப்பட்டவற்றுள் இரண்டு பெண்மணிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

10. நளவெண்பாவில் தமயந்தியின் சுயம்வரத்திற்கு வருகை தந்த விண்ணவர் நால்வரையும் குறிப்பிடுக.

(10X2=20 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுட் பகுதிகள் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. தடித்த எழுத்திலுள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

அ) விண்ணரசர் எல்லோரும் வெள்கி மனஞ்சுளிக்க
கண்ணகல் ஞாலம் களிகூர- மண்ணரசர்
வன்மாலை தன்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்

ஆ) தம்காதலி யருமைந்தரும் உடனாக வணங்கி
தலைகா! எமதுடல்கா! எமதுயிர் கா அகளங்கா!
கொங்கா! மனதுங்கா! எனமதுரேசா வணங்கும்
கொல்யானை அபங்கா! இவள் கூழலோசை பொறாளே

இ) பாரதியாரின் கவிநயத்தை ஒரு சிறு வியாசத்தினுள்ளே விளக்கிக் காட்டுதல் இயலாது. இயற்கையிலுள்ள அழகையும் பசுமையையும் இனிமையையும் ஒருங்கு திரட்டிப் பாடலாக்கி நமக்கு அளித்திருக்கின்றார். முத்துச்சுடர் போன்ற வெண்ணிலாவும் பத்துப் பன்னிரண்டு தென்னை மரமும் கீற்றும் இளநீரும் காதில் விழுந்த குயிலோசையும் பாட்டுக் கலந்திட ஒரு பத்தினிப் பெண்ணும் பராசக்தியின் காவலும் இருந்தால் இவ்வையகத்தையே தன்னுடைய பாட்டுத் திறமையாற் பாலித்திடக் கூடும்.

ஈ) கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் மறைவான். காலையிலே சேவல் கூவும். வாழைமரம் குட்டி போடும் ,குலையும் தள்ளும். கமுகு. செவ்விளனி. எலுமிச்சை. நந்தியாவட்டம் பூ. அணில். காகம். வண்ணாத்தி இவற்றைப் பற்றிய சங்கதிகளை இங்கிதமாக அப்பா விளக்குவார். கேட்கக் கேட்க அவனுக்கு நேசமான உறவினர் மத்தியில் குதித்து விளையாடுவது போல் செல்லமாக இருக்கும்.

(5X4=20 புள்ளிகள்)

3.ஈழத்துப் புலவர் அச்சுவேலி தம்பிமுத்துப் புலவரின் பழமொழிப் போதனை எனும் நூலில் ஒழுக்கம் தவறினால் ஏற்படும் நிலையையும் ஒற்றுமையே பலம் என்பதையும் எவ்வாறு விளக்குகின்றார்?

அல்லது

தனிப்பாடற் பகுதிகளில் கம்பர் நமச்சிவாயப் புலவர் ஆகியோரின் பாடல்களில் காணப்படும் சிறப்புக்களை மேற்கோள் காட்டி விளக்குக.

(15 புள்ளிகள்)

4. பார்வைகள் எனும் சிறுகதையில் வரும் குழந்தை விமலனுக்கு உதவும் வகையில் தந்தை என்ற பாத்திரத்தின் ஊடாகக் கதையை ஆசிரியர் எவ்வாறு வளர்த்துச் செல்கிறார்.

அல்லது

நட்சத்திரக் குழந்தை என்னும் சிறுகதையில் வரும் குழந்தை ரோகினிக்கு உதவும் வகையில் தந்தை என்ற பாத்திரத்தின் ஊடாகக் கதையை ஆசிரியர் எவ்வாறு வளர்த்துச் செல்கிறார்.

(15 புள்ளிகள்)

5. 6.7 ஆம் வினாக்களுள் ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.

5. கவிச்சக்கரவர்த்தி எனும் பாடத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் பாத்திரங்கள் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

ஒட்டக்கூத்தர். கம்பர். குலோத்துங்க சோழன்

(10புள்ளிகள்)

6.நந்திக்கலம்பகத்திலே மறவரின் வீரம் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது.

(10 புள்ளிகள்)

7. கல்வியானது ஆண் மக்களுக்குத்தான் வேண்டுமே அல்லாமல் பெண்களுக்கு வேண்டுவதில்லை என்ற கூற்றை கட்டுரை ஆசிரியர் எவ்வாறு நிராகரிக்கிறார் என்பதை கல்வியே அழியாச் செல்வம் என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

# உட்கட்சி பூசல்களில் காலத்தை விரயமாக்காது அரசாங்கத்தை தோற்கடிக்க முயற்சியுங்கள்

## எதிர்க்கட்சிக்கு மனோ அறிவுரை



(கொழும்பு)

**உட்கட்சி பிரச்சினைகளால் காலத்தை வீணடித்து எதிர்காலத்தை இழக்காது ஐக்கிய தேசியக் கட்சி இந்நாட்டில் வாழும் சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளைக் கவரும் புதிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவேண்டும். கிராமங்களுக்கு சென்று சிங்கள மக்களுக்கு உண்மைகளை எடுத்துக்கூறும் திட்டம் ஒன்றை ஆரம்பித்து அதை இடை நடுவில் இக்கட்சி கைவிட்டுவிட்டது. அதை விட்ட இடத்திலிருந்து ஐ.தே.க. தொடரவேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் நேற்று முன்தினம் கொழும்பில் ஊடக மாநாடு ஒன்று நடத்தியது. சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்பி, விக்கிரம்பாகு கருணாரத்ன, அசாத் சாலி ஆகியோர் கலந்து கொண்ட இம்மாநாட்டில் மனோ கணேசன் சிங்கள மொழியில் மேலும் கூறியதாவது,

தமிழ் வாக்குகளை வட கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பும், மேல்மாகாணத்தில் நமது கட்சியும் பாதுகாத்து பெற்று கொள்வோம். மலையகத்தில் தமிழ் வாக்குகளை கொண்டுள்ள கட்சிகள் உரிய நேரத்தில் நமது தரப்புக்கு வரும்.

ஆகவே நீங்கள் காலத்தை வீணடிக்காமல் சிங்கள வாக்குகளை பெற்றுக்கொள்ளும் முயற்சியை மேற்கொள்ளுங்கள். நமது சிறுபான்மை வாக்குகளுடன், சிங்கள வாக்குகளும் சேராது. இந்த அரசாங்கத்தை ஒருபோதும் வீழ்த்த முடியாது என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

இன்று ஐ.தே.கவிடம் எஞ்சியுள்ள சிங்கள வாக்குகளையும் சரத் பொன்சேகா கொண்டு போகும் அறிகுறி தோன்றி வருகிறது. இந்த நிலை நீடிக்குமாயின் தமிழ் வாக்கும் இல்லை, சிங்கள வாக்குகளும் இல்லை என்ற நிலைமை ஐ.தே.கவுக்கு ஏற்படும்.

நீண்டகாலமாக நாங்கள் கூட்டு சேர்ந்து பணியாற்றும் கட்சி என்பதாலும், ஐ.தே.க பலமடைய வேண்டும்என நான்விரும்புவதாலும், இந்த அரசாங்கத்தை வீழ்த்த வேண்டுமென்றதேவைஇருப்பதாலும் இதை நான் அக்கறையுடன் பகிரங்கமாக சொல்லுகிறேன்.

இன்று இந்நாட்டில் ஒன்பது மாகாணசபைகள் உள்ளன. இதில் வடக்கை தவிர அனைத்தும் அரசாங்க கட்சி வசம் உள்ளன. வடக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆட்சி நடக்கின்றது. ஆகவே இன்று நடைமுறையில் இந்நாட்டு எதிர்க்கட்சி தமிழ்தேசிய கூட்டமைப்பு தான்.

இன்று இந்த அரசாங்கம் கூட்டமைப்புடன் அதிகம் மோதுவதற்கு இதுவும் ஒரு பிரதான காரணமாகும். அன்று அமிர்தலிங்கம் தலைமையில் நாடாளுமன்றத்தில தமிழர் விடுதலை கூட்டணி எதிர்க்கட்சியாக இருந்து அன்றைய ஐ.தே.க அரசுடன் மோதியது. இன்றும் ஏறக்குறைய அதே நிலைமை தான. இன்று அரசாங்கத்துடன் மோதுவதற்கு வேறு பிரதான எதிர்க்கட்சி நாட்டில் இல்லை. இந்த நிலைமைக்கு ஐக்கிய தேசிய கட்சியின் இயலாமைதான் பிரதான காரணமாகும். இன்று தெற்கில் ஒரு மாகாண சபைகூட ஐ.தே.க விடம் இல்லை.

ஐ.தே.க வசம் இருக்கும் ஒரேயொரு பிரதான சபை கொழும்பு மாநகரசபையாகும். இங்கேயும் இவர்களுக்கு வேண்டிய செயற்பாட்டு பெரும்பான்மையை, நமது ஜனநாயக மக்கள் முன்னணியே வழங்குகிறது. இந்த உண்மை இன்று ஐ.தே.கவில் உள்ள சிலருக்கு மறந்து போய்விட்டது.

இந்த அரசாங்கம் மக்கள் விரோத அரசு. இதை வீழ்த்தியே ஆக வேண்டும். அதற்கான காலம் வந்து கொண்டிருக்கின்றது. இன்று அரசாங்கத்தை ஆதரிக்கும் சில தமிழ், முஸ்லிம் கட்சிகள் கூட நன்றாக நடிக்கிறார்கள்.

அதாவது வேறு வழியில்லாது ஆதரிப்பது போல் நடிக்கிறார்கள். இந்த அரசாங் கத்தை ஆதரிக்க மனசாட்சியுள்ள எந்தவொரு தமிழனுக்கும், முஸ்லி முக்கும் முடியாது.

இந்த நிலையை சிங்கள மக்கள் மத்தியிலும் ஏற்படுத்த வேண்டும். சிங்கள மக்களும் இந்த அரசாங்கத்தை திட்டி தீர்க்கும் அளவுக்கு வந்துவிட்டார்கள். ஆனால அவர்கள் மத்தியில் சென்று அவர்களை அணிதிரட்டும் செயலை யார் செய்வது? அதை ஐக்கிய தேசிய கட்சிதான் செய்ய வேண்டும். இதை நாங்கள் செய்ய முடியாது. நாங்கள் எங்கள் வேலையை உருப்படியாக செய்து வருகிறோம். தமிழ் மக்களை, முஸ்லிம் மக்களை அணி திரட்டி வருகிறோம். ஐ.தே.க சென்று சிங்கள மக்களை அணி திரட்ட வேண்டும். கடந்த காலத்தைபோல் கொழும்பில் வாழும தமிழ் மக்கள் கண்ணை மூடிக் கொண்டு யானை சின்னத்துக்கு வாக்களிப்பார்கள் என ஐதேக நினைக்கக்கூடாது. அந்த காலம் இனறு இல்லை. அது கடந்த மாநகர சபை தேர்தல்கள்மூலம் தெரிந்து விட்டது.

நாம் வாழும் கொழும்பில் அரசியல் ரீதியாக நமது இனம் பலம் வாய்ந்த இடத்தில் இருக்க வேண்டும் என நமது மக்கள் நினைக்கிறார்கள. இதை செய்யக் கூடிய ஆளுமையும், ஆற்றலும் நமது கட்சிக்கு உண்டு என்றும் நமது மக்கள் நினைக்கிறார்கள். எனவே ஒரு தமிழ் வாக்கையும் நாம் எவருக்கும் விட்டு கொடுக்கமாட்டோம்.

இதை எழுதி வைத்து கொள்ளுங்கள். கொழும்பில் தமிழ் மக்களின் ஆதரவு வேண்டுமானால் எம்முடன் கலந்து பேசுங்கள். நமது மக்கள் மீதும், எங்கள் வரலாற்றின் மீதும் நம்பிக்கை வைத்து இதை நான் கூறுகிறேன்.

பெருந்தியாகங்களை செய்து மக்கள் மனதில் இந்த இடத்தை நான் பெற்றுள்ளேன் என்றார். (அ-2)

## குழுநிலை விவாதம் நேரடி ஒளிபரப்பு

குழுநிலை விவாதத்தை பரீட்சார்த்தமாக நேரடி ஒலி, ஒளிபரப்பு செய்ய உத்தேசித்திருப்பதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட விவாதத்தின் ஐந்தாம் நாளான நேற்று முன்தினம் எதிர்த்தரப்பு சார்பாக ஆரம்ப உரையாற்றிய ஜோசப் மைக்கல் பெரேரா எம். பி. சபையில் எம். பிகளின் பிரசன்னம் குறைவாக இருப்பது குறித்து சுட்டிக்காட்டினார்.

எனவே, வரவு செலவுத் திட்ட விவாதத்தை மக்களுக்கு நேரடி ஒலி, ஒளிபரப்பு செய்ய வேண்டும் என கோரினார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் ஆரம்ப நடவடிக்கையாக குழு நிலை விவாதத்தில் இருந்து இதனை முன்னெடுக்க உத்தேசித்திருப்பதாக கூறினார்.

தற்பொழுது பாராளுமன்ற வாகன தரிப்பிடத்தில் வைத்து சபை அமர்வுகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகின்றன என அவர் கூறினார். (அ-2)

## எந்தப் பிரச்சினைக்கும் பௌத்த தர்மத்தில் தீர்வு உண்டு-பிரதமர்

உலகில் எந்த நாட்டில் பிரச்சினைகள் ஏற்படினும் அவற்றுக்கு பௌத்த தர்மத்தில் தீர்வு உண்டு என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் பினாங் தீவுகளில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்குபற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தின் ஊடாக சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும். உலகின சகல நாடுகளிலும் சின்னச் சின்ன பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இந்தப் பிரச்சினைகளுக்கு பௌத்த தர்மத்தின் ஊடாக தீர்வு வழங்க முடியும். இன்று தொழில்நுட்பம் விருத்தியடைந்துள்ளது.

கண்ணுக்கு புலப்படாத கிரகங்களுக்குக்கூட பயணிக்க முடியும். எனினும், இந்த எந்த தொழில்நுட்பத்தினாலும் மனிதரின் மனங்களை நல்வழிப்படுத்த முடியாது. மனிதரின் மனங்களை நல்வழிப்படுத்தும் ஆலோசனைகள் அடங்கிய ஒரே வழி பௌத்த தர்மமாகும்.

பௌத்த துறவிகள் குற்றச் செயலகளில் ஈடுபடுவதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

எனினும், இதனைக் கேட்டு நாம் கலங்கிவிடக் கூடாது, மத வழிபாடுகளுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை நாம் குறைத்துவிடக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)



நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும் கோண்டாவில் பொது நூலகத்தால் நடாத்தப்பட்ட நடமாடும் நூலக சேவை நடைபெற்ற போது...

## பொதுநலவாய தலைவர் பதவிக்கு ஜனாதிபதி மஹிந்த தகுதியற்றவர்

### மங்கள எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு சில விடயங்களை மறைத்து விட்டதென குற்றம் சுமத்தி ஐக்கிய் தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அந்த அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மாவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட சில பலம் மிக்க உறுப்பினர்களிடம் இருந்து தகவல்கள் மறைக்கப்பட்டதாக சர்மா மீது தமது கடிதத்தில் குற்றம் சுமத்தியிருப்பதாக மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிகையில்,

சர்மா மறைத்த தகவல்களில் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான அறிக்கையும் அடங்கும். இதனால் பொதுநலவாய அமைப்பு தனது ஒருமைப்பாட்டை இழந்து விட்டது.

அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர் பதவியை இரண்டு ஆண்டுகள் வகிக்க தகுதியற்றவர்.

இவ்வாறு மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது ஆளும் கட்சியின் வரிசையில் இருந்து பலமான எதிர்ப்புகள் வெளியிடப்பட்டன. (அ-2)

# விபச்சாரத்தில் ஈடுபட்ட நபருக்கு தர்மஅடி

(மல்லாவி)

கணவனும் மனைவியும் வைத்தியசாலைக்குச் சென்றிருந்த நிலையில் அவர்களது வீட்டில் வேறு எவரும் இல்லாத நிலையைப் பயன்படுத்தி விபச்சார பெண் ஒருவருடன் அவ்வீட்டில் இரவும் பகலும் தங்கியிருந்த இருவரில் ஒருவருக்கு வீட்டு உரிமையாளர் தர்ம அடி வழங்கியுள்ளார். மேலும் தலைமறைவாகியுள்ள மற்றவரைத் தேடி வருகின்றனர்.

இச்சம்பவம் மாங்குளத்தில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவருவது,

மனைவியை சம்பவதினத்துக்கு முதல்நாள் வைத்தியசாலையில் அனுமதித்த கணவர் மறுநாளே சம்பவதினம் வீடு திரும்பியுள்ளார்.

வந்தவர் வீட்டில் சில மாறுதல்கள் காணப்படுவதை அவதானித்த நிலையில் முச்சக்கர வண்டி உரிமையாளர் ஒருவர் அவரது வீட்டில் நடைபெற்ற சம்பவம் ஒன்று பற்றி விபரம் கூறியுள்ளார்.

அதன்படி இருவர் பகலும் இரவும் விபச்சாரப் பெண்ணுடன் அவரது வீட்டில் விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்ததாக மேற்படி பெண்ணுக்கும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கும் இடையில் போதை தலைக்கேறிய நிலையில் சச்சரவு. சண்டை ஏற்பட்டதாகவும் அதனால் அப்பெண் நள்ளிரவில் மாங்குளம் நகரத்திற்கு ஓடி வந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் பணம் உட்பட பொருட்களை பறிகொடுத்த நிலையில் ஓடிவந்த அப்பெண்ணுக்கு முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் நின்றவர்கள் பண உதவி செய்து அவரை பேருந்தில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பி வைத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வீட்டில் தங்கிய இவர் குறித்த நபர்களின் பெயர்களையும் அவர் கூறியதையடுத்து மேற்படி வீட்டுக்கு உரிமையாளர் சம்பவத்தில் தொடர்புபட்ட ஒருவருக்கு தர்ம அடி வழங்கியதுடன் தலைமறைவாக உள்ள மற்றவ்ரையும் தேடிவருகிறார். (ம-15)

# பேருந்து நடத்துநர்கள் அநாகரிகமாக நடப்பதாக முறைப்பாடுகள்

## வடமாகாண போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரன்

தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து நடத்துநர்கள் நாகரிகமற்ற முறையில் நடந்து கொள்வதாக அண்மைக்காலத்திலிருந்து முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. இவ்விடயம் தொடர்பில் உரிய தரப்பினர் உடனடியாக உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,


மதகுருமார், பெரியவர்கள், தாய்மார்கள், படித்தவர்கள், பாமரமக்கள் போன்றவர்கள் மீது நடத்துநர்கள் மிகவும் தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துவதாகவும் பெண் பயணிகளை கண்டபடி தொட்டு பஸ் வண்டியினுள் ஏற்றி, இறக்கி விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பஸ் தரிப்பிடம் இல்லாத இடங்களில் நிறுத்தி பயணிகளை ஏற்றுவதும், பயணிகளை ஆடு மாடுகளைப் போல அதிகளவில் ஏற்றிச் செல்வதும் பயணிகளிடமிருந்து பயணத்திற்கான பணத்தினைப் பெற்றுக்கொண்டு பயணச் சீட்டுக்களை வழங்காமலிருப்பதும் பயணிகள் வழங்கும் பணத்திற்கு மீதித் தொகையை அவர்களுக்கு வழங்காமல் விடுவது. முதியவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், அங்கவீனமுற்றோர் மற்றும் மதகுருமார்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் ஆசனங்களை அவர்களுக்கு வழங்காது விடுவதும் அதிகரித்து வருவதாக நாளாந்தம் மக்களினால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

இவை அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் இல்லையேல் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் தனியார் பஸ் வண்டிச்சங்கத் தலைவர்களும் சமாசத் தலைவர்களும் கூடிய கரிசனை எடுத்து மேற்படி விடயங்களை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார். (ம-250)

# மாவீரர்களை நினைவு கூர்ந்த மாகாண சபையினர் மீது தொடரும் தாக்குதல்



தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின வல்வெட்டித்துறையில் உள்ள அலுவலகத்தின் நுழைவாயிலில் இராணுவத்தினர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியுள்ளனர் எனவும் இதற்காக அவர்களுக்கு தமது நன்றிகளை தெரிவித்து கொள்வதாகவும் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உருவம் பொறிக்கப்பட்ட பதாகை கிழித்து எரிக்கப்பட்டதோடு, வடக்கு மாகாண விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் வீட்டின் மீதும், மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் இ.ஆனோல்ட்டின் சகோதரியின் வீட்டின் மீதும் கல்லெறித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 3 மணிமுதல் 4 மணி வரையான நேர இடைவெளியில் இடம்பெற்ற மேற்படிச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சரின் திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள வீட்டில், நேற்று அதிகாலை 3.10 மணியளவில் இனம் தெரியாத நபர்களால் கல்லெறித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளன.

வீட்டிலிருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளதோடு, பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை வீட்டின் வாசலிலிருந்த வீதி மின் விளக்கையும் எரித்து சேதப்படுத்தியுள்ளனர்.

மேலும் அமைச்சரின் வீட்டுக்கு அருகிலிருந்த வீட்டின் மீதும் தாக்குதல் மேற்கொள்ளமுற்பட்டதாகவும் தெரியவருகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் நாள் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், மாவீரர்கள் நினைவாக யாழ்ப்பாணத் திலும், மன்னாரிலும் அமைச்சர் ஐங்கரநேசனின் ஏற்பாட்டில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த மரக்கன்றுகள் நடும் நிகழ்வை ஏற்பாடு செய்த காரணத்தால் மன்னாரில் வைத்து அமைச்சருக்கு முன்னதாக தொலைபேசி அழைப்பின் ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அதனைப் பொருட்படுத்தாது 26 ஆம் திகதி மன்னாரிலும் 27ஆம திகதி யாழ்ப்பாணத்திலும் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் கல்வி அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்ற மரம் நடுகை நிகழ்வையடுத்து நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் நீராவியடிப்பகுதியில் முதலமைச்சரின் உருவம் பொறிக்கப்பட்ட பதாகை கிழித்து தீமூட்டி எரிக்கப்பட்டது.

அத்தோடு இந்த மரம்நடுகை நிகழ்வில் பங்கு கொண்டிருந்த மாகாண சபை உறுப்பினர் ஆனோல்டின், பாஷையூர் பகுதியிலுள்ள சகோதரியின் வீட்டின் கண்ணாடிகள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படிச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-6)

# முல்லை. கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடங்கள்

முல்லை கல்வி வலயத்தின் கீழ் உள்ள 4 பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் தரத்தில் உள்ளவர்கள் அல்லது இலங்கை பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக முல்லை. கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் மாணிக்கவாசகர் ராஜகுமார் அறிவித்துள்ளார்.

இதில் மு/ விசுவமடு ம.வி (1AB), மு/ பாரதி ம.வி (1C), மு/வற்றாப்பளை ம.வி (1C), மு/ தண்ணீரூற்று முஸ்லிம் வித்தியாலயம் (II)ஆகிய பாடசாலைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் இலங்கை அதிபர் தரத்தில் உள்ளவர்களாகவோ இலங்கை பட்டதாரி ஆசிரியர்கள் தரம் 1 இல் உள்ளவர்களாகவோ இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிப்பவர்களில் தகுதியானவர்கள் நேர்முக பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு செய்யப் படவுள்ளனர்.

இவ்வெற்றிடங்களுக்கு வடக்கு மாகாணங்களில் உள்ள 12 கல்வி வலயங்களிலும் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னதாக வலயக் கல்வி அலுவலகம் முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-15)







இலங்கை வங்கியில் சிறுவர் பொன்னரும்பு கணக்கு வைத்திருக்கும் குழந்தைக்கான பிறந்தநாள் பரிசில் வழங்கும் நிகழ்வு இலங்கை வங்கியின் வவுனியா நகர் கிளையில் இடம்பெற்ற போது முகாமையாளர் மா.றோய் ஜெயக்குமார் மற்றும் உத்தியோகத்தர்கள் பரிசில் வழங்குவதையும் சிறுவர் கணக்கு தொடர்பாக விளக்கம் அளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# மழை பொழியாமையால் விவசாயிகள் கவலை

வன்னி பெருநிலப்பரப்பில் பல ஆயிரக் கணக்கான ஏக்கரில் நெல் மற்றும் உப உணவு பயிர்ச் செய்கைகளை மேற்கொண்ட விவசாயிகள் காலங்கடந்த நிலையிலும் இன்னமும் மழை பெய்யாமையால் மனவிரக்தியுடன் மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இதுதொடர்பாக தெரிய வருவது,

இறுதிப் போர் நடவடிக்கை காரணமாக அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக நலன்புரி முகாம்களில் தஞ்சமடைந்த பின்னர் 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டதில் இருந்து இன்றுவரை விவசாயிகளை இயற்கை ஏமாற்றி வருவதுடன் பெரும் அழிவுகளையும் கொடுத்து வருகிறது. இந்நிலையில் வங்கிகள் மற்றும் தனியாரிடமும் வட்டிக்கு பணம் பெற்று விவசாயம் செய்த பல விவசாயிகள் வாங்கிய கடனை அடைக்க முடியாது அவலப்படுகின்றனர். பலர் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வருவதையும் அறிய முடிகிறது.

இந்நிலையில் இம்முறை காலபோகச் செய்கையான நெல் மற்றும் உபதானிய பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட கிளி, முல்லை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் மழை பொய்த்தமையால் தாம் பயிர்செய்த பயிர்கள் வாடுவதை கண்டு கண்கலங்கி நிற்கின் றனர்.

முல்லை மாவட்டத்தில் உள்ள ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழான குளங்களின் கீழ் ஆயிரத்து 665 ஏக்கரிலும் மானாவாரி முறையில் 760 ஏக்கரிலும் நெற் பயிர் செய்துள்ளார்கள். 680 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கையும் இதுவரை மேற்கொண்டுள்ளனர்.

இதே போன்று பாண்டியன்குளம் கமநல சேவைநிலையத்தின் கீழான குளங்களின் கீழ் 5 ஆயிரத்து 375 ஏக்கர் நெற்செய்கை மேற்கொண்டுள்ள நிலையில் இதுவரை 15 வீத மானவர்கள் நெல்விதைப்பினை முடித்துள்ளனர்.

மானாவாரி நெற்செய்கையாக 192 ஏக்கரும் உபஉணவுச் செய்கையாக ஆயிரத்து 70 ஏக்கரிலும் இதுவரை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழான குளங்களின் கீழ் நெற்செய்கை 3 ஆயிரத்து 250 ஏக்கரும் மானாவாரியாக 250 ஏக்கரும் இதுவரை பயிர் செய்யப்பட்ட நிலையில் உபஉணவு பயிர்ச் செய்கையில் துணுக்காய் ஐயங்கன்குளம் பகுதியில் 150 ஏக்கரிலும் யோகபுரம் பகுதிகளில் 497 ஏக்கரிலுமாக மொத்தம் 647 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றைவிட பெருமளவான விவசாயிகள் உப உணவுப் பயிர் செய்கைக்காக கமநல சேவை நிலையங்கள் மூலமும் தனிப்பட்ட முறையிலும் பெற்றுக்கொண்ட விதை தானியங்களை மழை வீழ்ச்சி இல்லாமையால் பல்பொருள் வாணிப நிலையங்களில் குறைந்த விலைகளில் விற் பனை செய்வதை காணமுடிகின்றது.

இயற்கை இம்முறை ஏமாற்றுமாயின் வன்னி பெரு நிலப்பரப்பில் பட்டினிச் சாவுகளும் கடன் சுமையால் ஏற்படும் தற்கொலை முயற்சிகளையும் தடுப்பதற்கும் உதவுவதற்கும் எவரும் இல்லாத நிலையில் மக்கள் வாழ்க்கை சிதறிப் போகும் நிலை ஏற்படலாம் என சமூக ஆர்வலர்களும் மக்களும் கவலை வெளியிட்டுள்ளனர். (ம-15)




## கலந்துரையாடல்

புதுமுறிப்பு குளத்தின் கீழ் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் சிவநகர் விவசாயிகளின் நலன் கருதி வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு வயல் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

பலகாலமாக அபிவிருத்தியை எதிர்நோக்கியிருந்த இந்த விவசாயிகளின் நன்மைகருதி நடைபெறவுள்ள இந்த கலந்துரையாடலில் நீர்ப்பாசன பொறியியலாளர். இப்பகுதி பெரும்பாக உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர்.

எனவே அனைத்து விவசாயிகளையும் தவறாது கலந்முகொள்ளுமாறு கமக்கார அமைப்பின் தலைவர் அறிவித்துள்ளார். (ம-254)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# சமுர்த்தி பயனாளிக்கு சமூக பாதுகாப்பு நிதி வழங்கப்பட்டது



(குருமன்காடு)

சமுர்த்தி பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு நிதி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் 27 ஆம் திகதி வவுனியா வடக்கு பிரதேச செயலக சமுர்த்தி அலுவலகத்தில் இடம் பெற்றது.

வவுனியா வடக்கு சமுர்த்தி முகாமையாளர் இ.இரட்னபாலன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமனால் சமூக பாதுகாப்பு நிதிக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

10 பேருக்கு வழங்கப்பட்ட இந் நிதியுதவி வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றமை, குழந்தை பிறப்பு மற்றும் மரணச்செலவுக்காகவும் வழங்கப்பட்டிருந்தது. (ம-250)

# தேவையற்ற காரணங்களுக்கென பணம் அறவிடப்படுவதாக முறைப்பாடு

(குருமன்காடு)

மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட சில பாடசாலைகளில் மாணவர்களிடம் தேவையற்ற காரணங்களுக்காக பணம் அறவீடு செய்யப்படுவதாக பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளதாகவும், குறித்த பண அறவீடு இடம்பெறும் பாடசாலைகள் அடையாளம் காணப்படும் படசத்தில், அச்சம்பவத்துடன் தொடர்புடைய அதிபர், ஆசிரியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எம். சியான் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட சில பாடசாலைகளில் பாடசாலை நிர்வாகம் பிரத்தியேக தேவைகளுக்காக மாணவர்களிடம் மாதாந்தம் பணத்தை அறவீடு செய்வதாக பெற்றோர் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைவாக அரச பாடசாலைகளில் மாணவர்களிடம் வசதிக்கட்டணம், பரீட்சைக்கட்டணம் ஆகியவற்றை மட்டுமே அறவிட முடியும். வேறு எந்த கட்டணங்களும் அறவிட முடியாது. ஆனால் சில பாடசாலைகளில் பழைய மாணவர் சங்கத்தினூடாகவும், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஊடாகவும் பணம் அறவிடப்படுவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக பாடசாலைக்கான மின் பட்டியலுக்கான கட்டணம், காவலாளிக்கான சம்பளம், பாடசாலைகளில் மாணவர்களுக்கு உணவு சமைத்துக்கொடுப்பவர்களுக்கான சம்பளம் போன்றவற்றுக்காக குறித்த சில பாடசாலைகளில் மாதாந்தம் 50 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை பணம் அறவீடு செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இவ்வாறான கட்டண அறவீடுகள் இடம்பெறும் பாடசாலைகள் அடையாளம் காணப்படும் பட்சத்தில் உரிய அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாடசாலை மாணவர்களிடம் பண அறவீடு செய்வதற்கு பழைய மாணவர் சங்கம் எவ்விதத்திலும் துணை போக முடியாது எனவும் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சியான் மேலும் தெரிவித்தார். (ம-250)

# கரைச்சியில் தொழிற்சந்தை

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரைக்கும் தொழிற் சந்தை நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இத்தொழிற சந்தையை மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

வேலையற்ற இளைஞர்,யுவதிகள் இத் தொழில் சந்தையில் பங்குபற்றி வேலை வாய்ப்புக்கான கோரிக்கையை முன்வைத்து நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள முடியும்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தனியார் துறையினர், NAITA, தொழில்பயிற்சி அதிகார சபையினர், கார்கில்ஸ் நிறுவனத்தினர் ஆகியோர் இதில் பங்குபற்றி தகுதியும் திறமையும் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க முன்வந்துள்ளனர்.

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் மாவட்ட அதிகாரி எஸ். கமலதாசன, அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரனின் வழிகாட்டலில் பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரனின் ஒருங்கிணைப்புடன்இச்செயல திட்டத்தை முன்னெடுத்துள்ளார். (ம-254)

முட்டாளுக்கு அமைதியாக இரு என்று சொல்வதைவிட உயர்ந்த அறிவுரை வேறு எதுவும் இல்லை. - பெனார்ட் ஷா -

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தன்னை மறந்து தன் நாமம் கெடவைத்த இ.க.நி.சே. (SLEAS) பரீட்சை

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை கடந்த 24ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

வடபகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆசிரியர்களும், அதிபர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

ஏனோ தெரியவில்லை இலங்கை கல்வி நிர்வாக சேவைகள் பரீட்சைக்காக வடபகுதியைச் சேர்ந்தவர்கள் கொழும்புக்குச் செல்லவேண்டிய பரிதாபம் தொடரவே செய்கின்றது.

பரவாயில்லை கொழும்பைப் பார்ப்பதுடன், கிளிநொச்சிவரை வந்துள்ள புகையிரத வண்டியில் பயணிப்பது என்ற ஒரு வகையான புளுகுத் தனம் பணச்செலவுக்கு ஆறுதல் கொடுத்தது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் என்ற உச்சமான பதவிவரை கொண்டு போகக்கூடிய இப்பரீட்சைக்குத் தோற்றுவது கூட, ஒரு வகையில் பெருமை என்று கருதப்பட்டதாலோ என்னவோ இந்த வருடம் வடபகுதியைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

அதற்காக புத்தகசாலைகளில் உள்ள நுண்ணறிவு, SLEAS பரீட்சைக்கான வழிகாட்டி என்ற அத்தனை நூல்களையும் அவர்கள் வாங்கிக் கொண்டனர்.

இதனால் புத்தகசாலைகள் தங்கள் வங்கி மேலதிகப் பற்றுக்களை ஓரளவுக்குச் சமாளித்துக் கொண்டதான தகவல்களும் உண்டு.

நுண்ணறிவு, கிரகித்தல், விடய ஆய்வு (Case study) என்ற மூன்று வினாத்தாள்களைக் கொண்ட இப்பரீட்சையில், நுண்ணறிவு என்ற வினாத்தாள் ஒரு மணித்தியாலத்தில் செய்து முடிக்க வேண்டிய 50 வினாக்களைக் கொண்டது.

போட்டிப் பரீட்சையில் முதலாவதாக நடத்தப்பட்ட நுண்ணறிவு வினாத்தாளைப் பார்த்ததும் ஆசிரியர்களுக்குத் தலை சுற்றியது.

மிகவும் கடுமையான - ஒரு நாள் முழுவதும் குந்தியிருந்தாலும் செய்து முடிக்க முடியாத அந்த வினாத்தாளால் ஆசிரியர்களுக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெடலாயிற்று. ஏனடா சாமி! கொழும்புக்கு வந்தோம் என்று நொந்து கொண்டவர்களும் ஏராளம்.

பாடசாலையில் ஏகப்பட்ட குழுக்கள், அறிக்கைகள், அத்தியாவசியக் கற்றல்கள், கணிப்பீடுகள், மதிப்பீடுகள், இடமாற்றத் தொந்தரவுகள், மாணவர்களின் வில்லங்கங்கள் என்ற பிறவிப் பெருங்கடல் என்னும் பாவத்திலிருந்து நீந்திக் கரைசேரலாம் என்று நினைத்து; SLEAS பரீட்சை எழுதினால், அது முதலாவது வினாத்தளிலேயே மாடன் பேய் அடித்து வுறித்த மாதிரி ஆசிரியர்களை அடித்து முறித்துவிட,

ஒரு மண்டபத்தில் பரீட்சை எழுதியவர்கள் தங்கள் மேற்பார்வையாளரிடம் ஐயா! அடுத்த வினாத்தாளுக்கு நாங்கள் வரமாட்டோம். போய் வருகின்றோம் நன்றி என்றார்களாம்.

அதனைக் கேட்ட மேற்பார்வையாளர் வடபகுதியிலிருந்து வந்த நீங்கள் மற்றைய வினாத்தாளையும் எழுதிவிட்டுப் போங்கள் என்று கெஞ்சிய சம்பவங்களும் நடந்ததுண்டு.

இதுதவிர, நுண்ணறிவு வினாத்தாளை பார்த்த வவுனியா ஆசிரியர் ஒருவர் மாரடைப்புக்காளாகி உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலைமையும், யாழ்ப்பாணத்து இளம் பெண் ஆசிரியர் ஒருவர் இந்தப் பரீட்சைக்காகக் கொழும்புக்கு அலைந்து சென்று குறித்த வினாத்தாளின் கொடுமையால், கடும் முட்டு வியாதிக்கு ஆளாகி உயிரிழந்த பரிதாபத்திலும் படுபாவி மகன் தயாரித்த நுண்ணறிவு வினாத்தாள் கணிசமாய் பங்காற்றியது.

எதுவாயினும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிய ஆசிரியர்களின் பேசுபடுபொருள் நுண்ணறிவாகவே இருந்தது. உறக்கத்திலும் ஓடும் வண்டியிலும் அதிகளவு நேரம் நினைக்க வைத்த, நுண்ணறிவு வினாத்தாளை தயாரித்தவர்தான் இப்போதைக்கு ஆசிரியர்களின் பயங்கரவாதி.

## சீனாவுடனான பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படுகிறது

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன இராணுவ உயரதிகாரிகளுக்கும் இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் நீண்ட காலமாக வலுவான உறவு நீடித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சீனாவுடன் இராணுவ உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள விரும்புவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## சான்றிதழ் வழங்கல்

(மல்லாவி)

வடக்கு மாகாணத்தின் கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் நடைபெற்ற மாகாண மட்ட ஆங்கிலதினப் போட்டியில் மொழி மற்றும் நாடகப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் டிசம்பர் மாதம் 4ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் யா/இராமநாதன் கல்லூரியில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் என். சோமஸ்கந்தராசா அறிவித்துள்ளார்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் ஆங்கிலம் மற்றும் பிறமொழிக்கல்விப் பிரிவு பணிப்பாளர் திருமதி மகேசி வீரசூரியா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-9-15)

## மானிப்பாய் இந்துவில் தொழில்நுட்ப பிரிவு

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரி யில் க.பொ.த.உயர்தர கற்கைக்கான தொழில்நுட்பப் பிரிவு ஆரம்பிக்கப் படவுள்ளது.

உலக வங்கியின் சுமார் 30 மில்லியன் நிதியுதவியூடா இச் செயற் றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, தற்போது கட்டடப்பணிகளும் இடம் பெற்று வருகின்றன.

இப் பிரிவில் கற்கவுள்ள மாணவர்களின் நலன் கருத்தி 30 மில் லியன் பெறுமதியான பொறியியல் உபகரணங்கள் கொள்வனவு செய் யப்படவுள்ள நிலையில், தேவை யான ஆசிரிய வளமும் பொறியியல் விரிவுரையாளர்கள் வளமும் பெறப் படவுள்ளன.

இப் பாடநெறியைத் தொடர்வதன் மூலம் நாடு முழுவதுமாக மூவாயி ரம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியையும் 7 ஆயிரத்து 500 மாணவர்கள் பல்கலைக்கழக கல்லூரி அனுமதிகளையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கள் உள்ள தாக எதிர்பார்க்கப்ப டுகிறது.

அத்துடன் இம்முறை மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தொழில்நுட்ப பிரிவுக்கு மாணவிகளையும் இணைத்துக் கொள்ள மத்திய கல்வி அமைச்சு உத்தேசித்துள்ளது.

எனவே ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ள இக்கற்கை நெறியைத் தெரிவு செய்ய விரும் பும் மாணவர்கள் எதிர்வரும் டிசெம் பர் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறும் மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள பாடசாலையையுடன் தொடர்பு கொள்ளுமாறும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் சிவனேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ-9-23)

## நீலங்களின் சமர் துடுப்பாட்டப்போட்டி

நீலங்களின் சமர் என வர்ணிக்கப்படும் கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கும் கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் துடுப்பாட்டப்போட்டி எதிர்வரும் 3, 4 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து டிசெம்பர் 5ஆம் திகதி 25 வயதுக்குட்படட இரு பாடசாலைகளின் பழைய மாணவர்களுக்கான கடினப் பந்து துடுப்பாட்டப் போட்டியும் 25 வயதுக்கு மேற்பட்ட இரு பாடசாலைகளின் பழைய மாணவர்களுக்கான மென்பந்து துடுப்பாட்டப்போட்டியும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கிளிநொச்சி மத்திய கல்லூரி பழைய மாணவர்களில் 25 வயதுக்குட்பட்டவர்கள் 077 9659675 என்ற இலக்கத்துடனும் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் 0776737535 என்ற இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் எம்.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (அ)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### தான தருமங்கள்

நீங்கள் எத்தகைய பொருளைத் தானம் செய்தபோதிலும் பெற்றோர், சுற்றத்தார், அநாதைகள், ஏழைகள், ஏழை வழிப்போக்கர்கள் ஆகியோருக்குக் கொடுங்கள்.

(திருக்குர் ஆன் 2:15)

இதில் முதலில் பெற்றோர் என்றிருப்பதைக் கவனியுங்கள். பெற்றோர்களைப் போலவே கவனிக்கப்பட வேண்டியவர்கள் அண்டை வீட்டார் ஆவர். அண்டை வீட்டில் உள்ளவர்களுக்கும் உதவிகள் செய்யுங்கள்.

(திருக்குர் ஆன் 4:36)

## வெள்ளி நற்சிந்தனை

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

15

அறிவுரை கூறுதல் என்பது ஒரு கடமையாகும். பெற்றோர் தமது குழந்தைகளுக்கு அறிவுரை கூறக் கடமைப்பட்டவர்கள். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவுரை சொல்லும் பணியை ஏற்றவர்கள். இவர்களது அறிவுரைகள் எல்லாம் இவ்வுலகிலே ஒரு நல்லவனாக, வல்லவனாக வாழ்வதற்கே உதவி செய்யும். மனிதப்பிறவியின் நோக்கம் உலக வாழ்க்கையைச் செம்மையாக நடத்துவது மட்டுமல்ல அதற்கும் அப்பால் இறைவன் பற்றிய நினைப்போடு வாழ்வு நடத்தும் ஒரு மனப்பக்குவத்தையும் மனிதன் பெறவேண்டும். இதனையே எல்லாச் சமயங்களும் பரப்புரை செய்கின்றன.

இறைவன் பற்றிய எண்ணத்தைப் பெற்றோர் சிறுவயதிலேயே குழந்தைகளுக்குப் பயிற்றலாம். அந்தப் பயிற்சி வீட்டிலோ அன்றேல் ஒரு கோயிலிலோ நடைபெறலாம். பெற்றோரிடம் இறைவன் பற்றிய எண்ணம் முழுமையாக இருப்பின் அதைக் குழந்தைக்குப் பயிற்றுவிப்பதும் எளிதாயிருக்கும். ஆசிரியர் கல்விப் பயற்சி நிலையில் இறைவன் பற்றிய கருத்துக்களை விளக்கிக் கூற முடியும். ஆனாலதைப் பயிற்சி நிலையிலே உணர்வது சிறிது கடினமே. எனவே இப்பயிற்சியைப் பெறுவதற்கு இளையோருக்கு ஏற்ற இடம் கோவிலே.

கோயில் இல்லாத ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி. ஏனெனில் கோயில்தான் இறைபற்றிய சிந்தனையை எல்லோருக்கும் ஊட்டக் கூடிய இடமாகும். முன்னர் சுட்டிக்காட்டப்பட்ட பெற்றோரது பயிற்சியையும் ஆசிரியரது விளக்கங்களையும் இளையோர் கோயிலிலே நேரடியாகக் கண்டுணர வாய்ப்புண்டு. இறையின் திருக்கோலப் புனைவையும் வழிபாட்டு நடைமுறைகளையும் காணும்போது மனம் வசப்படும். தனது பணி என்ன என்ற கேள்வியும் எழும்.

அப்பர் பாடல் ஒன்றிலே நெஞ்சு நிலைபேற்றையடைய வேண்டுமானால் நித்தலும் கோவிலுக்குச் செல்ல வேண்டுமெனக் கூறியுள்ளார். உண்மை, அன்பு, அழகு என்னும் மூன்று பண்புகளும் உறையும் இடம் கோயில். உண்மை வாழ்விலே ஒரு தெளிவை ஏற்படுத்தும். அன்பு எல்லோரையும் ஒன்றிணைக்கும். அழகு எல்லோரையும் கவரும். இம்மூன்றும் ஒன்றாய் இணைந்த இறைவனை வழிபடுவதால் நாமும் அவற்றைப் பெறலாம். மனித நிலையில் தெய்வீகம் என்ற ஒரு நிலைப்பாடும் தோன்றும்.

அப்பர் பெருமான் மனிதர்களைக் கோயில் வழிபாடு செய்ய அழைக்கும் பதிகமொன்று பாடியுள்ளார். நீங்கள் கனிதந்தால் அதை விரும்பியுண்பீர்கள். ஆனால் ஈசன் எனும் கனி சாலச் சிறந்த கனி எனக்கூறுகிறார். இச்செய்தியை மனிதர்காள் இங்கே வம்மொன்று சொல்லுகேன் என மக்களை விளித்துக்கூறுகிறார்.

அப்பருடைய மனம் தொண்டுப் பணியால் இறைவழிபாடு செய்ய விரு

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

ம்பியது. தனக்கென அவர் எதையும் கேட்கவில்லை. ஆனால் மனிதரில் பலர் தமக்குத் தேவையானவற்றைப் பெறவே இறைவழிபாட்டில் ஈடுபடுகின்றனர். எனவே அவர்களுக்கு ஏதாவது பயனைக் காட்டவேண்டும். அதனால் ஈசனெனும் சுவையான கனி கிடைக்குமெனக் கூறுகிறார். குற்றமிலாதவர் செய்யும் வழிபாடு இறை என்னும் நிலையான இன்பத்தை நல்கும்.

**மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்**
**கனி தந்தாற் கனியுண்ணவும் வல்லிரே**
**புனிதன் பொற் கழலீச னென்னுங் கனி**
**இனிது சாலவுமே சற்றவர் கட்கே**

## பிரித்தானிய குடியேற்றவாசிகளின் சலுகைகள் கடமையாக்கப்படும்

### பிரதமர் டேவிட் கமரூன் தெரிவிப்பு



பிரித்தானியாவில் குடியேற்றவாசிகளுக்கான சலுகைகள் தொடர்பான விதிகள் கடுமையாக்கப்படவுள்ளதாக பிரித்தானியா பிரதமர் டேவிட் கமரூன் கூறியுள்ளார்.

வேலையற்றோருக்கான சலுகைக்கு தகுதியானவர்கள் தொடர்பான விதிமுறைகள கடுமையாக்கப்படவுள்ளதுடன், வீட்டுத் திட்டங்கள் தொடர்பான சலுகைகளும் குறைக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

எனினும் இந்த தீர்மானம் ஆவே சமான ஒன்றெனக் கூறியுள்ள ஐரோப்பிய ஆணையாளர் பிரித்தானியா ஒரு மோசமான நாடாக நோக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இடையில் சுதந்திரமாக நடமாடுவது தொடர்பான விதிமுறை குறித்தும் டேவிட் கமரூன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த உரிமை தேவையற்ற ஒன்றெனவும் பிரித்தானியப் பிரதமர சுட்டிக்காட்டியுள்ளார். (2)

## மூன்றாவது முறை ஜனாதிபதி பதவியை ஏற்கிறார் ஏஞ்சலா

ஜேர்மனியின் பிரதமராக ஏஞ்சலா மெர்க்கல் எதிர்வரும் டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி பதவியேற்கிறார். இவர் ஜேர்மனியின் மூன்றாவது முறையாக பிரதமராக தெரிவாகியுள்ளார்.

ஜேர்மனியில் கடந்த செப்டம்பர் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. ஆளுங்கட்சியான கிறிஸ்துவ ஜனநாயக யூனியன் (சிடியூ) 311 இடங்களைக் கைப்பற்றியது. இது 41.5 சதவிகிதம் ஆகும்.

ஆனால் ஆட்சியமைக்க 50 சதவிகித வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதால் மற்றைய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து ஆட்சியைக் கைப்பற்ற சிடியூ கட்சி முடிவு செய்தது.

இதையடுத்து சமூக ஜனநாயகக் கட்சியுடன் (எஸ்பிடி) பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

நாடு முழுவதும் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் குறைந்த பட்ச சம்பளத்தை உயர்த்துவது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை எஸ்பிடி கட்சி முன்வைத்தது.

இதற்கு சிடியூ கட்சி சம்மதம் தெரிவித்ததைத் தொடர்ந்து 5 வாரங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது.

இதற்கான உடன்படிக்கையில் கிறிஸ்துவ ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஏஞ்சலா மெர்க்கல் எஸ்பிடி தலைவர் சிக்மர் கபிரியல் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இதன்மூலம் வரும் டிசம்பர் மாதம் 17ஆம் திகதி ஐரோப்பாவின் மிகப் பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட ஜேர்மனியின் பிரதமராக மூன்றாவது முறையாக பதவியேற்கும் வாய்ப்பு மெர்கலுக்குக் கிடைக்கவுள்ளது.

ஆயினும் இதற்கு முன்னர் எஸ்பிடி கட்சியினர் நடத்தும் உட்கட்சி வாக்கெடுப்பில் அதன் உறுப்பினர்கள் இந்தக் கூட்டணிக்கு வாக்களித்து இதனை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. (2)

## அணுவாயுத ஒப்பந்தத்தை மீறி செயற்பட்டால் கடுமையான பொருளாதாரத்தடைகள் விதிக்கப்படும்

### அமெ. வெளி. அமைச்சர் ஜோன் கெர்ரி எச்சரிக்கை

**ஈரானின் அணு ஆயுதத்திட்டம் தொடர்பாக சமீபத்தில் நடைபெற்ற இடைக்கால ஒப்பந்தம் மீறப்பட்டால் அந்நாட்டின் மீது மேலும் கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர் கடந்த செவ்வாய்க்கிழமை வீடியோ பதிவு மூலம் அளித்த தகவலில் கூறியிருப்பதாவது,

இடைக்கால ஒப்பந்தம் அமுலில் இருக்கும் அடுத்த 6 மாத காலத்தில் ஈரானுக்கு எதிராக புதிய தடைகள் விதிப்பதற்காக அமெரிக்க நாடாளுமன்றம் வாக்கெடுப்பு எதையும் நடத்தக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறு செய்வது எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்றும அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானின் அணு ஆயுதத் திட்டம் தொடர்பான இறுதி ஒப்பந்தத்தை எட்டுவதற்காக நாம் உடனடியாக பணியாற்றவுள்ளோம். இந்த இறுதியான, விரிவான ஒப்பந்தத்தை உருவாக்குவதற்காக நமது பிரதிநிதிகளும் நிபுணர்களும் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தச் செல்வார்கள். இதன் மூலம், ஈரானின் அணு ஆயுத திட்டத்தை நாம் தாமதப்படுத்தவில்லை. மாறாக அதைத் தடுத்து நிறுத்துகிறோம் என்று அந்த வீடியோ பதிவில் ஜோன் கெர்ரி தெரிவித்துள்ளார்.

**ஈரான் ஜனாதிபதி பாராட்டு**

வல்லரசு நாடுகளுடன் ஈரான் செய்து கொண்டுள்ள இடைக்கால ஒப்பந்தத்தை அந்நாட்டு ஜனாதிபதி ஹசன் ரௌஹானி பாராட்டியுள்ளார்.

தனது அமைச்சரவை பதவியேற்று 100 தினங்கள் கடந்த நிலையில் அவர் ஈரான் அரசு தொலைக்காட்சியில் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியிருப்பதாவது,

யுரேனியத்தைச் செறிவூட்டுவதை ஈரான் தொடர்ந்து மேற்கொள்ளும். அணுசக்தித் திட்டம் தொடர்பாக இப்போது ஆக்கபூர்வமான முதல் நடவடிக்கை (இடைக்கால ஒப்பந்தம்) எடுக்கப்பட்டுள்ளது. இறுதி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டியுள்ளதுஎன்று ரௌஹானி குறிப்பிட்டுள்ளார்.

**ஈரான்-பாகிஸ்தான் எரிவாயுத் திட்டம்**

ஈரானில் இருந்து குழாய் வழியாக எரிவாயுவைப் பெறுவதற்கு பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது. எல்லை தாண்டிய இந்த எரிவாயு குழாய்த் திட்டம் குறித்த பேச்சுவார்த்தையை விரைவுபடுத்த ஈரானும் பாகிஸ்தானும் கடந்த செவ்வாய்க்கிழமை முடிவு செய்தன. இந்தத் திட்டத்துக்கு அமெரிக்கா முன்னதாகவே எதிர்ப்பு தெரிவித்திருந்தது.

இந்த எரிவாயு குழாய் கட்டுமானப் பணி தொடங்கப்படின் ஈரான் மீது மேலும் தடைகள் விதிக்கப்படும்.

அந்நாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை இந்தத் திட்டத்துக்கும் பொருந்தும் என்றும அமெரிக்கா எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

## பாகிஸ்தான் பிரதமருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

பாகிஸ்தானில் காணாமற்போன 35 பேரையும் உச்ச நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவேண்டும் அல்லது பிரதமர் நவாஸ்ஷெரீப்நேரில் ஆஜராகவேண்டும். இல்லையேல் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானில் காணாமற் போனவர்கள் பற்றி லாகூரில் உள்ள உச்ச நீதிமன்றக் கிளையில் பதிவான புகார்கள் மீது நேற்று முன்தினம் 3 பேர் கொண்ட நீதிபதிகள் குழு விசாரணைகளை நடத்தியது.

அப்போது காணாமற் போனவர்கள் உறவுத்துறையின் பாதுகாப்பில் தான் உள்ளனர் என்பது நிருபணமாகியுள்ளது. ஆனால் அவர்களுக்கு தீவிரவாதிகளுடன் தொடர்பு இருப்பதாகக்கூறி அவர்களை ஒப்படைக்க உளவுத்துறையினர் மறுக்கின்றனர். இது தொடர்பாக இந்த நீதிமன்றம் இராணுவச் செயலாளருக்கு முன்னதாகவே அழைப்பாணை அனுப்பியுள்ளது என்று நீதிபதிகள் கூறினர்.

அதற்கு இராணுவச் செயலாளர் உடல் நலக்குறைவு காரணமாக ஓய்வில் இருப்பதால் அங்கு வரமுடியவில்லை என்று கூடுதல் அரசு வழக்குரைஞர் பதிலளித்தார். உடனே இராணுவ அமைச்சர் யார்? என்று நீதிபதிகள் கேட்டதற்கு பிரதமரிடம்தான் அந்தப்பொறுப்பு உள்ளது என வழக்குரைஞர் கூறினார்.

வழக்கின் விசாரணையை ஒத்திவைக்க நீதிபதிகள் 35 பேரையும் நீதிமன்றத்தில் அஜர்படுத்தவேண்டும் அல்லது இராணுவ அமைச்சரான பிரதமர் நவாஷ் ஷெரீப் நேரில் ஆஜராக வேண்டும். இல்லையேல் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் உத்தரவிட்டனர். (2)

## தனிப்பட்ட சுதந்திரத்திற்கான உரிமை தீர்மானம் ஐ.நா.சபையில் நிறைவேற்றம்

(நியூயோர்க்)

தனிப்பட்ட சுதந்திரத்திற்கான உரிமை குறித்த தீர்மானத்தை ஐ.நா.பொதுச் சபையின் உரிமைகள் குழுவில் நிறைவேற்ற வேண்டுமென ஜேர்மனியும் பிரேசிலும் வலியுறுத்தியுள்ளன.

ஜேர்மனி மற்றும் பிரேசில் வலியுறுத்தியதன் பேரில், தனிப்பட்ட சுதந்திரத்துக்கான உரிமை எனும் குறித்த தீர்மானத்தை ஐ.நா. பொதுசபையின் உரிமைகள் குழு கடந்த செவ்வாய்க்கிழமை நிறைவேற்றியது.

எந்த ஒரு நாட்டின் பெயரும் குறிப்பிடப்படாத இந்தத் தீர்மானத்தில், அரசு மற்றும் நிறுவனங்களின் கணகாணிப்பு நடவடிக்கைகள் மற்றும் தகவல்களில் தலையீடு செய்வது போன்றவை அத்துமீறிய செயல் அல்லது மனித உரிமைகளை மீறுவதாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. இதனைத தொடர்ந்து தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

முன்னதாக, தீர்மானத்தில் வெளிநாடுகளை வேவு பார்ப்பது உரிமை மீறல் என்ற வாசகத்தில் இருந்த கடுமையை அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளான அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து ஆகியவை நீர்த்துப் போகச் செய்தன.. அதன் பின்னர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த கட்டமாக, ஐ.நா. பொதுச் சபையில் உள்ள 193 உறுப்பு நாடுகளிடமும் இந்தத் தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்தியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இலட்சக்கணக்கானோர் பறறிய தகவல்களை அமெரிக்கா இரகசியமாகச் சேகரித்ததை அந்நாட்டு உளவு அமைப்பைச் சேர்ந்த முன்னாள் ஊழியர் எட்வர்டு ஸ்னோடென் அம்பலப்படுத்தியுள்ளனர்.

ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கல் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களின் தொலைபேசிகளையும் அமெரிக்க உளவு அமைப்புகள் ஒட்டுக் கேட்டதும் அம்பலமானது. இது அந்த நாடுகளிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையிலே, தனிப்பட்ட சுதந்திரத்துக்கான உரிமை குறித்த தீர்மானத்தை ஐ.நா. பொதுச் சபையின்உரிமைகள்குழுவில்நிறைவேற்ற வேண்டும் என்று ஜெர்மனியும், பிரேசிலும் வலியுறுத்தின. அதன்படி, உரிமைகள் குழுவில் இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டது. (2)

## நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றி பெற்றார் யிங்க்லக்

தாய்லாந்து நாட்டின் பிரதமர் யிங்க்லக் ஷினவத்ரா பதவி விலக வேண்டும் என்று கூறி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் நேற்றையதினம் ஐந்தாவது நாளகவும் நடைபெற்றது.

இதனையடுத்து யிங்க்லக்கின் அரசு மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நேற்று அந்நாட்டின் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. தனது கட்சி மற்றும் அதன் கூட்டணி கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்களைக்கொண்டுள்ள பாராளுமன்றத்தில் யிங்க்லக் எளிதாக வெற்றி பெற்றார். இவருக்கு ஆதரவாக 297 வாக்குகளும், எதிராக 134 வாக்குகளும் விழுந்தன. இரண்டரை வருடங்களுக்கு முன்னால் தன்னுடைய ஆதரவு வாக்குகள் மூலம் எளிதாக ஆட்சியைப் பிடித்த யிங்க்லக் தற்போது தனது ஆட்சியைத தக்க வைத்துக் கொண்டுள்ளார். வன்முறையைத் தடுக்க விரும்பும் யிங்க்லக் எதிர்க்கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளார்.

தாய்லாந்து சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம் என்பதால் அங்கு எப்போதுமே வெளிநாட்டவர்களின் கூட்டம் அதிகரித்துக் காணப்படும். எனவே, இந்தியா உள்ளிட்ட அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா, இத்தாலி, ஜப்பான், தென் கொரியா, பிரேசில் போன்ற 20க்கும் மேற்பட்ட நாடுகள் தங்கள் நாடுகளிலிருந்து தாய்லாந்திற்கு சுற்றுலா சென்றுள்ளவர்களைப் பாதுகாப்பாக இருக்கும்படி நேற்று எச்சரித்துள்ளன.

இந்திய தூதரகம் அங்குள்ள இந்திய சுற்றுலாப்பயணிகளையும் வழக்கமான பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது. (2)

# தெ.ஆபிரிக்காவை வீழ்த்தி தொடரை வென்றது பாகிஸ்தான்



பாகிஸ்தான் அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 2-வது போட்டியில் பாகிஸ்தான் அணி ஒரு ஓட்டத்தால் திரில் வெற்றி பெற்றது. இதன்படி, ஒரு போட்டி மீதமாகவிருக்கும் நிலையில் தொடரை பாகிஸதான் அணி கைப்பற்றியுள்ளது.

மழை காரணமாக 45 ஓவர்கள் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டு போர்ட் எலிசபெத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 45 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது.

2 ஓட்டங்களுக்கு முதலாவது விக்கெட்டையும், 22 ஓட்டங்களுக்கு 2-வது விக்கெட்டையும் இழந்த அவ்வணி சார்பாக, 3-வது விக்கெட்டுக்காக 124 ஓட்டங்கள் பகிரப்பட்டன.

தொடர்ந்து வந்த வீரர்களும் சிறப்பாக ஆட, அவ்வணி 262 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக அஹமட் ஷெஷாத் 112 பந்துகளில் 102 ஓட்டங்களையும், உமர் அக்மல் 30 பந்துகளில் 42 ஓட்டங்களையும், சொஹைப் மசூத் 59 பந்துகளில் 42 ஓட்டங்களையும், பிலாவல் பற்றி 15 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக டேல் ஸ்ரெய்ன் 9 ஓவர்களில் 39 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், றியன் மக்லரன், இம்ரான் தாஹிர் இருவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

263 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 45 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 261 ஓட்டங்களைப் பெற்று ஒரு ஓட்டத்தால் தோல்வியடைந்தது.


9 ஓட்டங்களுக்கு முதலாவது விக்கெட்டை இழந்த அவ்வணி, இரண்டாவது விக்கெட்டுக்காக 87 ஓட்டங்களைப் பகிர்ந்தது. அதன் பின்னர் 4-வது விக்கெட்டுக்காக 110 ஓட்டங்களைப் பகிர்ந்ததோடு, இறுதி 12 பந்துகளில் 11 ஓட்டங்கள் வெற்றிபெறத் தேவைப்பட்டன. 44-வது ஓவரில் 2 ஓட்டங்கள் மாத்திரம் பெறப்பட, வெற்றிபெறுவதற்கு இறுதி ஓவரில் 9 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஆனால் 7 ஓட்டங்கள் மாத்திரமே பெறப்பட்டன.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஹசிம் அம்லா 131 பந்துகளில் 98 ஓட்டங்களையும், ஏபி.டி.வில்லியர்ஸ் 45 பந்துகளில் 74 ஓட்டங்களையும், குயின்ரன் டீ ஹொக் 52 பந்துகளில் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக யுனைட் கான் 42 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஷகிட் அப்ரிடி 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சயீட் அஜ்மல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக அஹமட் ஷெஷாத் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நாளை சென்சூரியனில் ஆரம்பமாகிறது.




## 'இலங்கை...

அல்லது மூடி மறைக்கும் முயற்சியாக இருக்குமா என்பதையெல்லாம் பார்த்துத்தான் ஒரு கருத்தைத் தெரிவிக்க இயலும் என்றார்.

போரின் போது வன்னியில் சிக்கியிருந்த சிவிலியன்களின் எண்ணிக்கையை அரசு முதலில் மிகவும் குறைத்தே காட்டிவந்தது. சுமார் 30,000 பேர்தான் அங்கே சிக்கியிருக்கிறார்கள் என்றே கூறிவந்தது. ஆனால் போரின் முடிவில் அப்பகுதியிலிருந்து சுமார் மூன்று லட்சம் பேர்வரை வெளியேவந்தார்கள்.

போரில் சிவிலியன்கள் இருந்த இடங்கள் ஷெல்தாக்குதலுக்கு உள்ளாகின, மருத்துவமனைகள் கூட குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகின என்றெல்லாம் கூறப்படுகையில், போரில் இறந்த சிவிலியன்களின் எண்ணிக்கை பெரிதாகத்தான் இருக்கும். இதை ஐ.நா. மன்ற தலைமைச்செயலருக்கு ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவே சுட்டிக்காட்டியது என்றார் சம்பந்தன்.

எனவே, அரசு தொடங்கியிருக்கும் இந்த முயற்சியை இப்போது வரவேற்பது என்ற பேச்சுக்கே இடமில்லை, அந்த முயற்சியை நாங்கள் அவதானிப்போம் என்றார சம்பந்தன். (செ-11)

## விக்னேஸ்வரன்...

கருத்துத் தெரிவித்த முதலமைச்சர் வலிகாமம் வடக்கில் இருந்த மக்கள இடம்பெயர்ந்து நீண்ட காலமாக அகதி முகாமில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் அந்த மக்களுடைய வீடுகள், பாடசாலைகள், மற்றும் மதத்தலங்களை இராணுவத்தினர் இடித் தழிக்கின்றனர்.

இதனைப் பார்வையிடுவதற்கு சென்றிருந்த நிலையில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இருந்தாலே செல்ல முடியும் என இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

ஆனால் அங்குள்ள விடுதிகளுக்குள் தென்னிலங்கையில் இருந்து வருகின்றவர்கள் எந்த அனுமதியுமின்றியும் செல்ல முடியும். இதுதான் இங்குள்ள நிலைமையாக இருக்கின்றது.

இந்நிலையில் நாம் அங்கு செல்ல முடியாதுள்ளது என இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

இந்த மாகாண முதலமைச்சரே செல்ல முடியாதுள்ள நிலை இங்குதான் நடக்கின்றது.

இவ்வாறான நிலை வேறு எங்கும நடக்காது. தங்களுடைய காணிகளையும் வீடுகளையும் சென்று பார்க்க முடியாத தமிழர்களின் அவல நிலை தொடர்பாக சர்வதேச நாடுகளுடன் விரைவில் தீர்வு ஒன்று எட்டப்படும் என்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இராணுவத்தினர் காங்கேசன்துறை நடேஸ்வரா வித்தியாலயம் அப்பகுதியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கட்டிடங்கள் என்பவற்றை முற்றாக நேற்றைய தினம் இடித்தழித்துள்ளனர். முதலமைச்சருடன் வலி வடக்கு பிரதேச சபை துணை தவிசாளரும் வலி வடக்கு மீள்குடியேற்ற தலைவருமான எஸ்.ரஜீவன் உடன் சென்றிருந்தார். (செ-4,6)

# போரினால் துவண்ட இளைஞர்கள் முன்னேற்றத்தை காண வேண்டும்

## வர்ண இரவு நிகழ்வில் முதல்வர் உரை

(யாழ்ப்பாணம்)

எமது இளைஞர் சமுதாயம் போரினால் பாதிக்கப்பட்டு பலர் கடந்தகாலத்தில் போர்த்துறைப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். இனியும் அப்பேறபட்ட ஒரு நிலை நீடிக்கலாகாது என வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று மாலை 5.30 மணியளவில் யாழ்ப்பாணம் கோப்பாய் கல்வியியற்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற 4 ஆவது வர்ண இரவு - 2013 நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது இளைஞர் சமுதாயம் போரினால் பாதிக்கப்பட்டு பலர் போர்த்துறைப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தனர் எனினும் விளையாட்டுத் துறையில் தேசிய சர்வதேச மட்டத்தில் பிரகாசிக்கச் சந்தர்ப்பங்கள் குறைவாகவே இருந்து வந்துள்ளன.

இனியும் அப்பேர்ப்பட்ட ஒரு நிலை நீடிக்கலாகாது மத்திய அரசாங்கம் தன்னால் ஆன உதவிகளையும் ஊக்குவிப்புக்களையும் தந்துதவ முன்வந்திருக்கும் நிலையில் வடக்கு மாகாண சபையின் ஆதிக்கத்தின் கீழான எமது மாணவச் சமுதாயம அதனை ஏற்று முன்னேற வழி வகைகளை தேடிக்கொள்ள முன்வரவேண்டும்.

அரசியல் எம்மை இது காறும் பிரிவுபடுத்தி வைத்திருந்தது இன்றைய எமது கல்வி அமைச்சர் உயர் அரச அலுவலராக இருந்து தற்போது மக்களின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் இருதரபபாரும் அவரின் வழிநடத்தலின் கீழ் எமது மாணவ சமுதாயத்தை முன்னேற்றிச் செல்ல எமக்கொரு சந்தர்ப்பம் உதித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# சிலாபத்தி...

தென்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது,

நீல நிறத்திலான ஒளியொன்று தென்பட்டதாக பிரதேச மக்களும் தெரிவித்துள்ளனர்.

எதிலிருந்து இந்த ஒளி தோன்றியது என்பதனை பொலிஸாரினாலும் கண்டறிய முடியவில்லை.

இந்த ஒளியை பார்வையிட பிரதேசத்தைச் சேர்ந்த பலர் ஒன்று கூடியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)


## காணி விற்பனைக்கு

பூநகரி பரமன்கிராய் A32 வீதியில் 14 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. ஒரு ஏக்கர் 275, 000 விகிதம் முழுமையாகவோ பகுதியாகவோ விற்கப்படும்.

உறுதி / படம் யாவும் மிகத் தெளிவாக உள்ளது.

தொடர்புகளுக்கு :
0779689043, 0770530576


# இலங்கை...

இந்த மாத முற்பகுதியில் கொழும்பில் நடத்தவிருந்த மாநாடு ஒன்றில் கலந்து கொள்ள விசா அனுமதி கோரியிருந்த சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமை நிறுவனத்தின் மூன்று உறுப்பினர்களுக்கு இலங்கை அரசாங்கம் விசா வழங்குவதை நிராகரித்தது.

கொழும்பில் நடந்த பொது நலவாய நாடுகளின் மாநாட்டை இதற்கான காரணமாக இலங்கை அரசாங்கம் தெரிவித்திருந்தது.

விசா நிராகரிக்கப்பட்டவர்களில் ஒருவரான மனித உரிமை நிறுவனத்தின் உறுப்பினரும் ஐ.நாவின் விசேட அறிக்கையாளருமான கெப்ரியலா கானுல், நீதித்துறை சார்ந்தவர்களுக்கு எதிரான அரசாங்கத்தின் பதிலடி நடவடிக்கைகள் தொடர்பிலும் பிராந்திய மனித உரிமை வழிமுறைகள் குறித்தும் கடும் கவலை வெளியிட்டிருந்தார்.

நீதித்துறை மற்றும் நீதித்துறை தொழில்சார் நபர்கள் மீதான பதிலடிகள் நிறுவன மற்றும் செயல்பாட்டு சுதந்திரம் மீதான தாக்குதல் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச அறங்கூறுநர் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் சர்வதேச நாடுகளை சேர்ந்த நீதியாளர்கள் மற்றும் சிரேஷ்ட நீதிபதிகள் 56 பேர் இணைந்து கையெழுத் திட்ட கடிதம் ஒன்றில் சர்வதேச தரங்களை இலங்கை அரசாங்கம் அலட்சியம் செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் நீதிபதிகளின் பதவி நீக்கம் தொடர்பாகவும் அந்தக் கடிதத்தில கவலை வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இலங்கையின் நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பாக அவுஸ்திரேலிய அரசாங்கம், இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்த வேண்டும் என மைக்கல் கோல்பிரன் அழைப்பு விடுத்துள்ளார். (செ-11)

# சிறிதரன்...

லைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் புகழ்ந்து உரையாற்றியமை வரை சர்வதேசத்தின் திட்டப்படியே காய் நகர்த்தப்படுகின்றன.

சிங்களவர்களின் உரிமைகளுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் மீண்டும் ஒரு முறை போராட வேண்டிய சூழ் நிலை உருவாகியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# சிறிதரன் எம்.பியின்...

கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் அறிக்கை பற்றி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கேட்டபோது, 21ஆம் திகதி செப்டெம்பர் மாதம் நடந்த மாகாணசபைத்தேர்தல் தொடர்பாக கட்சி வெளியிட்ட விஞ்ஞாபனத்தில் தேசியப் பிரச்சினை தொடர்பான கட்சியின் நிலைப்பாடு தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளதென கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறினார்.

"பிரபாகரனின் பிறந்ததினமான நவம்பர் மாதம் 26 இல் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் உணர்ச்சி வசப்பட்டிருக்கலாம். அதனால்தான் அவர் ஓர் உணர்ச்சிகரமான அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். ஆனால நாம் இந்தப் பாணியில் எமது தேர்தல் பிரசாரத்தை செய்யவில்லை.

சிறிதரன் கூட இவ்வகையில் பிரசாரம் செய்யவில்லை. எமக்கு முன்னரே தெரிந்திருந்தால் நாம் இதை அனுமதித்திருக்க மாட்டோம்" என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறினார்.

"இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு அல்ல. நாம் இதில் தெளிவாக உள்ளோம்" எனவும் அவர் கூறினார். (செ-11)


## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.


# என்னுரையை...

எழுப்பும் உரிமை கிடையாது" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

"நான் பாராளுமன்றில் என்ன பேசவேண்டும் என்பதனை கட்சியிடம் கேட்டு பேசவேண்டிய அவசியம் இல்லை. நான் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவன். அப்படி கட்சியிடம் கேட்டுத்தான் பேசவேண்டும் என்றால் நான் வாழ்க்கையில் எதனையும் பேச முடியாது."

"அந்த வகையில் எனது பாராளுமன்ற உரைகள் குறித்து பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தின் படி எதனை நீக்க வேண்டும் எதனை சேர்க்க வேண்டும் என்பதனை சபாநாயகரே தீர்மானிக்க முடியுமே தவிர வேறு எவரும் வெளியில் இருந்து விமர்சிக்கவோ கேள்வி கேட்கவோ முடியாது" என சிவஞானம் சிறதரன் தெரிவித்தார். (செ-11)


## IELTS தேவையே இல்லை
## நியுசிலாந்து, சைப்பிரஸ், UK

அடுத்த வருட அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நியுசிலாந்து மிக இலகுவாகச் செல்லலாம்
2 வருடத்தில் PR பெற அருகதை.
PR கிடைத்தால் ஆஸ்திரேலியா பறக்கலாம்.
பகுதி நேர வேலைவாய்ப்பும் உண்டு.
சைப்பிரஸ் - மலிவானது ஐரோப்பிய நாடு. பகுதி நேரமாக ஒரு இலட்சம் உழைக்கலாம்.
UK பட்டப்பின் படிப்பு

விண்ணப்ப முடிவு திகதி:
10-12-2013

(C-5591)

திசைகாட்டி பிறைவேற் லிமிட்



175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 9016, 021 568 9090

www.thisaivisa.com


# பாடசாலை...

கப்பட்டுள்ளன.

இதனை கரைத்து குளிர்பானம் போல் அருந்திய மாணவர்களிடம் தலைச்சுற்று, புத்துணர்வு. வழமைக்கு மாறான செயற்பாடுகள் அவதானிக்கப்பட்டதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதி சிவகுமார் குறித்த மாத்திரைகளில் போதைப்பொருள் காணப்பட்டுள்ளதா என்பதனை ஆய்வு செய்து நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாநகர சபையின் சுகாதார குழுவிற்கு கட்டளையிட்டுள்ளார்.

குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விசாரணை முடியும் வரையில் வியாபார நிலையங்களை பூட்டி விடும் படியும் விசாரணைக்குட்படுத்தப்பட்ட இரு வியாபாரிகளையும் தலா ஐந்து இலட்சம் ரூபா சரீரப்பிணையிலும் செல்லுமாறு நீதவான் உத்தரவிட்டார். (செ-4)


## Bsc
## காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/Lல் முழுமைச் சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- விரிவுரைகள் ஆரம்பம் : 30-11-2013
- BA. B.Com, BBA ஆகிய பட்டநெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

குறிப்பு :

1. மேற்குறிப்பிட்ட பட்ட நெறிகளை நிறைவு செய்த பட்டதாரிகளுக்கு கடந்த காலங்களில் பட்டதாரி பயிலுனராக அரசாங்கத்தினால் உள்வாங்கப்பட்டதையும், பட்டப்படிப்பின் பின் டிப்ளோமா பட்டப்படிப்பின் படிப்பு ஆகியவற்றிற்கு பல்கலைக்கழகங்களினால் உள்வாங்கப்பட்டுள்ளதையும் அறியத்தருகின்றோம்.
2. இப்பட்ட நெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும். விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்.

யாழ். இணைப்பாளர்
காமராசர் பல்கலைக் கழகம்
தொலைபேசி இல. 021 222 8148

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-5590)



## புதிய கல்வியாண்டு - 2014

தரமான கல்வியுடன் ஆரம்பமாகின்றது!

30 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய மாணவர்களை இணைத்துக்கொள்கின்றது.

நிகரற்ற சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பின்கீழ்
முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில்

தமிழ்மொழி மூல வகுப்புக்கள்
தரம் 6 முதல் O/L வரை

English Medium Classes
Gr. 6 - O/L

வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவு
வெற்றித்தேர்வு வளவாளர்களுடன்
யாழ். முன்னணி ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில்
தரம் 1 முதல் தரம் 5 வரை

இவை அனைத்துக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன!
அனுமதிகளை இன்றுமுதல் பெற்றுக்கொள்ளலாம்.

சயன்ஸ் அக்கடமி
நல்லூர் – அரியாலை.



## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
அதி விசேட கட்டணச் சலுகை

வடமாகாணத்தின் வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்



- வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையில் 15 வருடங்களை கடந்து
- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- சகல நாடுகளுக்கும் மிக குறைந்த கட்டணத்தில்
- ஆகாய, கடல் மார்க்கமாக

இப்பொழுது யாழ் நகரத்தின் மத்தியில்

வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்

அருள்ஸ் பிறைவேட் லிமிட்டெட்
இல.10 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி) Tel : 021 222 3536

இணை நிறுவனம் : அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச்சந்தி, யாழ்ப்பாணம். Tel :021 222 6113


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.